Registered as a News Paper
பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 15 | வெள்ளி - 03 | 12 - 18 - மார்ச் - 2004



கருணா ஒரு புருட்டஸ்...
-கரிகாலன் செவ்வி

## வியக்கும் உலகமும்

## தளம்பாத தலைமையும்

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 12 .03.2004
மின் அஞ்சல : Ehatham@sltnet.lk

# அளிக்கப்பட வேண்டிய தார்மீகப்பலம்

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணி செய்யும் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள் மீதான சிங்கள இராணுவத்தின் மற்றுமொரு அடாவடித்தனம் 'கடந்த ஒன்பதாம் திகதி குறிகட்டுவான் துறையில் அரங்கேறியிருக்கின்றது.

வேலணையில் இருந்து குறிகட்டுவன் துறை ஊடாக நெடுந்தீவு நோக்கி அரசியல் பணி செய்யப் பயணித்த மூன்று பெண் போராளிகளை வழிமறித்த கடற்படையினர், அவர்கள் அணிந்திருந்த இடுப்புப் பட்டிகளை கழற்றுமாறு கூறி, அவ்வாறு செய்தால் மாத்திரமே மேற்கொண்டு பயணிக்க அனுமதிப்பதாகக் கூறி அடாவடித்தனத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க, கடந்த சில நாட்களின் முன்னர், யாழ். சாவகச்சேரிப் பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரச்சார வாகனம் ஒன்று தமது பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொழுது பொலிசாரினால் வீதியில் தடுத்து இடையில் நிறுத்தப்பட்டதுடன், அப்பகுதியில் மக்கள்மீது பொலிசார் மேற்கொண்ட தாக்குதலில் நான்கிற்கும் மேற்பட்டோர் காயங்களுக்கும் உள்ளாகினர்.

ஏப்பிரல் 02இல் இடம்பெறப்போகும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான காலம் நெருங்குகின்ற வேளையில், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில், குறிப்பாக யாழ்.குடாநாடு போன்ற செறிவாக மக்கள் வாழும் பகுதிகளில் தமிழ் மக்களின் அபிலாசைகளை பிரதிபலிப்பவர்களாக தேர்தலில் ஏகோபித்து நிற்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரது தேர்தல் பிரச்சாரங்களைக் குழப்புவதும் மக்களைத் தாக்குவதும், போராளிகளின் அரசியல்ப் பணி மீதான தடைகளை ஏற்படுத்துவதன் மூலம் சமூகத்தின் சமநிலையில் பதட்டத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தி மக்களை அச்சத்துள்ளும் - பீதி உணர்வு கொள்ளச் செய்யுமாறு நிர்ப்பந்திக்கும் தேர்தற் காலத்து சிங்களப் படையினரின் சிறப்பு அச்சுறுத்தலின்'' ஆரம்ப நடவடிக்கைகளாகவும் இவற்றை நோக்க இடமுண்டு.

நடக்கவிருக்கும் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் இதுவரை இலங்கையில் நடந்த தேர்தல்களிலும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை- பெரிதும் மாறுபட்டது. இதுவரை காலமும் தமக்காக அன்றிப் பிறர்க்காக வாக்களித்த தமிழ் மக்கள் இம்முறை தமக்காக, தமது ஏகோபித்த ஒருமைப்பாட்டிற்காக தமது அபிலாசைகளை பிரதிபலிப்பதற்காக வாக்களிக்கவுள்ளனர்.

1948இல் தீவு சுதந்திரம் பெற்ற காலம் முதல், நடைபெற்ற எல்லாத் தேர்தலிகளின் முடிவுகளும் பெரும்பாலும் பெரும்பான்மையினரின் விருப்புகளாகவும், சிங்களத்தின் இனவாதத்தை பிரதிபலிப்பதாகவும் இருந்த தேயன்றி தமிழ் மக்களின் எந்தவித அபிலாசைகளையும் பிரதிபலிப்பவையாக இருந்ததில்லை.

சிங்கள தேசத்தில் இடம்பெறும் எல்லாத் தேர்தல்களின் முடிவுகளும், சிங்களத்தின் நாடாளுமன்றமும் ஒருபோதுமே தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வை தந்ததுமில்லை, தரப்போவதுமில்லை.

ஆனால் தமிழ் மக்களின் இன்றைய நிலை வித்தியாசமானது.

கடந்த இரண்டு தசாப்பதங்களாக ஆயுதப் போராட்டம் மூலம் இராணுவ ரீதியில் போராடி சிங்கள அரசுடன் சமபல நிலையடைந்துவிட்ட விடுதலைப்புலிகள் இயக்கம், தனது இராணுவ வெற்றிகளின் சமபல நிலையை அடைந்தது மாத்திரமல்லாமல் ஈழத்தமிழரின் அரசியல் ஸ்தானத்தையும், சிங்கள தேசத்துடன் சமபல நிலையை எட்டி நிற்குமாறு வளர்த்துவிட்டுள்ளது. தனது தலைமைத்துவத்தாலும், ஏகோபித்த கொள்கையில் ஒன்றுதிரண்ட போராளிகளினதும், மக்களினதும் அர்ப்பணிப்பாலும் விடுதலைப்புலிகள் இயக்கம் இலங்கைத்தீவிலும், சர்வதேசத்திலும் தமிழர்களுக்கு பெற்றுக்கொடுத்த பலம் இது. இதுவே ஈழத்தமிழினத்தை இன்றைய வரலாற்றுக்கட்டத்தில் கொண்டு வந்து விட்டுள்ளது.

இந்நிலையில், இதுவரையில் ஈழத்தமிழர்களின் எல்லா நிமிர்வுகளினதும் பின்னாலும் உள்ள பலத்திற்கான சனநாயக அதிகாரத்தைப் பெற்றுக் கொடுக்கும் தேர்தலாகவே எதிர்வரும் தேர்தலின் தமிழ் மக்கள் முடிவு அமையப்போகின்றது.

சர்வதேச சமூகமும் இதையே எதிர்பார்த்திருக்கின்றது.

எல்லா வேறுபாடுகளும், தவறான கருத்துக்களையும் கடந்து ஈழத்தமிழ் மக்கள் வழங்கவிருக்கும் இத் தேர்தல் முடிவிலான ஆணைதான் தமிழினம் மீதான அனைத்து அடக்கு முறைகளையும் அறுத்தெறியப் போகும் மாபெரும் சக்திக்கான தார்மீக பலமாகவும் அமையப் போகின்றது.

## தூரனின் பார்வையில்

# நீங்களே... நீங்கள் மட்டுமே... காரணம் சங்கரியாரே!...

**10.03.2004** அன்று குடாநாட்டு பத்திரிகைகளில் இன்று எனக்கு நாளை உங்களுக்கு என்ற தாலமிடப்பட்ட தேர்தல் பிரசுர விளம்பரமொன்று ஆனந்தசங்கரியின் தலைமையில், தமிழ் மக்களின் ஒருமைப்பாட்டினை ஒருங்கிணைந்து வெளியிடவேண்டிய, வரலாற்று முக்கியத்துவமிக்க தேர்தல் ஒன்றில் அத்தகைய செயற்பாடொன்றை சிதறடிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட சுயேட்சைக்குழுவினரால் வெளியிடப்பட்டிருந்தது.

ஆனந்தசங்கரி அவர்களின் குரல் வெளிப்பாடாக அமைந்திருந்த அந்த விளம்பரத்தில் அவர் சில கேள்விகளை தமிழ் மக்களை நோக்கி எழுப்பியுள்ளதுடன் தன்னைப்பற்றிய சுயபிரகடனம் ஒன்றையும் பதிவு செய்துள்ளார் என்றே கூறவேண்டும்.

இந்தப் பிரசுரம் அவரை நோக்கி சில கேள்விகளையும், சந்தேகங்களையும் எழுப்பவே செய்கிறது.

முதலாவதாக 'நான் பிறந்து வளர்ந்த மண்ணில் இராணுவம்தான் எனக்கு பாதுகாப்பு தரவேண்டுமென்றால் அதை எண்ணி வெட்கித் தலைகுனியவேண்டியது யார்.? நானா?- என்றொரு கேள்வியை எழுப்பியுள்ளார்.

நிச்சயமாக நீங்கள்தான் சங்கரியாரோ.... உங்கள் மக்கள் என நீங்கள் நினைக்கும் அல்லது பெரிதாக பீற்றிக்கொள்ளும் சனங்களை உங்கள் சிறிலங்காப் பாதுகாப்பு அணியை உங்கள் புடைசூழ அழைத்துவந்து மிரளவைத்து அவமதிக்கலாமா? அல்லது அவர்களால் உங்களுக்கு ஆபத்து வருமென அஞ்சுகிறீர்களா? உங்கள் மக்களைவிட சிறிலங்கா இராணுவம் உங்களுக்குப் பாதுகாப்புத்தரும் என நினைக்கிறீர்களா? உங்கள் மக்களால் உங்களுக்கு ஆபத்துநேரும் அளவிற்கு அவர்களுக்கு நீங்கள் அநியாயம் செய்துள்ளதாக உங்களின் குற்ற உணர்வு உங்களை அச்சுறுத்துகிறதா? அப்படியானால் அதற்காக வெட்கித் தலைகுனியவேண்டியது நீங்களேதான். சங்கரியாரே...நீங்கள் மட்டுமே தான்.

இரண்டாவதாக "என் மண்ணில் சுதந்திரமாக ஒரு துண்டுப்பிரசுரம் விநியோகிக் முடியவில்லை ஒருசிலரின் அட்டகாசங்களுக்கு அஞ்சி அனைவரும் அடங்கிவாழவேண்டுமானால் அதைஎண்ணி தலைகுனியவேண்டியவர்கள் யார்?-நானா?- என்று கேட்டுள்ளார்.

தமிழின விரோத சக்திகளினதும், அந்நிய மேலாதிக்க சக்திகளினதும் அடிமைகளாகச் செயற்பட்டுக்கொண்டு சுதந்திரத்திற்காகவும், உரிமைக்காவும் போராடும் மக்களிடையே அவர்களின் ஒற்றுமை உணர்வைச் சிதைக்கும் வகையில் உங்களின் எஜமான்களின் அறிவுறுத்தல்களுக்கும், அழுத்தத்திற்கும் அடங்கி சுயேட்சைக்குழுவொன்றை அமைத்து பிரச்சாரம் செய்ய பிரசுரம் விநியோகிக்க முடியாமைக்கு மக்கள் போராளிகள் மீது, உங்கள் சுயநல நடவடிக்கைகள் மீது துரோகசெயற்பாடுகளின் மீது கொண்டுள்ள வெறுப்பும் கொதிப்புமே காரணமாகும். இதற்கும் உங்களின் தமிழ் தேச விரோதக்கொள்ளைகளும் நடவடிக்கைகளுமே காரணம் சங்கரியாரே.

இலட்சியப்போர் நடத்தும் போராளிகளுக்கு ஆதரவு வழங்குவது போல் பாசாங்கு பண்ணிக்கொண்டு இல்லாததையும் பொல்லாததையும் எழுதி மக்களை ஏமாற்றுபவர்களைப் பற்றி வெட்கித்தலை குனியவேண்டியவர் நானா? நீங்களா என்பதே அவரின் மூன்றாவது கேள்வி? நிச்சயமாக நீங்கள் தான் சங்கரியாரே..

நீங்கள்தான். இலட்சியப் போராளிகளைப்பற்றி உருகிப்பேசி பாசாங்கு செய்துகொண்டே சந்திரிகாவுக்குத் தலையும் இந்தியாவுக்கு வாலையும் காட்டி உங்களின் சுயநல அரசியலுக்கு உகந்த சூழலை உருவாக்க நீங்கள் போடும் வேஷமும் வேறுவேறு கோஷமும்தான். உங்களை மனித விலங்காக இனம்காண வைத்துள்ளது. இதற்காக நீங்கள்தான் வெட்கித் தலைகுனியவேண்டும். இலட்சியப் போராளிகள் என்று நீங்களே கூறும் அந்த மனிதர்களின் பின்னால் நின்று அவர்களின் இலட்சியத்திற்கு பலம்சேர்க்க வேண்டியவர்களில் ஒருவரான நீங்கள் அவர்களின் பலத்தைச் சிதைக்க எதிர்குழு அமைத்து தனியாகப் போட்டியிடுவது உங்களின் பாசாங்குத் தனத்தை பறைசாற்றவில்லையா சங்கரியாரே.. இதற்காக நீங்கள் வெட்கித் தலைகுனியுங்கள்.

கடைசியாக முளைத்து நாலு இலை விடுமுன்பு, தங்களுக்கே அவமானம் தேடும் வகையில் அடாவடித்தனம் செய்து வயதிலும் அனுபவத்திலும் மூத்தவர்களை அவமதிக்கும் வகையில் நடப்பவர்களை எண்ணி வெட்கித் தலை குனியவேண்டியவர்கள் யார்? நானா? என்று வினாவியுள்ளார்.

அதுவும் நீங்கள் தான் சங்கரியாரே.. நீங்கள்தான்... முளைத்து நாலு இலை விடாதவர்கள் என நீங்கள் குறியீட்டு ரீதியில் யாரைக் குறிப்பிடுகிறீர்கள் சங்கரியாரே...? தமிழுணர்வும், தமிழ்த்தேசப்பற்றும், மக்களுக்காகவும், மண்ணுக்காகவும் தம்முயிரையே அர்ப்பணித்துப் போராடும் போராளிகளைச் சொல்கிறீர்களா? அல்லது அவர்களின் பின்னால் அணிதிரளக் காத்து நிற்கும் இளைஞர்களைச் சொல்கிறீர்களா? அவர்களைப் பற்றி பேசும் யோக்கிதையை நீங்கள் இழந்து வெகுநாளாயிற்று. அடாவடித்தனம் என்று எதனைக் கூறுகிறீர்கள்? ஆயுதப்படை சூழ உங்கள் கட்சி அலுவலகத்தையே ஒரு உயர் பாதுகாப்பு வலயமாக்கி அப்பிராந்தியத்திற்குள் மக்கள் அச்சத்துடன் நடமாட வழிவகுத்தது தான் சுத்தமான அடாவடித்தனம் சங்கரியாரே. உங்களுக்கு வயதும் அனுபவமும் மிதவாத சந்தர்ப்பவாத அரசியிலில் மிக அதிகம்தான். ஆனால் அதற்கேற்ப அறிவோ, தொலை நோக்கு சிந்தனையோ இன விசுவாசமோ உங்களுக்குகிடையவே கிடையாது சங்கரியாரே... அப்படி இருந்திருந்தால் இந்தச் சுயேச்சை வேஷம்போட முனைந்திருக்க மாட்டீர்கள் சங்கரியாரே..!

நிற்க.

நான்... நான்... நான் எனக் குறிப்பிட்டு உங்களைப் பற்றி நீங்களே சில சுயவிளம்பரங்களையும் அந்த பிரசார பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளீர்கள்.. அது குறித்தும் சில வார்த்தைகள்... அதாவது நீங்கள் பிறந்த மண்ணில் சுதந்திரமாக நடமாட, கூட்டமாக நின்று உரையாட, களங்கமற்று சிரித்துவாழ ஆசை உங்களுக்கு ஆசையென்றால்.. அந்த சுதந்திரத்திற்காக- அதைப் பெற்றுத் தருவதற்காக போராடும் தலைமுறையின் பலத்தைப் பயன்படுத்த, இன ஒருமைப்பாட்டைப் பலப்படுத்த உங்கள் சுயேட்சை வேஷசத்தையும், குழுவையும் கலைத்துவிட்டு தமிழ்த் தேசியத்தின் சகல வலுமிக்க தலைமையை பலப்படுத்த முன்வர வேண்டும். அதனைச் செய்யும் துணிச்சலும், விருப்பும், நேர்மையும் ஆத்மார்த்தமான முறையில் உங்களுக்கு இருக்கிறதா? சுதந்திரக் காற்றை முற்று முழுதாக சுவாசிக்க விருப்பமுள்ள ஒருவர் தாங்கள் என்றால் அதே சுதந்திரத்திற்காக இலட்சியப் போர் நடத்தும் போராளிகளின் தலைமை விடுத்த தேசிய ஒருமைப்பாட்டுக்கான குரலுக்கு எதிராக சுயேட்ச்சை அணியொன்றை உருவாக்கி தமிழினத்தின் ஒருமித்த சக்தியை வெளிப்படுத்தவேண்டிய இந்தத் தேர்தலில்- அதனைச் சிதைக்க முனைந்திருக்கவே மாட்டீாகள்..

அன்று தொட்டு இன்றுவரை எமது இனத்தின் போராட்டங்களில் முன்னின்று செயற்பட்டவன் என்றும் எக்காலத்திலும் எமது இனத்தைக் காட்டிக்கொடுத்து வாழ்வதை கனவில் கூட நினைக்காதவன் என்றும் பட்டம் பதவிக்காய் அலைந்து திரியாதவன் என்றும் அப்பிரசுரத்தில் சுயபுராணம் பாடியுள்ளது உண்மையென்றால்-

எமது இனத்தின் விடுதலைப் போராட்டத்தில் இந்தத் தேர்தல் மிக முக்கியமான திருப்பு முனைக்கான ஒன்றென்பது தெரிந்திருந்தும் பல்லாயிரக் கணக்கிலான மக்களினதும் மாவீரர்களினதும் கனவைச் சிதைக்குமாப் போன்று தமிழினத்தின் ஒருமைப்பாட்டை ஓங்கி ஒலிக்கவேண்டிய நேரத்தில் தனிக்குழு அமைத்து அதைக் குழப்ப முயல்வதுதான் உங் களின் போராட்டப்பண்பா? சுயேட்ச்சை என்ற சொல்லே சுயநலத்தின் வெளிப்பாடல்லவா? பட்டம் பதவியில் ஆசையில்லையென்றால் தமிழ் மக்களின் எதிர்கால நன்மைக்காக, இனத் தின் ஒருமைப்பாட்டை வலியுறுத்த இத்தேர்த லில் இருந்து ஒதுங்கியிருக்கலாமே... அதன் மூலம் உங்களின் இனப்பற்றை வெளிப்படுத்தி இருக்கலாமே...!

வாய்மையும், கண்ணியமும், இலக்கணமாக உள்ள தலைவன் ஒருவனுக்கான பண்பு மேற்குறிப்பிடப்பட்டவையாகவே இருக்கும். ஆனால் அவை எதுவும் உங்களுக்கு கிடையவே கிடையாது. எந்தக் காலத்திலும் எந்தக் கட்சிக்கும் கொள்கைக்கும் தலைமைக்கும் விசுவாசமாக இருக்காத சந்தர்ப்பவாத- பதவியற்றுக்கொண்ட மிகச் சாதாரணமான மூன்றாந்தர அரசியல்வாதி என்பதையே உங்கள் அரசியல் வரலாறு உணர்த்தி நிற்கிறது.

இந்த நிலையில் உங்களைப்பற்றி நீங்களே சுயதம்பட்டம் அடித்து சுயபுகழ் புராணம் பாடி மக்களிடம் தேர்தல் பிச்சை கேட்க வந்துள்ளமையானது உங்களுக்கே வெட்கமாக இல்லையா? அவமானமாக இல்லையா? இனமானத்தை விற்று, சுயலாபத்தை அடைய நினைப்பவன் அவமானத்தைப் பற்றி கவலையே படமாட்டான். இந்த நிலைதான் உங்களுடையதும்.. அதிகாரபீடத்துக்கும், ஆதிக்க சக்திகளுக்கும் 'ஆமா' போட துணிந்துவிட்டால் அழுத்தங்களுக்கெல்லாம் அடிபணியத்தான் வேண்டும் அப்படித்தானே சங்கரியரே...!

# பிக்குக்களின் அரசியல்— புதிய மூன்றாவது அணியின் வருகை?

அசோகன் பௌத்த மதத்துக்குச் செய்த பெரிய தீமை பிக்குக்களை அரச சபைக்குக் கொண்டு வந்தது என்று விமர்சகர்கள் கூறுவதுண்டு.

ஒரு முறை ஒரு பிரபல இந்தியப் பத்திரிகையாளரிடம் மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவது சரியா என்று கேட்கப்பட்ட போது அவர் சொன்னார்... "அரசியல் ஒரு சாக்கடை அதில் எதுவேண்டுமானாலும் கலக்கலாம்" என்று.


இலங்கைத்தீவின் அரசியல் சாக்கடையில் பௌத்தம் எப்பொழுதோ கலந்து விட்டது. ஆனால், பிக்குக்கள் தேர்தலில் போட்டியிடுவது என்பது அதுவும் தொகையாகப் போட்டியிடுவது என்பது இதுதான் முதற் தடவை.

இதுவரையிலும் இலங்கைத் தீவின் அரசியலில் பிக்குக்களே சக்திமிக்க தீர்மானிக்கும் தரப்பினராக இருந்து வருகிறார்கள். ஆனால், அவர்கள் நேரடியாக அரசியல்வாதிகளாய் மாறியதில்லை. மாறாக அரசியலைப் பின்னாலிருந்து இயக்குவோராகவும், அரசியல்வாதிகளை உருவாக்குவோராகவும், அபிப்பிராயங்களை உருவாக்குவோராகவும் காணப்பட்டார்கள்.

விதிவிலக்காக, கடந்த பொதுத்தேர்தலின் போது ஒரு பிக்கு நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியிருந்தார். அது ஒரு உதிரிச் சம்பவம் மட்டுமே. ஆனால், இம்முறை பிக்குக்கள் தொகையாக ஒரு அணியாக குறிப்பாக மூன்றாவது தரப்பாகக் களத்தில் குதித்திருப்பது இதுவரை நடந்திராத ஒன்று.

இது மகாசங்கத்தின் மரபுரீதியிலான உயர்குழாத்தை மீறி மற்றொரு புதிய உயர்குழாம் மேலெழுவதைக் குறிப்பதாகப் பேராசிரியர் ·ஜெயதேவ உயாங்கொட சொல்கிறார்.

இந்தப் பிக்குக்களில் பெரும்பாலானவர்கள் கல்வி அறிவுடைய கவர்ச்சியான பேச்சாளர்கள் என்றும். குறிப்பிடத்தக்களவு ஜனவசியம் மிக்கவர்கள் என்றும் கூறப்படுகிறது.



இதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது இவர்களில் ஒருவரைத் தவிர மற்றெல்லாரும் நாட்டின் இருபிரதான பௌத்த பீடங்களான மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்களைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பது. இந்த இரு பீடங்களினதும் மகாநாயக்கர்கள் இவர்களுடைய முடிவைக் கடுமையாக விமர்சித்திருக்கிறார்கள் என்பதை இங்கு சுட்டிக் காட்டப்படவேண்டும்.

அது சமயம் இவர்கள் அமரபுர மற்றும் ராமணா பிரிவுகளிலிருந்து வந்திருக்கிறார்கள்.

இது காரணமாகவே பேராசிரியர் உயாங்கொட இந்தப் பிக்குக்களின் வருகையை மகாசங்கத்துள் தோன்றிய புதிய உயர்குழாம் என்று வர்ணிக்கிறார்.

அதாவது பாரம்பரிய மகாசங்கத் தலைமைகள் சாதி மற்றும் சமூக நிலைகளின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்பட்டுவரும் ஒரு சூழலில் ஒரு புதிய உயர்குழாம் சமூகத் தின் ஆதிக்கம் பெற்ற வகுப்புக்கு வெளியே உருவாகத்தொடங்கிவிட்டது.

இவர்களுடைய சமூக அடித்தளமாகக் காணப்படுவது சிங்கள வர்த்தகர்களும், நகர்ப்புற சிங்கள மத்தியதர வர்க்கமுமே என்று கூறப்படுகின்றது.

அண்மையில் காலமான சர்ச்சைக்குரிய வணக்கத்துக்குரிய சோமதேரரின் வாரிசுகள் என்று இவர்களைச் சொல்லமுடியும். நாட்டில் தற்சமயம் பெருகிவரும் மதமாற்றம் இவர்களுடைய உடனடியான சீற்றத்துக்குக் காரணமாயிருக்கிறது.

மதமாற்றத்துக்குக் காரணம் அரசியல் வாதிகளின் கையாலாகாத்தனம் மற்றும் செயலூக்கமற்ற நிலையே என்று கூறி அரசியல் வாதிகளை விமர்சித்துவரும் இவர்கள் கிறிஸ்தவர்களைக் கடுமையாக எதிர்த்தும் வருகிறார்கள்.

இவர்கள் கூறுவதுபோல மதமாற்றம் நாட்டில் பரவலாக நடந்துவருகிறதுதான். ஆனால், அதற்கான சமூக, பொருளாதார, கலாச்சாரக் காரணிகளைச் சரியாக அடையாளம் காணாமல் எடுத்த எடுப்பில் கிறிஸ்தவர்களை இவர்கள் தாக்கி வருகிறார்கள். இதில் சோமதேரரின் மரணமும் ஒரு தூண்டியாக அமைந்து விட்டது.

உண்மையில் மதமாற்றத்துக்கான அடிப்படைக் காரணம் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட மதங்களின் தோல்விதான். அவை சனங்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைக் கொடுக்கத் தவறியமைதான். நாடு யுத்தத்துள் சிக்கியபோது சனங்களுக்குண்டான பிரச்சினைகளுக்கு ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட மதங்களிடம் உடனடித் தீர்வு ஏதும் இருக்கவில்லை. ஆனால், மதம் மாற்றிகளிடம் ஏதோ ஒரு தீர்வு இருந்தது.

இலங்கைத்தீவின் எல்லாப் பிரச்சினைகளதும் தொடக்கம் யுத்தமே. சிறுவர் பாலியல் வியாபாரம் மற்றும் மத்திய கிழக்குக்குப் பெண்களை ஏற்றுமதி செய்வது இவற்றுடன்

நிலாந்தன்

பாதாள உலகக்குழுக்களின் அட்டகாசம் முதலான எல்லா சமூகப் பிறழ்வுகளும் யுத்தத்தின் பக்க விளைவுகளே.

யுத்தம் கொண்டுவந்த அனர்த்தங்களில் சிக்கித் தவித்த சாதாரண சனங்களுக்கு மீட்சிக்கு வழி ஏதும் இருக்கவில்லை. அரசியல் வாதிகளோ அல்லது ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டிருந்த மதங்களோ உடனடித் தீர்வைத் தரத் தவறின. இந்த வெற்றிடத்துள் மதம் மாற்றிகள் சுறுசுறுப்பாக இயங்கத்தொடங்கினர்.

சோமதேரரும் அரசியலுக்கு வந்திருக்கும் பிக்குக்களும் இதைச் சரியாக அடையாளம் காணத் தவறிவிட்டார்கள். இலங்கைத்தீவில் யுத்தம் உண்டாகக் காரணமே பௌத்தர்கள் புத்தபகவானைப் பின்பற்றத் தவறியமைதான். பிரச்சினைகளின் காரணமாக அவர்களே இருந்துகொண்டு பிக்குக்கள் பிரச்சினைக்குத் தீர்வு காணப்புறப்பட்டுவிட்டார்கள்.

பிக்குக்கள் அரசியலில் நேரடியாக ஈடுபடுவது புத்தசாசனத்தின் பாழடைவின் தொடக்கம் என்று மகாநாயக்கர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால், உண்மையில் ஏற்கனவே பாழடையத் தொடங்கிவிட்ட புத்தசாசனத்தின் நேரடி விளைவு இதுவென்பதே சரி.

கிடைக்கும் தகவல்களை வைத்துப் பார்த்தால் தென்னிலங்கை நகரங்களிலுள்ள படித்த, நடுத்தர வர்க்கம் தமது அபிமான பிக்குக்களின் அரசியல் பிரவேசத்தால் ஓரளவுக்கு அதிர்ந்துபோய்க் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. செல்வாக்குமிக்க பிக்குவாக இருப்பது வேறு. வெற்றிபெற்ற அரசியல் வாதியாக இருப்பது வேறு என்று அவர்கள் கருதுகிறார்களாம்.

எனவே வரும் தேர்தலில் இது பெரிய திருப்பங்கள் எதையும் ஏற்படுத்தாமல் போகலாம் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால், தென்னிலங்கையில் உள்ள மாற்றுமீடியா மையத்தைச் சேர்ந்த ஒரு பத்திரிகை ஆசிரியர் சொன்னார்... பிக்குக்களின் வருகை எதிர்காலத்தில் பெரிய விளைவுக்களைக் கொண்டுவர வல்லது என்று. பிக்குக்களைக் களத்தில் இறக்கியதன் மூலம் சிஹல உறுமய தனது நீண்ட கால அரசியல் இலக்கு ஒன்றை நோக்கி மிக ஆபத்தான முதலாவது அடிவைப்பைச் செய்திருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

எவ்வாறெனில்-இதுவரை காலமும் தென்னிலங்கை அரசியலில் மூன்றாவது சக்தியாகக் காணப்பட்டது ஜே.வி.பியே. ஆனால், அது அண்மைக் காலங்களில் எஸ்.எல்.எவ்.பி.யுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு ஞானஸ்தானம் பெற்றுவிட்டது. இப்பொழுது ஒரு வருங்காலக் கூட்டரசாங்கத்தின் பொறுப்பு மிக்க கூட்டாளி என்ற தோரணையுடன் ஜே.வி.பி. பல விசயங்களில் தன்னை அடக்கி வாசிக்கத் தொடங்கிவிட்டது.

இதற்கு இரு காரணங்களுண்டு. முதலாவது, கடந்த தசாப்தங்களில் இளைஞர்களாகக் காணப்பட்ட ஜே.வி.பி தலைவர்கள் இப்பொழுது நடுத்தர வயதுடைய மனுசர்களாகிவிட்டார்கள். எனவே வயதுக்குரிய அனுபவ முதிர்ச்சி என்பது நிலைமைகளைச் சுதாகரிக்க உதவுகிறது.

இரண்டாவது காரணம், முன்பு உதிரிகளாய் இருந்த போது எதையும் எதிர்ப்பதும் அதிதீவிரம் கதைப்பதுமே அரசியல் என்றிருந்தது. ஆனால், இப்பொழுது பெரிய கட்சி ஒன்றுடன் கூட்டுச் சேர்ந்த பின்பு வருங்காலத்தில் சில சமயம் ஆட்சி அதிகாரத்தைப் பகிர இருப்பவர்கள் என்றவகையில் பொறுப்புணர்ச்சியோடும், நிதானமாகவும் நடந்துகொள்ள வேண்டி இருக்கிறது. இதற்கு பல சமீபத்திய உதாரணங்களைக்காட்ட முடியும்.

புதிய கூட்டு உருவாகியதன் பின் ஜே.வி.பி தனது பொருளாதாரக் கொள்கை பற்றி விபரித்தபோது "பொட்டாற்டோ சிப்ஸ் வேண்டாம். மைக்ரோ சிப்ஸ் வேண்டும்" என்று கூறியது.

அண்மையில் கண்டியில் நடந்த ஒரு தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ஜே.வி.பி கூறியது, புலிகள் யுத்தத்தை விரும்பவில்லை ஆனால், ரணில் விக்கிரம சிங்கதான் யுத்தத்தைக் காட்டிப் பயமுறுத்தி சமாதானத்தின் காவலன் வேசம் போடுகிறார் என்று.

எனவே புதிய நாடாளுமன்றத்தில் தனது கூட்டுக்கிருக்கக் கூடிய வெற்றி வாய்ப்புக்களை குறித்த அதிகரித்த நம்பிக்கையோடு ஒரு வருங்கால ஆளுங்கட்சிக் கூட்டணியின் பொறுப்புமிக்க கூட்டாளியாகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் விதத்தில் ஜே.வி.பி அண்மைக் காலங்களில் தனது தீவிரத்தைக் குறைக்கத் தொடங்கிவிட்டது.

இத்தகைய ஒரு பின்னணியில் சிங்கள அதிதீவிரவாதம் மற்றும் மதத் தூய்மைவாதம் போன்றவற்றுக்கான தலைமைத்துவப் பரப்பில் ஒரு வெற்றிடம் விழத்தொடங்கியது.

இதைத் தருணமறிந்து ஹெல உறுமய நிரப்ப முன்வந்திருக்கிறது.

இதில் பிக்குகள் வெற்றிபெறாமல் போகக்கூடும். அல்லது சில ஆசனங்களையாவது வெல்லக்கூடும். எதுவாயினும் இனிவரும் காலங்களில் ஒரு மூன்றாவது அணியாக அவர்களே மேலெழப் போகிறார்கள். ஏற்கனவே பலமாக நிறுவனமயப்பட்டிருக்கும் அவர்கள் தீவிரவாதிகளுக்குத் தலைமை தாங்குவது அப்படியொன்றும் கஸ்ரமாயிராது.


இது வரும் தேர்தலில் உடனடியாகத் தமிழர்களைப் பாதிக்கப்போவதில்லை. பதிலாகச் சமாதானத்தின் எதிரிகளைத்தான் இது பலவீனப்படுத்தும். ஏனெனில் சமாதானத்தின் எதிரிகளுக்கே இது போட்டியாக வந்திருக்கிறது. எனவே அவர்களுடைய வாக்கு வங்கியைத்தான் இது உடைக்கும். இப்படிப் பார்த்தால் இது உடனடியாகத் தமிழர்களுக்கு நன்மை செய்யப்போகிறது.

ஆனால், நீண்டகாலப் போக்கில் இது, சமரசத்துக்கு வரத் தயாரில்லாத, நன்கு நிறுவனமயப்பட்ட ஒரு மூன்றாவது சக்தியின் எழுச்சியின் தொடக்கமாகக் காணப்படுகிறது. இதிலுள்ள ஆபத்தான அம்சம் இதுதான். அதாவது தென்னிலங்கை அரசியலில் மூன்றாவது அணியின் இடத்தை நிரப்பிவரும் சக்திகள் இன்னுமின்னும் தீவிரமானவைகளாக மாறிவருகின்றன என்பது.

★★★

# நறுக்கென...

## சந்திரிகாவை இனம் காட்டும் றொக்காவின் அறிக்கை....



இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றினை அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலம் காண்பதற்கான முயற்சியில் முக்கிய அம்சமான விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக அதிகாரசபை தொடர்பான திட்டவரைபு குறித்துப்பேச்சுக்கள் ஆரம்பமாக இருந்த வேளையிலேயே சனாதிபதி சந்திரிகா தனது செய்ற்பாடுகளால் அதற்கு பாதிப்பினை ஏற்படுத்தினார்."

இப்படிக் கூறியிருப்பவர் ஒரு சாதாரண உள்ளூர் அரசியல்வாதியோ, சனாதிபதிக்கு எதிரான கட்சியைச் சேர்ந்தவரோ அல்ல..... ஆசிய பிராந்தியத்திற்கான அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பிரதிச்செயலாளரான கிறிஸ்ரீனா றொக்காவே இப்படிக்கருத்தொன்றை வெளியிட்டுள்ளார்.

யார் சபை குழப்பிகள், சமாதானக்குழப்பிகள் என்பது இப்போது அமெரிக்க மேலாதிக்க சக்திக்குப் புரியத்தொடங்கியுள்ளது சந்தோஷமே... அதனை பகிரங்கமாகத் தெரிவிக்க முன்வந்திருப்பது அதைவிட மகிழ்ச்சி.

எதையும் சாதாரண மாடு சொன்னால் கேட்காது. மணிகட்டின மாடு சொன்னால் மட்டுமே கேட்கும். சர்வதேச வல்லாதிக்க சக்திகளுக்கு இப்போது இலங்கைப்பிரச்சினையில் சமாதானத்துக்கான யுத்தம் என்ற தத்துவத்தின் மூலநாயகியான நிறைவேற்று அதிகார சனாதிபதி சந்திரிகாவின் அந்தக்கால சமாதான தேவதை வேஷம் இப்போது வெளிப்படத் தொடங்கியிருக்கும்.

இதற்காக கிறிஸ்ரீனா றொக்காவுக்கு நன்றி!

இதே கிறிஸ்ரீனா றொக்காவை கடந்த சில நாட்களின் முன்னர் சந்திக்க மறுத்து தனது ஆணவ, அகங்கார, அதிகார வெறித்தனத்தை வெளிப்படுத்தி றொக்காவுக்கு தனது சுயரூபத்தை வெளிப்படுத்திய சந்திரிகாவுக்கு அதை விட சற்று அதிகமான நன்றிகள்...

றொக்கா அவர்கள் இதனை வெறும் வார்த்தைகளாக மட்டும் கூறவில்லை. அறிக்கையாகவே சமர்ப்பித்துள்ளார் என்பதே முக்கியத்துவமானவிடயம்.

எப்படியோ சிறிலங்காவில் இருப்பது அரசியல் ரீதியிலாக -பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கப்படவேண்டிய ஒருபிரச்சினையேயன்றி பயங்கரவாதப் பிரச்சினையல்ல என்பதையும் விடுதலைப்புலிகள் தமது மக்களுக்கு நியாயமான -அவர்களது அபிலாசைகளை திருப்தி செய்யகூடிய உறுதியான அரசியல் தீர்வொன்றை பெறுவதற்கான தீர்வொன்றை நடைமுறைப்படுத்த யோசனைகளை முன்வைக்க தயாராக உள்ள நிலையில் ஆர்வத்துடன் செயற்பட்டு வந்தவேளையிலேயே சந்திரிகா அதனைக் குழப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என்பதை உலகுக்கு அறிவித்த கிறிஸ்ரீனா றொக்கா தன்னை அவமதித்த சந்திரிகாவின் சர்வதிகாரப் புத்தியை சரியாகப்புரிந்து கொண்டுள்ளார் என்றே தோன்றுகின்றது...

சிங்களப் பேரினவாதத்தை அமெரிக்க வல்லாதிக்க சக்தி புரிந்துகொண்டது சந்தோஷமே!.

## சந்திரிகாவின் ஒப்புதல் வாக்குமூலம்



அடிக்கடி எதிராளிகளைத் திரட்டுவதாக நினைத்துக்கொண்டு தன்னைத்தானே அல்லது தம்மைத்தாமே விமர்சிப்பதில் சந்திரிகாவுக்கு நிகர் எவருமேயில்லை.

அரசியலில் ஊழல் பேர்வழிகள் அதிகரித்துவிட்டார்கள் என்பார் ஒரு நாள். அப்போது அவரது தலைமையிலே ஆட்சி நடந்து கொண்டிருக்கும்.

'கடந்த காலத்தில் ஆட்சியை தலைமை தாங்கி வழிநடத்தியவர்கள் செய்த தவறுகள் தான் நாட்டை இந்த அவலத்திற்குள் தள்ளியுள்ளது என்பார்.' அதற்கு அவரது தந்தையும் தாயும் அடங்கவே செய்வர்.

இப்படிப்பலவற்றைக் கூறமுடியும்.

கடைசியாக அண்மையில் அவர் தெரிவித்த கருத்து வித்தியாசமானது. 'அதாவது 1977ஆம் ஆண்டின் பின் ஏற்பட்ட இருண்டயுகம் காரணமாக திறமைசாலிகள் எவரும் அரசியலுக்கு வருவது கிடையாது. என்று அவர் தெரிவித்துள்ளமையானது பல்வேறு எண்ண அலைகளை ஏற்படுத்தவே செய்கிறது.

அவர் இதனை இன்னும் சற்று விளக்கமாகவே தெரிவித்திருக்கிறார் என்றும் கூற முடியும். அதாவது உண்மையான சேவை மனப்பான்மை படைத்தவர்களோ, மதிப்பிற்குரியவர்களோ கூட அரசியலுக்கு வருவதில்லை என்றும் கொள்ளையடிக்கும் கூட்டமும் பரீட்சைகளில் சித்தியடையாது எதுவும் செய்யமுடியாத நபர்கள் மட்டுமே இப்போது அரசியலுக்கு வருகின்றனர். என்றும் அவர் கூறியுள்ளார்.

நல்லது.


1977க்கு பின்னர் ஒரு இருண்டயுகம் ஏற்பட்டுள்ளது என்றுள்ளார். அந்த இருண்டயுகம் இன்னும் தொடரவே செய்கிறது. அந்த இருண்டயுகத்தில் தான் அவர் சனாதிபதியாக இருக்கிறார் என்பது மட்டுமல்ல அதேகாலகட்டத்தில் தான் அவரும் அரசியலுக்கு வந்தார் என்பதையும் மக்கள் அறிவர்.

ஆகவே அவரும் திறமைசாலியல்ல. என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். என்றே தோன்றுகிறது. அதுமட்டுமல்லாது அவரோடு அரசியலுக்கு வந்த அனைவருமே (லக்ஷ்மன் கதிர்காமர் உட்பட) திறமைசாலிகள் அல்ல என்பதையும் அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

அதுமட்டுமல்ல அவர்கள் கொள்ளைக்காரர்கள் என்பதையும் அவர் வெளிப்படையாகவே ஏற்றுக்கொண்டுள்ளார். அவர் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற ஊழல் மோசடிகள் உலகப்புகழ் பெற்றவை.

யுத்தத்தைக் காரணம் காட்டி பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான ஆயுதக்கொள்வனவை மேற்கொள்வது என்ற பெயரில் அவரும் அவரது பிரதிப்பாதுகாப்பு அமைச்சரான மாமன் அனுருத்தரத்வத்தையும் செய்த ஊழல் மோசடிகளைப்பற்றி விபரிக்க வேண்டிய அவசியமேயில்லை. அடுத்தது கல்வியறிவு இல்லாதவர்களே.... அதாவது பரீட்சைகளில் சித்தியடையாதவர்களே அரசியலுக்கு வந்துள்ளார்கள் என்று அவர் கூறுவதை வைத்துப்பார்க்கும் போது பிரான்ஸின் இவர் கற்ற கல்வி தொடர்பாக சண்டேலீடர் பத்திரிகை வெளியிட்ட தகவல்களும் சரியே என்று எண்ணத்தோன்றுகின்றது. என்ன சனாதிபதி அவர்களே நாம் சொல்வது சரிதானே...? தேர்தல் சமயத்தில் உண்மையை ஒப்புக்கொண்டதற்கு நன்றி.

## அரசியல் வாதிகளும் மதபீடாதிபதிகளும்



சில வேளைகளில் சிலபீடாதிபதிகள் ..... அதாவது மதபீடாதிபதிகள் அரசியல்வாதிகளைவிடவும் மோசமாக கருத்துக்களை வெளியிட்டு அசரவைப்பவர்களாக இருக்கின்றனர்.

அதுவும் பௌத்த பீடாதிபதிகள் அரசியல் பீடாதிபதிகளை ஆட்டிப்படைப்பவர்களாக மட்டுமல்ல, அரசியல் வாதிகளை விமர்சிப்பவர்களாகவும் மாறி அரசியல் கருத்துக்களை அள்ளி வீசியும் வருகின்றனர்.

அண்மையில் மல்வத்தை மகாநாயக்கர் சொல்லிய கருத்து இங்கே முக்கியமாக குறிப்பிடவேண்டிய ஒன்றாக உள்ளது.

அதாவது, 'பௌத்த அரசியல் வாதிகள் கையில் பிரித்நூலைக்கட்டியிருக்கிறார்களே யொழிய பௌத்தர்களுக்கு எதுவுமே செய்யவில்லை என வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

ஆனால் இந்த பௌத்த அரசியல் வாதிகள் அனைவருமே பௌத்த பீடாதிபதிகளின் ஆசிர்வாதத்தை பெற்றவர்கள்தான் என்பதை அவர் மறந்துவிட்டார் போலும்-

நாடாளுமன்றில் பிரதிநிதித்துவம் செய்யும் பெரும்பான்மையான கட்சி உறுப்பினர்கள் மேல் வர்க்கத்தினராக இருக்கின்ற நிலையில் இவர்களால் நாடு முன்னேற்றமடையும் என்பது சாத்தியமேயில்லை என்றும் அவர் கூறியுள்ளபோதிலும் பௌத்த சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களும் தேர்தலில் வெற்றிபெற வாழ்த்தும் ஆசியும் வழங்கத்தவறுவதேயில்லை.

அதுசரி தேர்தலில் பிக்குமார் போட்டியிடுகின்றனரே அவர்களை நிராகரிக்குமாறும், தேர்தலில் அவர்களை தோற்கடிக்குமாறும் மல்வத்தை பீடாதிபதி பகிரங்கமாகக் கூறவேண்டும். அப்படியானால் அவரை நம்பலாம்.

அதுசரி பிக்குமார்களை அரசியல் வாதிகளாக்கி அவர்களை தேர்தலில் தோல்வியுறவைத்து அவமானப்படுத்த யாழ்.மாவட்டத்தில் கொண்டுபோய் வேட்பாளர்களாக நிறுத்தியுள்ள ஜாதிகஹெல உறுமய கட்சியினரையும் மல்வத்த பீடாதிபதி பௌத்தர்களுக்கு எதுவுமே செய்யாமல் 'பிரித்' நூலை மட்டும் கட்டிக்கொண்டு திரிகின்றவர்கள் எனக்கூறுவாரா?

அப்படி சொல்வாரேயானால் அவரையும் ஜாதிகஹெல உறுமய க்காரர் பயங்கரவாதிகள் என்றே கூறுவர் என்ற அச்சம் அவருக்கு இருக்கும்

அதுசரி.

அண்மையில் ஜே.வி.பி.யினரும் பௌத்த பீடாதிபதிகளிடம் சென்று ஆசிபெற்றதாகக் கேள்வி. ஆனால் சிஹலஉறுமயவின் தலைவர்களில் ஒருவரான சம்பிக்கரணவக்க 645 பிக்குகளைக்கொலை செய்த ஜே.வி.பி. பௌத்த கட்சியா? எனக்கேள்வியெழுப்பியுள்ளார். நியாயமான கேள்விதான்.

வணக்கத்திற்குரிய பீடாதிபதி இதற்கு என்னதான் சொல்லப்போகின்றார்?

அதுசரி அரசபீடமும், மதபீடமும் அரசியல் பீடமாகிவரும் காலத்தில் இதெல்லாம் அரசியல் 'ஜில்மால்'கள் தான்....

## 'கருணா' துரோகத்தனத்திற்கு மற்றொரு உதாரணம்



தமிழ் தேசியத்தின் வளர்ச்சியையும், தமிழ் தேசிய தலைமைத்துவத்தின் உறுதியையும் ஏற்றுக்கொள்ள முடியாத, அதனை முழுமூச்சாக எதிர்க்கும், அந்நிய சக்திகள் அதேபோன்ற தன்மை கொண்ட உள்ளூர் சக்திகளுடன் இணைந்து காலத்திற்குக்காலம் எத்தனை சதிகளை மேற்கொண்டு அவற்றை பலவீனப்படுத்தவும் அழிக்கவும் மேற்கொண்ட முயற்சிகள் எத்தனையோ. கடந்த இருதசாப்த காலப்பகுதிக்குள் தோற்கடிக்கப்பட்ட சம்பவங்கள் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் பதிவு செய்யப்பட்டே உள்ளது.

இந்த அந்நிய சக்திகளின் சதிமுயற்சிகளுக்கு பலியாக அவர்கள் விரித்த தந்திரோபாய பொறிக்குள் வீழ்ந்து கைக்கூலிகளாகவும் காட்டிக்கொடுப்போராகவும் மாறி தம் இனத்தின் தன்மானத்தையே - எதிர்காலத்தையே விலைபேசுமளவுக்கு கீழ்த்தனமான உணர்வுகளுக்கு அடிமையாகி சுயநலத்துடன்கூடிய சொந்த அபிலாசைகளை நிறைவேற்றிக்கொள்ள முயன்றவர்களை தமிழ் மக்களும் தமிழர் போராட்ட வரலாறும் துரோகிகளாகவே அடையாளப்படுத்தியுள்ளதுடன் அவர்கள் எத்தகைய மாண்பு- வீரம் -அறிவு கொண்டவர்களாகவும் மன்னிக்க முடியாத இனமாற்ற அர்ப்பர்களாகவும் ஆவணப்படுத்தியுள்ளது.

கூடஇருந்து குழிபறிக்கும் நம்பிக்கை துரோகிகளின் பட்டியல் காலத்திற்குக் காலம் தமிழர் தம் வரலாற்றில் புதியவர்களை இணைத்துக்கொண்டே வந்துள்ளது.

காக்கை வன்னியன், எட்டப்பன், வரதராஜப்பெருமாள் எனத் தொடரும் இப்படியலில் கடைசியாகத் தன்னை இணைத்துக்கொண்டுள்ளவர் கருணா என்ற விநாயகமூர்த்தி முரளிதரன் ஆவார்.

சுயநலம் என்ற கீழ்த்தரமான குணாம்சம் ஒருவனை எந்த அளவுக்கு மனித அடையாளத்தையே இழக்கவைத்துவிடும் என்பதற்கு அவர் மிகச்சிறந்த உதாரணமாகிவிட்டார்.

தனது வீழ்ச்சிக்கு தானே காரணமாகிவிட்டது அவரது அறியாமையால் ஏற்பட்டதா? அறிவீனத்தால் ஏற்பட்டதா? அல்லது ஆழ்மனதில் மூடிக்கொண்டிருந்த பலவீனங்களால் ஏற்பட்டதா?

எதுவானாலும் அவர் தன்னைப்பற்றி தமிழ் மக்கள் வைத்திருந்த அபிப்பிராயத்தை, மரியாதையை தன்தொலை நோக்குச் சிந்தனையற்று தன்னிச்சையான செயற்பாடுகள் மூலம் இழக்கக் காரணமான அந்நிய சக்திகள் அவருக்குப் பெற்றுக்கொடுத்துள்ள உயர் கௌரவப் பட்டம் துரோகி என்பதேயாகும்.

ஒரு போராளி துரோகியாகி தன்னின வீழ்ச்சிக்கு விஷமேற்றும் அந்நிய சக்திகளுக்கு துணைபோவதென்பது எத்தகைய அவமானகரமான விடயம் என்பது அவரது குடும்பம் மற்றும் வாரிசுகள் மட்டுமே வெந்து நொந்து உணரக்கூடிய ஒன்றாகும்.

தன்மொழியை, தன்னினத்தை, தன்நாட்டை மட்டுமல்ல தன்குடும்பத்தையும் கூட தனது தனிப்பட்ட சுயநலத்திற்காக அவலத்துள் தள்ளவைத்துள்ள கருணா இன்னமும் தன் தலைவர் பிரபாகரன் என்று கூறி மக்களை ஏமாற்றாமல் யாருக்குக் கைக்கூலியாக இயங்குகின்றாரோ அவர்களையே தனது தலைவரென்று கூறி அவர்களுக்கான விசுவாசத்தையாவது உண்மையாக வெளிப்படுத்துவாரா?

**செங்குட்டுவன்**

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தின் தளபதியாக இருந்த கருணாவின் செயற்பாட்டால் பல்வேறு குழப்பங்கள் வதந்திகள் மக்கள் மனதில் ஏற்பட்டிருக்கும் வேதனைகள் என தாயக மக்களும் புலம்பெயர்ந்த மக்களும் என ஒரு விதமான வேதனையில் இருக்கின்ற நிலையில் இந்த விடயம் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும் என்ற நோக்கில் நாம் புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான கரிகாலன் அவர்களை சந்தித்து நாம் சென்ற விடயத்தைக் கூறினோம்.

அது ஒரு மாலை நேரம் மங்கிய மின்னொளி விளக்கு வெளிச்சத்தில் அவர் அமர்ந்திருந்த கொட்டகையில் மட்டு-அம்பாறை மாவட்டத்தில் கருணா என்ற தனிமனிதன் ஏற்படுத்திய சிறு சலசலப்புத்தொடர்பாக எங்களுடன் தன்னுடைய கருத்துக்களையும் இந்த விடயம் ஏற்பட்டதன் பின்னணி தொடர்பாகவும் கருணாவின் உண்மையான சுயரூபத்தையும் எம்மிடம் தெளிவாக எடுத்துக்கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக தென்னிலங்கை சிங்கள ஆங்கில மற்றும் சில சர்வதேச ஊடகங்கள் ஊதிப்பெருப்பிக்கும் நிலையில் கரிகாலன் இது ஒரு சிறு சலசலப்பு என்றும் இந்த நெருக்கடி மிகவிரைவில் முடிவுக்கு கொண்டு வரப்படும் என்றும் கருணாவின் இந்த முயற்சி ஒருபோதும் வெற்றியளிக்கப் போவதில்லையெனவும் எம்மிடம் தெளிவுபடக் கூறினார்.



நெஞ்சங்களில் உயரிய இடத்தில் வைத்து பூசித்து வருகிறார்கள்.

கருணாவின் இந்த நிலைப்பாடு அவருக்கு தற்காலிகமாக ஒரு இடைவெளியை ஏற்படுத்திக்கொடுக்கலாம். ஆனால் இது நீண்ட கால அடிப்படையில் அவருக்கும் அவருக்குப் பின்னால் இருக்கும் பின்புல சக்திகளுக்கும் எந்த வெற்றியையும் பெற்றுக் கொடுக்கப்போவதில்லை.

கருணா ஏதோ ஒரு பின்புலசக்தியோடு இணைந்து எடுத்த ஒரு தீர்க்கமான முடிவை கிழக்கு மக்கள் மத்தியிலும் கிழக்கில் உள்ள போராளிகள் மத்தியிலும் நடைமுறைப்படுத்துவதில் குறியாக இருந்தாரே ஒழிய அங்கிருந்த தளபதிகளோடும் போராளிகளோடும் பொறுப்பாளர்களுடனும் கலந்தாலோசிக்கவோ அவர்களது ஆலோசனைகளைப் பெற்றுக்கொள் ளவோ தயாராக இருக்கவில்லை. இதன் விளைவுதான் இன்று கிழக்கில் கருணாவால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சிறு சலசலப்பு ஆகும்.

இதில்

கேட்கும்போது தங்களால் கண்ணீர் வடிக்க முடியாமல் இருக்கமுடியவில்லையென எங்களிடம் முறையிடுகிறார்கள்.

இது எதைக்காட்டுகிறது என்றால் கிழக்கு மக்களின் உணர்வுகளை கருணா என்ற மனிதனால் மழுங்கடிக்கச்செய்ய முடியாதென்பதையே.

இப்பொழுது கருணா மிகவும் குழம்பிப்போன மனிதராக உள்ளார். தன்னை மறைப்பதற்காக கற்பனையான சில பிரச்சினைகளை உருவாக்கி மக்களின் உணர்ச்சிகளை தூண்ட முயற்சிக்கிறார். இந்த முயற்சியும் கருணாவுக்கு தோல்வியையே தரும்.

கருணாவுக்கும் சிறிலங்கா இராணுவத் தளபதி பல கல்லவுக்கும் இடையே நெருங்கிய

# கருணா ஒரு "புருட்டஸ்"...

அவர் கருணாவின் இந்த செயற்பாட்டிற்கு பின்புலமாக நின்று செயற்படும் சக்திகள் ஒரு கட்டத்தில் அவர்களின் தேவை நிறைவுறுகிற போது கைவிட்டுவிடக்கூடும் எனவும் அப்போது கருணா தமிழ் மக்களின் வரலாற்றில் தோன்றிய ஒரு 'புருட்டஸ்'ஸாகவே நிச்சயம்

வேதனை தரும் விடயம் என்ன வென்றால் கிழக்கு மக்களினதும் போராளிகளினதும் விருப்பங்களையும் அபிலாசைகளையும் இறுதிவரை அவருக்கு நாங்கள் எடுத்துச் சொல்ல முயன்றது பயனளிக்காமல் போனது தான்.

எனக்கு ஒன்று மட்டும் தெளிவாகத்தெரிந்தது. இவர் ஏதோ ஒரு சக்தியிடம் விலை போய்விட்டார். அத்தோடு அதற்கான ஒரு முடிவையும் எடுத்துவிட்டார். அதற்கான ஒரு வழிவகையாகவே அவர் இந்த உத்திகளை கையாள்கிறார் என்பது மட்டும் தெளிவாகத்

தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த விடயம் மக்களுக்கு இன்னும் தெரிய வரவில்லை. இந்த விடயம் தெரியவரும்போது மக்கள் முழுமையான இவருடைய சுயரூபத்தைப் புரிந்து கொள்வார்கள்.

கருணா தன்னுடைய பிரதேசவாதத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் யாழ்ப்பாண வர்த்தகர்களை அங்கிருந்து வெளியேற்றியும்

**"முப்பது வருடங்களுக்கு மேலாக கிழக்கு மக்கள் தங்கள் நெஞ்சங்களில் தலைவரை சுமந்து வருகிறார்கள். இது ஒரு சில நாட்களில் கருணா என்ற மனிதனால் தூக்கி எறியக்கூடிய விடயமல்ல. கிழக்கு மக்களின் உணர்வுகளை கருணா என்ற மனிதனால் மழுங்கடிக்கச்செய்ய முடியாதென்பதை கிழக்கு மக்கள் மிக விரைவில் கருணாவிற்கு உணர்த்துவார்கள்."**

நோக்கப்படுவார் என்றும் எம்மிடம் கூறினார்.

இனி நாம் புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான கரிகாலன் அவர்களுடனான செவ்விக்குச் செல்வோம்.

கருணா தான் செய்த ஒழுக்கக்கேடான நடவடிக்கைகளையும் நிதி மோசடிகளையும் மூடி மறைப்பதற்காக தான் ஒரு மாவட்டத்தினுடைய விசுவாசி எனவும் தான் தான் இவ்வளவு காலமும் கஸ்ரப்பட்டுப் போராடியது போலவும் காட்டுகின்ற அதேவேளை எமது தலைமையால் மட்டக்களப்பு மாவட்டம் புறக்கணிக்கப்படுவது போலவும் உண்மைக்குப் புறம்பான நயவஞ்சகமான பிரதேச வாதத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறார்.

இந்த பிரதேசவாதமானது காலத்திற்குக்காலம் தேர்தல் காலங்களில் மட்டும் தான் அது பிரதிபலிப்பது உண்டு. ஏனைய காலங்களில் வழக்கிழந்து போய் மறைந்து போய் விடுவதுண்டு.

தற்போதும் தேர்தல் காலம் என்பதால் கருணாவும் அதே உத்தியைப் பயன்படுத்தி கருணா என்ற மனிதனுக்கு ஏற்பட்ட நெருக்கடிகளை தீர்த்துக்கொள்வதற்காக இந்த பிரதேச வாதத்தைக் கையில் எடுத்திருக்கிறார். இதனூடாக தன்னை நியாயப்படுத்த முனைகிறார். நிச்சயமாக கிழக்கு மக்கள் மத்தியில் கருணாவின் இந்த உழுத்துப்போன பிரதேசவாதம் எடுபடாது. கிழக்கு மக்களும் கிழக்குப் போராளிகளும் இதற்கு அனுமதிக்கப்போவதில்லை.

கிழக்கில் உள்ள மக்களும் போராளிகளும் தலைவர் பிரபாகரனையும் தமிழீழத் தேசியத் தலைமையையும் தங்கள்

இதில் இன்னுமொன்றைக் கவனிக்க வேண்டும். கிழக்கு பிரச்சினை தொடர்பாக ஒரு முடிவு வரமுதலே கருணா தன்னுடைய அடிமனதில் எடுக்கப்பட்டிருந்த முடிவை பிரிந்து செயற்படப்போவதாக அறிவிப்பதிலேயே கவனம் செலுத்தினார். இதில் முக்கியமானது என்னவென்றால் ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவை செயற்படுத்துவதற்கான தந்திரோபாயம். ஆகவே இந்த மாவட்ட நலனை அவர்கையில் எடுத்துக்கொண்டார். அவர் உண்மையில் ஒரு போலியான மனிதர்.

சிறி. இந்திரகுமார்
க. ஜெயசீலன்

நாம் கொஞ்ச காலமாகவே கருணா விடம் பல மாற்றங்களை அவதானித்து வந்தோம். அவர் பல இரகசிய சந்திப்புகளை மேற்கொண்டு வந்தார்.

கருணாவின் இந்த முயற்சி சர்வதேச ரீதியாக எமது போராட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரு தீர்வு கனிந்து வரும் நேரம் எல்லா நாடுகளும் பேச்சுவார்த்தைகளை நடாத்தி தீர்வைக் கொண்டு வரவேண்டும் என்பதில் ஈடுபட்டிருக்கும் இந்த வேளை இதனை விரும்பாத சக்திகளுக்கு கருணாதுணை போய் விட்டார்.

கிழக்கு நிலைமை தொடர்பாக பேசுவதற்கு எமது தலைவர் கருணாவை வரும்மாறு அழைத்துத்தான் இருந்தார். இது ஒரு சிறியவிடயம். தலைவருடன் சந்தித்து ஏற்கனவே பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. இதுவும் ஒரு தீர்க்கப்படக்கூடிய விடயமே. ஆனால் இதைப்பெரிதாக்கி இன்று கருணா கிழக்கு மக்களின் அபிலாசைகளில் கை வைத்துள்ளார்.

தெரிந்தது.

தலைவரோடு இணைந்து முப்பது வருடகாலப்போராட்டத்தில் நீண்ட காலம் போராடியவர் என்றவகையில் உண்மையாக கருணா மாவட்ட மக்களிலும் போராளிகளினதும் நலனில் அக்கறை கொள்பவராக இருந்திருந்தால் இந்த விடயத்தை தலைவருக்குத் தெரியப்படுத்தியிருந்தால் இந்த பிரச்சினையை சுமூகமாக தலைவர் தீர்த்துவைத்திருப்பார்.

மேலும் கரிகாலன் அவர்களிடம் கிழக்கில் மேற்கொள்ளப்படும் எதிர்ப்புகள் தொடர்பாக நாம் கேட்டபோது;

அது ஒருசில கருணாவின் அடியாட்களாலும் கருணாவின் உறவினர்களாலும் மேற்கொள்ளப்படும் ஒரு போலியான நாடகம்.

முப்பது வருடங்களுக்கு மேலாக கிழக்கு மக்கள் தங்கள் நெஞ்சங்களில் தலைவரை சுமந்து வருகிறார்கள். இது ஒரு சில நாட்களில் கருணா என்ற மனிதனால் தூக்கி எறியக்கூடிய விடயமல்ல.

கருணா உலகிற்கு ஒரு போலியான ஆதரவு தனக்கிருப்பதாக காட்ட நினைக்கும் ஒரு பலாத்கார முயற்சி.

ஆனால் உண்மையில் கிழக்குப் போராளிகளும் மக்களும் தங்கள் மனங்களுக்குள் குமுறிக்கொண்டிருக்கிறார்கள்.

நாம் அங்குள்ள மக்களோடு தொடர்பு கொள்கின்றபோது அவர்கள் கண்ணீர் வடிக்கிறார்கள். எமது தேசிய எழுச்சிப்பாடல்களை

அதேநேரம் கிழக்கு மாணவர்களை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றுவதாக பொய் வதந்தியை கிளப்பி வருகிறார். இதனால் பாதிக்கப்படப்போவது மட்டக்களப்பு மக்களும் மாணவர்களுமே ஆகும்.

கருணா சிறிலங்கா இராணுவத்தோடு ஒரு ஒப்பந்தம் செய்ய முயற்சி செய்தார். அப்படிப்பார்த்தால் கருணா யாரோடு சண்டை செய்ய முயற்சி செய்கிறார் என்ற கேள்வி எழும்.

அந்தவகையில் கருணா தமிழருக்கெதிராகவும் தமிழர் தலைமைக்கெதிராகவும் ஒட்டுமொத்தமாக தமிழ்த்தேசிய தலைமைக்கெதிராகவும் சண்டை செய்ய முயற்சிப்பது தெரியவரும். அப்போது கிழக்கு மக்கள் கருணாவைப் புறந்தள்ளி விடுவார்கள். இந்த நிலைக்கு பெற்றோர்கள் தமது பிள்ளைகளை கருணாவோடு இணைந்து செயற்பட அனுமதிக்க மாட்டார்கள். எந்தவொரு காலகட்டத்திலும் தேசியத்தலைவருக்கு எதிராக தமது பிள்ளைகளையோ தாங்களோ செயற்பட அனுமதிக்கப் போவதில்லை.

ஏனென்றால் நாம் கிழக்கில் இருக்கும் போது எங்களிடம் தங்களது பிள்ளைகளை ஒப்படைக்கும் போது அவர்களிடம் நாம் ஒரு வாக்குறுதி அளித்திருக்கிறோம். உங்களுடைய பிள்ளைகள் எமது நாட்டிற்காக தேசியத்திற்காக போராட வந்திருக்கிறார்கள். அவர்கள் நிச்சயமாக வெற்றி பெறுவார்கள். ஒரு நாளைக்கு உங்களுடைய பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு வரும் என நம்புங்கள் எனக் கூறியே பிள்ளைகளை நாம் பொறுப்பெடுத்தோம். அந்த

(19ஆம் பக்கம் பார்க்க)

# தொடர்ந்தும் தளம்பல்தானா?

இலங்கையில் பொதுத்தேர்தல் நடைபெற இன்னமும் மூன்று வாரங்களே உள்ள நிலையில் தேர்தல் களம் சூடுபிடித்து வருகிறது. இம்முறை சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவானவர்கள் யார்? யார் ஆட்சி அமைத்தால் சமாதான நடவடிக்கைகள் தொடரும்? சமாதான நடவடிக்கையைத் தொடர்ந்து முன்னெடுக்கக் கூடிய சக்தி யாருக்கு உண்டு? சமாதான நடவடிக்கை தொடருமாயின் அதன் பயனாகப் பெறக் கூடிய 45000 கோடி நிதி உதவி என்பதை தொடர்பாகவே முக்கியமான கட்டங்களில் இரண்டும் கட்சிகளும் சர்ச்சைப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஐக்கியதேசிய முன்னணியானது சமாதான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளவில்லை என்பது வெளிப்படையான ஒன்று. அது ஆட்சிபீடமேறி புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதிலும், பேச்சுவார்த்தையின் ஆரம்பக்கட்டத்தில் எட்டப்பட்ட சில முடிவுகளைச் செயற்படுத்துவதிலும் அது பெரும் ஆர்வமோ துரிதமோ காட்டவில்லை.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடராத நிலையிலும் சமாதான நடவடிக்கைகள் தொடர்வது போலக் காட்டிக் கொள்ளப் பெரும் பிரயத்தனம் செய்தது. ஏனெனில் இதனால் கிடைக்கக்கூடிய 45000 கோடியைப் பெறுவதற்கே.

ஆனால் சமாதான நடவடிக்கைகளுக்கு மட்டுமல்ல, பொருளாதார ரீதியில் ஐக்கிய தேசிய முன்னணி வலுப்பெற்றுவிடக் கூடாது என்பதற்காக தொடர்ச்சியான முட்டுக்கட்டைகளை, தடைகளைப் போட்டு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தடுத்துவந்தார். இதன்காரணமாக சமாதான முயற்சிகளும் சரி, பொருளாதர நடவடிக்கைகளும் சரி, பெரிதும் தடைப்பட்டிருந்தன. சுமார் ஒரு வருட காலம் சிறிலங்காவின் செயற்பாடுகள் யாவும் மந்த நிலைக்கு சென்று பாதுகாப்பு அமைச்சை சனாதிபதி பொறுப்பேற்றதும் முற்றுமுழுதாகத் தடைப்பட்டது.

இப்போழுது தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தல் முடிவுகள் எப்படி அமையினும் இந்நிலையில் மாற்றம் வருமா? என்ற கேள்வி எழுகிறது.

மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி வெற்றிபெற்றால் நிபந்தனையற்ற விதத்தில் பேச்சுக்கள் நடைபெறும் என அமைச்சர் கதிர்காமர் இறுதியாகக் கூறியுள்ளார். இது வெறும் தேர்தல் வாக்குறுதியாக இருக்கலாம். ஏனெனில் 1994ஆம் ஆண்டுத் தேர்தலின் போது அளித்த வாக்குறுதிகள் எவையும் இன்றும் 10 வருடங்கள் கடந்தும் நிறைவேற்றப் படவில்லை. அது சமாதானம் தொடர்பாக மட்டுமல்ல பாண், பருப்பு விலை உட்பட அனைத்திற்கும் பொருந்தும்.





இப்பொழுது சனாதிபதி முறையை நீக்குவதற்கு மக்களிடம் அனுமதி கோரும் தேர்தலாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பிரகடனப் படுத்தியுள்ளார். அதாவது 1994 தேர்தலில் அளித்த வாக்குறுதிக்கு அமைவாக 1995 ஜுலை யில் இதனைச் செய்திருக்க வேண்டியவர் இப்போது தனது அரசியல் வாழ்வு இறுதியை நோக்கி சென்றுகொண்டிருக்கையில் இப்படியானதொரு முடிவுக்கு வந்திருக்கிறார்.

இவ்வாறுதான் அவர்களது சமாதானம் பற்றிய வாக்குறுதிகளும் இருக்கும். இன்னும் "தமிழ் மக்களுக்குப் பிரச்சினை உண்டுஎன முதன்முதல் ஒப்புக்கொண்ட ஒரே சிங்களத் தலைவர் சந்திரிகாவே" என்றும் "இன்றய சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து வைத்தவர் சந்திரிகாவே" என்றும் அவரது கட்சியினர் புகழ்பாடிக் கொண்டிருக்கிறனர்.

ஆனால் சமாதான முயற்சிகள் கடந்த இரண்டுவருட காலமாக மேற்கொள்ளப்பட்டபொழுது அதனை முற்றுமுழுதாக முறியடிக்கும் நடவடிக்கையே அவர் மேற்கொண்டனர்.

இப்பொழுது ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்தால் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியாது என்பதை வலியுறுத்த புதியதொரு பரப்புரையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆரம்பித்துள்ளது போலத் தெரிகிறது. அதாவது ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியமைத்தாலும் பாதுகாப்பு அமைச்சை சனாதிபதி வழங்கமாட்டார். பாதுகாப்பு அமைச்சின் சமாதான முயற்சிகளை தான் முன்னெடுக்கமுடியாது என ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருக்கிறார். எனவே ஐக்கியதேசிய முன்னணி ஆட்சிக்கு வந்தால் அதனால் சமாதான முயற்சிகளை மேற்கொள்ள முடியாது என்பதே அதுவாகும்.

இவ்வாறு கூறுவதன் மூலம் சமாதானத்தை விரும்பும் சிங்கள மக்களைக் குழப்புவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாறான பிரச்சாரங்கள் எல்லாம் தேர்தல் முடிவடைந்தாலும் சமாதான முயற்சிகளை மட்டுமல்ல, சிறிலங்காவின் எதிர்காலம் குறித்தே கேள்வி எழுப்ப வைக்கிறது.

ஏனெனில் ம.ஐ.சு.முன்னணியின் இக்கூற்றை வெறுமனவே மிரட்டலாக மட்டும் எடுத்துக் கொள்ளமுடியாது. இம்முறைத் தேர்தலில் தோல்வி ஏற்பட்டால் தார்மீகரீதியாக சந்திரிகாவிற்கு சனாதிபதியாக இருக்கக்கூட அருகதையில்லை. அதேவேளை மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஆட்சியொன்று சுமுகமாக நடைபெற வழிசெய்ய வேண்டியதும் அவரது கடமையாகும். ஆனால் அடிப்படையெல்லாம் சிந்திக்கும் நிதானம் சந்திரிகாவுக்கு இருப்பதற்கு ஆதாரம் எதுவுமில்லை. எனவே தேர்தல் மாற்றத்தைக் கொண்டுவருமா? என்ற ஐயப்பாடு மேலும் உறுதியாகின்றது என்றே கூறவேண்டும்.

**வேலவன்**

---

# மக்கள் விழிப்புடன் இருப்பது அவசியம்

கிழக்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடிநிலையைத் தொடர்ந்து தமிழ் மக்கள் மத்தியில் மேலும் குழப்பங்களையும் அச்சத்தையும் ஏற்படுத்தும் வகையில் அரச ஊடகங்கள் முன்னிலையிலுள்ளன.

இதன் ஒரு படியாக திருகோணமலை மாவட்டத்தளபதி பதுமன் கொல்லப்பட்டதாக இந்த ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டன.

ஆனால் இந்த செய்தி வெளிவந்து ஆறமுதலே திருகோண மலை மாவட்டத் தளபதி கேணல் பதுமன் தனியார் ஊடகங்களுக்கு செவ்வியளித்து இந்த பொய்யான தகவலை முறியடித்தார்.

கிழக்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு பின்புலமாக தீய சக்தி ஒன்றின் துணை இருப்பதாக புலிகள் குற்றம் சாட்டி இருக்கும் வேலையில் திருகோணமலை மாவட்ட மக்கள் மத்தியில் ஒரு குழப்பத்தை உண்டு பண்ணுவதற்கு அரச ஊடகங்கள் முனைவது போல் தெரிகிறது.

இது கிழக்கில் கருணா குழுவோடு எந்த வித உத்தியோக பூர்வமான தொடர்புகளையும் ஏற்படுத்தவில்லை எனக் காட்டும் சிறிலங்கா அரசு மறைமுகமான ஆதரவை வழங்க முற்படுவதையே குறிக்கும்.

இத்தகைய செயற்பாடுகள் இலங்கையில் ஏற்படுத்த முயலும் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளை தீர்த்து வைத்தல் என்பதை குழப்புவதோடு ஒரே இனத்திற்குள் ஒரு குழப்பத்தை ஏற்படுத்த முயலும் கபட நாடகமே.

இதனை நன்கு உணர்ந்து கொள்ளவேண்டிய கடப்பாடும் பொறுப்பும் தமிழ்மக்களையே சாரும் ஏனென்றால் இன்று தமிழ் தேசியத்திற்காக ஒற்றுமைப்பட்டு நிற்கும் தமிழ் மக்களின் விடுதலை உணர்வை சிதறடிக்க முயலுவதாகவேயாகும்.

தமிழ் மக்களின் ஒற்றுமையும் அவர்களின் தேசிய உணர்வும், ஒன்றுப்பட்ட சக்தியாக அவர்கள் எழுச்சி பெறுவதும் சிங்கள தேசத்தைப் பொறுத்தவரை அவர்கள் இது வரை தமிழ் மக்களிடமிருந்து. எதிர்கொண்ட எதிர்ப்புகளிலேயே மிகப்பெரிய எதிர்ப்பாக இருக்கும் என்பதாலேயேயாகும்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஒரு காலத்தைய தந்திரோபாய மாக இருந்த பிரித்தாலும் தந்திரோபாயத்தை பல தசாப்தங்களின் பின்னர் தமிழ்மக்களிடையே பயன்படுத்த முயலும் ஒரு கேலிக்கூத்தான நடவடிக்கைகளில் இந்த சக்திகள் இன்று ஈடுபடுகின்றன.

இந்த நடவடிக்கையானது ஒரு போதும் தமிழ் மக்கள் மத்தியில் எடுபடாது என்பதை மிகவிரைவிலேயே இந்த சக்திகள் புரிந்து கொள்ளும்.

ஏனென்றால் அடக்குமுறைகளுக்கும் அதிகார ஆட்சி அளுத்தங்களுக்கும் மத்தியிலிருந்து. புடம் போடப்பட்டு இன்று விடுதலைக்காக விழித்திருக்கும் ஒரு இனமே தமிழினம்.



இந்த இனத்தின் சுதந்திர வேட்கைக்கு முன்னாள் எந்த தீய நாசகார சக்திகளும் தோற்றுத்தான்போகும்.

இது எழுச்சிக் கொண்ட தமிழினத்தின் புதிய வரலாறு அதன் எழுச்சியிலிருந்தே வெளிப்படுத்தி வருகிறது.

வேண்டுமானால் இந்த சஞ்சலங்களையும் சலசலப்புகளையும் ஏற்படுத்துவதன் மூலம் இந்த சமாதான காலத்திலும் அரசின் உண்மை முகங்களை மட்டும் வெளிப்படுத்த மட்டுமே முடியும் வேறு எந்த அனுகூலங்களையும் அவர்களால் பெற்றுவிடமுடியாது.

ஏனென்றால் ஐம்பது வருடகாலத்திற்கு மேற்பட்ட தமிழர்களின் துயரம் படிந்த வரலாற்றில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே தமிழினம் தன்னை எந்த இடர்களுக்கும் முகம் கொடுக்கும் வகையில் தயார் செய்து கொண்டே தன் சுதந்திர உணர்வை வெளிப்படுத்தியது.

இந்த பட்டறிவுகளையும் பாடங்களையும் கொண்டு தமிழினத்தை ஒரு நேரான பாதையில் இனத்தின் விடுதலைக்கான எல்லை வரை கொண்டு செல்லும் வகையில் ஒரு பலமான தமிழின தலைமையே தமிழ்மக்களுக்கு தலைமையேற்று வழி நடத்தி செல்கிறது என்பதனை இந்த சக்திகள் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்த நிலையில் எத்தனையோ அடக்கு முறைகளையும், போலியான கருத்து மாயைகளையும் உடைத்தே இந்தளவு வலிமை மிக்க சக்தியாக தமிழினம்தன்னை உலகுக்கு நிரூபித்துள்ளது.

இந்தவகையில் ஒரு முக்கிய தேர்தல் கால கட்டத்தில் அதுவும் தமிழ் மக்களால் மிகவும் வெறுக்கப்பட்ட சனாதிபதியான சந்திரிகாவும், அவரது அமைச்சருமான கதிர்காமரினதும் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் ஊடகங்களின் செய்திப் பரப்பல் எப்படி இருக்கும் என்பதை தமிழ்மக்கள் நன்கு உணர்ந்தே உள்ளனர்.

இந்த நிலையில் இந்த ஊடகங்களின் வெறும் வெட்டி முயற்சி விழலுக்கு இறைத்த நீராகவே நிச்சயம் அமையும்.

இதனை மிக விரைவில் இந்த அரசும் இந்த ஊடகங்களும் நன்கு புரிந்துகொள்ளும். இன்னும் ஒரு வகையில் சொன்னால் இந்த ஏப்ரல் இரண்டாம் திகதி வரை அரச ஊடகங்களும் அதன் அடிவருடிகளும் பொய்யான செய்திகளைப் பரப்ப முயன்றுக் கொண்டே இருக்கும்

இது ஒரு காலததைய லங்காபுவத்....

ஏனென்றால் இலங்கை அரசின் ஊடகங்களுக்கு இத்த கைய பொய்யான தகவல்களை வெளியிடுவதில் அவர்களுக்கு நிகர் அவர்களேதான்

இதில் தழிழ் மக்கள் மிகவும் விழிப்பாகவும் கவனமாகவும் இருக்க வேண்டியது அவசியம்


இன்றைய நவீன உலகில் நவீன மனிதன் உருவாக்கிய நாகரீகங்களினதும் புதை களிலிருந்தும் தோற்றுவித்திருக்கும் இந்த புதிய உலகில் கருத்து என்பது ஒரு பலம் மிக்க இரசாயன ஆயுதமாகும்.


இந்த கருத்தியல் இராசாயன ஆயுதத்தையே இன்று இந்த ஊடகங்கள் பயன்படுத்தத் தொடங்கியுள்ளன

இதில் தமிழ் மக்கள் கருத் துக்களை சுய விசாரணை செய்வதன் மூலம் கருத்தியல் அடக்குமுறைகளிலிருந்து விடுபடுவதுடன் உண்மையையும் புரிந்து கொள்ள முடியும் இதுவே தமிழினத்தின் விழிப்பு நிலையின் பலத்தை நிரூபிக்கும்.

**நக்கீரர்**

# நாம் செல்லுமிடம்?









கடந்தவாரம் மரண நிகழ்வொன்றில் கலந்துகொள்ள வேண்டியேற்பட்டது. துடிப்பான இளைஞர் பொதுநோக்கோடு தன்னுடைய காரியங்களைச் செய்பவர். அறிவியல் நாட்டமுடையவர். விபத்தொன்றில் இறந்துவிட்டார். நெஞ்சில் நிரம்பியிருந்த துயரத்தோடு நானும் நண்பனுமாக அந்த மரணச் சடங்குக்குச் சென்றிருந்தோம்.

கொஞ்சம் வசதியான வீட்டில் நிகழ்ந்த மரண நிகழ்வு அது. வசதிக்குரிய மாதிரியே சடங்குகளும் நிகழ்ந்தன. எல்லாக் காரியங்களிலும் சுமாரான தாராளத் தன்மை தெரிந்தது. இறுதியாக உடல் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

சுடுகாடு என்றால் காடும் புதரும் நிறைந்த ஒரு சிறு சாம்பல் மேடாகத்தானிருந்தது.

நிறையப் பேர் கூடியிருந்த அந்த இறுதி நிகழ்வில், இறுதிக் காரியங்களைச் செய்வதற்குரிய எந்த வசதிகளும் அங்கே இருக்கவில்லை. வந்தவர்கள் நிற்கக்கூடி அங்கே இடமில்லை. இவ்வளவுக்கும் சுடுகாட்டுக்கு ஒதுக்கப்பட்ட காணி சிறிதும் அல்ல.

இரண்டு ஏக்கர் விஸ்தீரணமுள்ள அந்தக் காணியில் ஒரு சிறு பகுதியைத் தவிர மற்றெல்லாம் காடு பத்திப் போயிற்று. ஏற்கெனவே உடலை எரித்த சிறு பகுதி மட்டுமே வெளிப்பாக, இறுதிக் காரியங்களை நிறைவேற்றக்கூடியதாக இருந்தது.

விலையுயர்ந்த சவப்பெட்டி, இறுதிக் கிரிஜைக்கான சகல ஏற்பாட்டு வசதிகளும் ஆட்களும் இறுதி வரை கூடி வந்த நண்பர்களும் உறவினர்களும் என எல்லாமிருந்த போதும் அந்த மரணச்சடங்கை உரிய முறையில், ஒழுங்காக நடத்த முடியவில்லை அங்கே.

இப்படித்தானிருக்கின்றன எம்முடைய பெரும்பாலான மரணச் சடங்குகளிலும் சுடுகாடுகளிலும்.

சுடுகாடு என்றால் அதற்குரிய பராமரிப்பும், கவனிப்பும் தேவையில்லை என்றொரு பொது எண்ணம் எங்களிடம் பரவலாக வளர்ந்திருக்கிறது.

அதனால் நாங்கள் சுடுகாடுகளை அப்படியே காடுமண்டிப் போக விட்டுவிடுகின்றோம். இறந்த பின் 'உடலை எரித்தால் போதும்' என்ற எண்ணம் மட்டுமே இது பற்றிய கூடிய சிரத்தையாக உள்ளது.

ஒரு மனித மரணம் எத்தனை தாக்கமுடையது எவ்வளவு மரியாதைக்குரியது. என்றெல்லாம் நாம் ஆழமாக யோசிப்பதில்லையா?

ஒருவருடைய மரணம் ஒரு குடும்பத்தில் அல்லது சமூகத்தில் எவ்வளவுக்கு மதிக்கப்படுகின்றது என்பதைக் கொஞ்சம் அவதானித்தாலே நன்றாகப் புரிந்துகொள்ளலாம்; விளங்கிக்கொள்ளலாம். சில மரணங்கள் தேச அளவில் கூட பாதிப்பையும் மதிப்பையும் ஏற்படுத்தி விடுகின்றன.

ஒருவர் இறந்துவிட்டால் அவருடைய உடலுக்கு மரியாதை செய்வதை உலகிலுள்ள எல்லாச் சமூகங்களும் ஒரு முக்கியமான கடமைப்பாடாகக் கொண்டிருக்கின்றன. இறந்தவருடைய உடலுக்குச் செலுத்தப்படும் மரியாதை அல்லது வணக்கம் என்பதே ஆகப் பெரிய மரியாதையாகவும் வணக்கமாகவும் உள்ளது.

ஒருவரின் மரணச் சடங்கில் அல்லது மரண நிகழ்வில் கலந்துகொண்டு மரியாதை செய்வது அவருடைய வாழ்வுக்கும் அவருடைய அன்புக்கும் செலுத்தப்படும் உயரிய மதிப்பாகும்.

இறந்தவரின் உடல் பெறும் மதிப்பே மனித சமூகத்தின் உயரிய பண்பாட்டுச் சிறப்பின் அடையாளம்.

பொதுவாகவே இறந்தவருடைய உடலைப் புனிதமாகப் பார்க்கும் ஒரு மரபு உலகின் எல்லாச் சமூகங்களிலும் உண்டு.

நாங்களும் அப்படித்தான் பார்க்கின்றோம். அதனால்தான் அந்த உடலுக்கு மரியாதை செய்கின்றோம். ஒன்றாகக் கூடி இறுதி வணக்கம் செலுத்துகின்றோம்.

மரண நிகழ்வை ஒவ்வொரு சமூகமும் ஒவ்வொரு விதமாகச் செய்கின்றன. அதனூடாக அவ்வச் சமூகங்களின் பண்பாடு துலங்குவதையும் காணலாம். அல்லது அவ்வவ் சமூகங்களின் பண்பாட்டின் அடிப்படையில் மரண நிகழ்வுகள் நடத்தப்படுவதாகவும் கொள்ளலாம்.

எப்படியோ ஒவ்வொரு மரணமும் இறந்த உடலும் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியதாக இருக்கின்றது என்பதே உண்மை.

இறந்த உடலுக்கு மரியாதை செய்யும் நாங்கள், அதற்குரிய பெட்டி தொடக்கம் வாசனைத் திரவியம் வரை மரணச் சடங்குக்குரிய எல்லா வகையான காரியங்களுக்கும் நிறையச் செலவு செய்கின்றோம். அவற்றுக்கு முக்கியத்துவமும் கொடுக்கின்றோம்.

ஆனால், அந்த உடலை, எல்லாக் கிரியைகளின் பின்னே, இறுதியாகத் தகனம் செய்யப்படும் இடத்தை மட்டும் எந்தக் கவனிப்புமில்லாமல் விட்டு விடுகின்றோம்.

சுடுகாடு என்றால் என்ன என்று சரியாகப் பொருள் விளங்காத ஒருவித பேதமைத்தனம் எங்களிடம் உண்டா என்றே எண்ணத் தோன்றுகிறது.

மதிப்புக்கும் மரியாதைக்குமுரிய ஒரு உடலை இறுதியாக நாங்கள் தகனம் செய்யும் அல்லதுஅடக்கம் செய்யும் உடலை எங்கே கொண்டுசெல்கின்றோம். குப்பை கூழங்களும், நாற்றமும், காடும், புதரும், முள்ளும் நிறைந்த அந்த பராமரிப்பின்றிய இடத்துக்கா?

எங்களுடன் வாழ்ந்த அந்த மனிதரைக் கடைசியாக எப்படியான இடத்துக்குக் கொண்டுசெல்கின்றோம்.

ஏன் நாளை நாம் கூட அப்படியான பராமரிப்பில்லாத அந்த இடத்துக்குத்தானே கொண்டு செல்லப்படுவோம். எமது இறுதியிடம் அப்படித்தான் இருக்க வேண்டுமா என்ன?

வளர்ச்சியடைந்த சமூகங்களில் இடுகாட்டையோ, சுடுகாட்டையோ நன்றாகத்தான் பராமரிக்கிறார்கள். பொதுமக்கள் இறந்தவர்களின் நினைவு நாட்களைச் சுடுகாட்டிலோ இடுகாட்டிலோ வந்து நினைவு கூரக்கூடிய அளவுக்கு அவர்களின் சுடுகாடுகளும் இடுகாடுகளும் சிறப்பாகப் பராமரிக்கப்படுகின்றன.

சுடுகாடு என்றால் சுடுகின்ற காடு என்ற பொருளில் ஒரு சிறு சாம்பல் மேடுள்ள காடாக அதை வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. அவ்வாறு தவறாக விளங்கிக்கொண்டு தொடர்ந்தும் இருப்பது சரியுமல்ல.

**வெளிவாசல் பாலன்**

ஒழுங்கான முறையில் மரணச் சடங்கில் கலந்துகொண்டோர் கூறமுடியாத அளவுக்குக் காடும் முள்ளுமாகச் சுடுகாட்டை வைத்திருக்கும் அவசியமும் எமக்கில்லை. அப்படி வைத்திருக்கும் ஒரு சமூகமும் பண்பாட்டு வளர்ச்சியில் குறைபாடுடையதாகவே இருக்கும்.

சுடுகாட்டிலுள்ள கிணறுகளைப் பார்த்தால்கூடப் பாம்புகளும் கோம்பைகளும் தடிகள், குப்பைகள் நிறைந்தவையாகவுமே இருக்கின்றன.

உயர்வாகக் கருதப்பட்டு நடத்தப்படும் கிரிஜைகளுக்கு ஊற்ற எமக்குத் தண்ணீர்க் கிணறுகள் இப்படி அழுக்குகளின் சேமிப்பிடமாக இருப்பதன் அர்த்தம்தானென்ன?

சுடுகாடுகளைப் பராமரிப்பதற்காகப் பிரதேச சபைகள், நகராட்சி மன்றங்கள், பட்டின சபைகள் எனப் பல நிர்வாக அமைப்புக்களிருக்கின்றன.

ஆண்டுக்கொருதடவை அல்லது எப்போதாவது இருந்துவிட்டு ஒரு தடவை மேம்பாக்காகத் துப்புரவு செய்துவிட்டுத் தம்கடமை முடிந்ததென்றே பெரும்பாலான செயலகங்கள் இருக்கின்றன.

உள்ளூர் பொது அமைப்புக்கள் பல முன்னர் சுடுகாடுகளை ஓரளவுக்குப் பராமரித்து வந்தன. இப்போது அவையும் இல்லாமல் போய்விட்டன.

ஒவ்வொரு உடலையும் இறுதியாக அடக்கம் செய்யும் போதும் தகனம் செய்யும் போதும் மரங்களை இறந்தவரின் நினைவாக நாட்டுகிறோம். அவற்றில் எத்தனை மரங்கள் இதுவரையில் வளர்ந்திருக்கின்றன.

உண்மையில் ஒரு சுடுகாடு நிழற் சோலையாகத்தான் இருக்க வேண்டும். பூமரங்கள் நாட்டப்பட்ட பூங்காவனமாக இருக்கவேணும் துப்புரவான நீர்வசதியோடிருக்க வேணும். என்றேனும் இப்படி யோசித்திருக்கிறோமா?

பிற சமூகத்தவர் ஒருவர் வந்து 'எங்கே உங்களுடைய சுடுகாட்டைக் காட்டுங்கள், பார்ப்போம் என்றால் நாம் எதை எப்படிக் காட்டுவது?

எவ்வளவு காசைச் செலவளித்து ஒரு மரண நிகழ்வைச் சிறப்பாக, இறந்தவருக்காக மரியாதை செய்யும் நாம், மெய்யாகவே அவருக்கு மதிப்பும் மரியாதையும் அளிப்போமாக இருந்தால் எந்தச் சீருமில்லாத ஒரு இடத்துக்கு அவரின் உடலை எடுத்துச் செல்வோமா?

எங்களிடம் இப்போது 'மாவீரர் துயிலும் இல்லங்கள்' இருக்கின்றன. சாவடைந்த போராளிகளை-மனிதர்களுக்கு எத்தனை மதிப்பளித்து, எவ்வளவு நேர்த்தியாகவும், சிறப்பாகவும் அவர்களை அந்த இல்லங்களில் விதைத்திருக்கிறார்கள்.

பாருங்கள் 'சுடுகாடு' என்ற சொல் எப்படி பதம்மாறி 'துயிலும் இல்லங்கள்' என்றாகியிருக்கின்றது என்று.

எப்போதும் துயிலும் இல்லங்களுக்குச் சென்று வரக்கூடிய ஒருணர்வு எப்படி எம்மிடம் ஏற்பட்டு வளர்ச்சி பெற்றுள்ளது என்பதையும் எமது சமகால வரலாற்றிலே அறிந்திருப்பீர்கள்.

சுடுகாட்டைக் குப்பைத் தனமாக வைத்திருக்கும் சமூகத்தில் தானே- ஒரு மலர்ச்சியாக 'துயிலுமில்லங்கள்' இத்தனை மாண்புடன் எழுந்திருக்கின்றன.

அப்படியென்றால் ஏன் எம்மால் சுடுகாடுகளையும் சோலைகளாகவும் நினைவிடங்களாகவும் ஆக்க முடியாது?

சுடுகாடு என்றால் பாம்பும், பேயும் உறைந்திருக்கும் பகுதியாக, உலாவுகின்ற இடமாக நாம் நோக்க வேண்டும்.

எங்களிடம் சரியாக விழிப்பும், தெளிவான சிந்தனையும் இல்லாததுதான் இதற்குக் காரணம்.

சுடுகாடுகளைப் புதிய முறையில் மகத்துவம் நிறைந்த ஓரிடமாக மாற்றக் கூடிய மனவளர்ச்சி எங்களுக்கு அவசியம். இதை ஓர் விழிப்புணர்வுச் செயற்பாடாகக் கொள்ள வேண்டிய முக்கியமான நிலையிலும் நாமிருக்கின்றோம்.

நமது பண்பாட்டின் உயர்ச்சிக்கு இது அவசியம் சீர்செய்யப்பட வேண்டியே தீரவேண்டும். ●

# கணவன் உடலைத் தாவென்றுகேட்கும் மனைவி

இவ்வருடம் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாக ஜேர்மன் அரசு ஒழுங்கு செய்த யூத-பலஸ்தீனக்கைதி பரிமாற்றம் இடம் பெறுகிறது. 400 வரையான பலஸ்தீனக்கைதிகளைத் தமது சிறைச்சாலைகளில் இருந்து இஸ்ரேல் விடுவித்துள்ளது இதற்கு பிரதியுபகாரமாக லெபனான்நாட்டில் நிலைகொண்டுள்ள ஹிஸ்பொல்லா போராளிகள் தம்வசமுள்ள நான்கு இஸ்ரேல் படையினரின் சடலங்களைக் கையளித்துள்ளனர். கைதிகள் பரிமாற்ற வரலாற்றில் மிகவும் அபூர்வ நிகழ்ச்சியாக இது கருதப்படுகிறது. தமது இனத்தவர்களின் சடலங்கள் பிறரிடம் இருக்கக்கூடாது என்பதில் நவீன இஸ்ரேல் உறுதியாக இருக்கிறது.

இந்த அடிப்படையில், 1965 ம் ஆண்டில் சீரியாவில் தூக்கிலிட்டுப் புதைக்கப்பட்ட எலிகோகெனின் (ELIECOHEN) எச்சங்களைத் தரும்படி அவருடைய மனைவி நாடியா கோகென் கோரிக்கை விடுத்துள்ளார். இஸ்ரேல் நாட்டின் இராணுவ வெற்றிக்கு உதவிய முன்னணி ஒற்றர்களில் எலிகோகென் முதலிடம் வகிப்பவர். இவர் சீரியா நாட்டில் நிலைகொண்டிருந்த போது பிடிபட்டார் தலைநகர் டாமஸ்கசில் இவர் பலர் முன்னிலையில் தூக்கில் இடப்பட்டார்.

எகிப்தின் அலெக்சாந்திரியா துறைமுக நகரின் யூதர் வாழும் பகுதியில் எலிகோகென் 1924ஆம் ஆண்டில் பிறந்தவர். இவர் 1957இல் இஸ்ரேல் நாட்டிற்கு சென்று குடியேறினார் அரபுக் குடும்பத்தில் பிறந்தவர்போல் இவரால் அரபு மொழிபேசமுடியும் என்ற முக்கிய காரணத்திற்காக எலிகோகென் இஸ்ரேலின் மொசாட் உறவுப் படையில் உறுப்பினராக இணைக்கப்பட்டார். அதன்பின் அவருக்கு சீரியாவில் பேசப்படும் அரபு மொழியில் பாடம் புகட்டப்பட்டது. அவர் ஒரு நூறு வீத சீரிய நாட்டவராக மாறினார். அவரை உளவுப் பணிக்கு தயார் செய்யும் வேறு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

சீரியாவுக்குள் நுழைக்கப்படும் முன் அவர் தென் அமெரிக்க நாடான ஆர்ஜென்ரீனாவுக்கு அனுப்பப்பட்டார். அதற்காக அவருக்கென்று மிகவும் நண்பகமான வாழ்க்கைக்கதை உருவாக்கி வழங்கப்பட்டது. தன்னையொரு சீரியா நாட்டு அகதியாக எலிகோகென் கூறிக்கொண்டார். சீரியா நாட்டவர்களுடன் அவர் நெருங்கிப் பழகவும் செய்தார் ஆர்ஜென்ரீனாவில் அவர் பயன்படுத்திய பெயர் கமில் அமின்தாபெஸ் (Kamil amin taabes) ஆர்ஜென்ரீனாத் தலைநகரிலுள்ள சீரியா நாட்டுத்தூதரக அதிகாரிகளுடனும் அவர் வேகமாக நட்புறவுகளை ஏற்படுத்தினார். சீரியா தூதரகத்தில் இராணுவ விவகார அதிகாரியாக மேஜர் அல்-ஹபேஸ் அசாத்(al-hafezasad) என்பவர் பணியாற்றினார். நாளடைவில் எலிகோகெனும் அசாத்தும் இணைபிரியாத நண்பர்களானார்கள்.

அல் ஹபேஸ்அசாத்திற்கு சீரியா திரும்பும் மாற்றல் உத்தரவு கிடைத்த போது அவர் கமில்அமின்தாபெஸ் என்ற பெயரில் உலாவிய எலிகோகெனையும் தன்னுடன் கூட்டிச் சென்றார் சீரியாவுக்குள் நுழைந்துவிட்ட இஸ்ரெயில் ஒற்றன் இப்போது ஒரு விசாலமான தளபாட விற்பனை நிலையம் ஒன்றை தொடங்கி நடத்தினான். அசாத்துடனான நட்பை வலுப்படுத்திக்கொண்டான் மிகச் சிறிய காலத்தில் இராணுவ அதிரடிப் புரட்சி மூலம் அசாத் சீரியாவின் தலைமைப் பதவியை கைப்பற்றினார். சனாதிபதி என்ற பட்டத்துடன் அசாத் சீரியாவின் சர்வாதிகாரியானன் இன்று அவர் மகன் பஷார் அசாத் அதேபதவியில் இருக்கிறார்.

உயர்மட்ட நட்பு காரணமாக நாடு முழுவதும் சர்வ சுதந்திரமாக நடமாடும் வாய்ப்பை எலிகோகென் பெற்றான். அத்தோடு சனாதிபதி மாளிகைக்குள் தங்குதடையின்றி நடமாடும் வாய்ப்பும் அவருக்கு கிடைத்தது. நாட்டின் மிகவும் அந்தரங்கமான இரகசியங்கள் யாவற்றையும் தனது நண்பனோடு பகிரும் வழமையை அசாத் கொண்டிருந்தார். முக்கியமாக சோவியத் ஒன்றியத்துடன் கொண்டிருந்த இராணுவ ஒப்பந்தம், சீரியா-இஸ்ரேலில் எல்லையில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு ஒழுங்குகள் பற்றியும் அசாத் தனது நண்பனுடன் கூடிப் பேசினார்.

இவ்வகையில் சேகரித்த தகவல்கள் யாவற்றையும் தான் ஏற்றுமதி செய்த மேசை, கதிரை, படுக்கை போன்ற வீட்டுத்தள பாடங்களில் செய்த துளைகளில் மறைத்து கோகென் அனுப்பினார். இஸ்ரேலுக்கும் வேறு நாடுகளுக்கும் இவர் அனுப்பிய உளவுத்தகவல்கள் மொசாட் முகவர்களை சென்றடைந்தன மிகவும் இறுக்கமாக சுற்றிய பேப்பரில் சங்கேத மொழியில் உளவுத்தகவல்களைப்பதிவு செய்து தளபாட துளைகளில் அடைத்து அனுப்புவது கோகென் பாணி அத்துடன் தனது வியாபார நிலையத்தில் இஸ்ரேலுடன் இரகசியத் தொடர்பு கொள்வதற்காக அவன் இருவழி வானொலிக் கருவிகளையும் பயன்படுத்தினார்.

ஜூன் 1967 ல் நடந்த ஆறு நாள் யுத்தத்தில் இஸ்ரேல் படைகள் மிகவும் எளிதாக சீரியாவுக்குச் சொந்தமான கோலான் குன்றைக் கைப்பற்றின. சோவியத் ஒன்றின் உதவியோடு மிகவும் நேர்த்தியாகச் செய்யப்பட்ட கோலான் குன்று பாதுகாப்பு ஒழுங்குகளைக் கடந்து இஸ்ரேலின் படைகள் தலைநகர் டமாஸ்கஸ்வரை முன்னேறின கோகென் வழங்கிய தகவல்கள் கோலோன் குன்றின் விழ்ச்சிக்கு உதவின ஒருமுறை கண்ணால் பார்த்தால் மனதில் பதிந்துவிடும் திறமை கோகெனுக்கு இருந்ததாக சொல்லப்படுகிறது. அத்தோடு படக் கருவிகளையும் அலன்சீரியாவுக்ள் சுற்றித் திரியும்போது கொண்டு திரிவான். கோலான் குன்று சம்பந்தமான புகைப்படங்கள், வரைபடங்கள், உட்புகும் மாற்று வழிகள் போன்றவற்றை கோகென் இஸ்ரேலின் படைகளுக்கு முன் கூட்டியே வழங்கினான். அவன் வழங்கிய தகவல்தான் வெற்றிக்கு உதவின என்பது வல்லுநர்கள் முடிவு.

சோவியத் ஒன்றியம் தயாரித்த மிக் 21 ரகப்போர் விமானத்தை முதன் முதலாகப் படம் பிடித்த உளவாளி என்ற பெருமை கோகெனுக்கு உண்டு. இந்த விமானம் சீரியாவில் வந்தபோது அவன் அதை இராணுவ விமான நிலையத்தில் வைத்து படம் பிடித்தான். சோவியத் ஒன்றியம் சீரியாவுக்கு மிகவும் இரகசியமாக வழங்கிய இரு நூறு ரீ.54 போர்

அன்பரசு

தாங்கிகள் பற்றிய செய்தியையும் அவன் இஸ்ரேலுக்கும், இஸ்ரேல் ஊடாக அமெரிக்காவுக்கும் வழங்கினான். சீரியாவில் நிலைகொண்டிருந்த ரஷ்ய இராணுவ ஆலோசகர்கள் பற்றியும் அவர்கள் வழங்கிய ஆலோசனை விபரங்களையும் கோகென் இஸ்ரேலிற்கு அனுப்பினான்.

திடீர் தாக்குதல் நடத்திச் சீரியா எல்லைப்புறத்தில் அமைந்திருந்த வட இஸ்ரேலின் முனையைக் கைப்பெற்றும்படி சோவியத் ஒன்றிய ஆலோசகர்கள் சீரியா இராணுவத்திற்கு அழுத்தம் கொடுத்தனர். இதையும் கோகென் அறிந்து கொண்டான் இதன் பயனாய் காரியத்தில் முந்தவேண்டிய கட்டாயம் இஸ்ரேல் படைகளுக்கு இருந்தது. சீரியா படைகள் முனைக்கு வர முன்போ இஸ்ரேலில் படைகள் கோலான் குன்றிற்கு அப்பால் வந்து விட்டனர். உளவுத்தகவலின் முக்கியத்துவத்தை ஓரளவுக்கு இதன் மூலம் ஊகிக்கமுடியும் கோலான் குன்றிலிருந்து வடக்கு நோக்கிப் பாயும் நதி நீரை மறித்துக்கட்டும் படி ரஷ்ய ஆலோசகர்கள் சீரியாவுக்குச் சொன்னதையும் கோகென் கேட்டறிந்தான். இன்று இதே நதி நீர் முற்றாக இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றது. இஸ்ரேலின் நன்நீர் தேவையை அது பூர்த்தி செய்கின்றது.

நிலைமை இவ்வாறிருக்க சனாதிபதி அசாத்துக்கும் உளவாளி கோகெனுக்கும் இடையிலான நட்பு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக மென்மேலும் வளர்ச்சி அடைந்தது. கோகென் சீரியாவின் தகவல் அமைச்சராகவோ அல்லது உதவி பாதுகாப்பு அமைச்சராகவோ அசாத்தினால் அமர்த்தப்படலாம் என்ற செய்தியும் 1960களில் அடிபடத் தொடங்கியது ஆனால் துரதிஷ்டமாக அவன் 1965 ல் அகப்பட்டுக் கொண்டான். பிடிபடுவதற்கு சீரியாவின் உளவுத்துறை காரணமாக இருக்கவில்லை.

கோகெனுடைய மாளிகைக்கு அருகாமையில் இந்திய தூதரகம் பயன்படுத்தும் தொடர்புக்கருவிகள் சில குறிப்பிட்ட நேரங்களில் தொழில் நுட்பக் குழப்பம் அடைவது வழமை. காரணத்தை அறியாமல் இந்திய அதிகாரிகள் அவஸ்தைப்பட்டனர். இறுதியில் அவர்கள் தமது நட்பு நாடான சோவியத் ஒன்றியப் பொறியியலாளர்களின் உதவியை நாடினர். சோவியத் ஒன்றிய நிபுணர்கள் மிகவும் சக்திவாய்ந்த தேடல் கருவிகளைப் பயன்படுத்தி கோகெனின் சதி வேலையை அம்பலப்படுத்தினர். இப்போது கமில்அமின்தாபெசின் உறவுப்பணி முடிவுற்றது. ஆனால் சனாதிபதி அசாத்தின் அந்தரங்க நண்பன் என்ற காரணத்தால் அதிரடி நடவடிக்கை எடுப்பதற்கு சீரியா அதிகாரிகள் தயக்கம் காட்டினர்.

இறுதியில் ஒரு நாள் இரவு கோகென் வீட்டுக்குள் சீரியாவின் பாதுகாப்பு அதிகாரிகள் தீடிரென்று நுழைந்தனர் கோகென் கையும் மெய்யுமாகப் பிடிபட்டான். அப்போது தனது இருவழி வானொலிக் கருவியில் ஏதோ செய்தி அனுப்பிக் கொண்டு அவன் இருந்தான். துவக்கு முனையில் பின்வரும் தகவலை இஸ்ரேலில் நாட்டிற்கு அனுப்பும் படி சீரியா அதிகாரிகள் அவனை நிர்ப்பந்தித்தனர் "இஸ்ரேல் பிரதமருக்கும் அவருடைய உளவுத் துறைத்தலைவருக்கும் சீரியாவின் உளவுக்குற்றத் தடுப்புப் பிரிவினர் அனுப்பும் செய்தி கமில் அமின் தாபெஸ் எமது விருந்தாளியாக இருக்கிறான். மிகுதியை விரைவில் அறிவீர்கள்"

சனாதிபதி ஆசாத் மிகவும் அதிர்ச்சி அடைந்தார். தனது ஆருயிர் நண்பன் ஒரு உளவாளி என்பதை ஏற்க மறுத்தார். ஆதாரங்களை அவர் கண்டபின்பும் தூக்குத்தண்டனை உத்தரவில் ஒப்பமிடப்பிடிவாதமாக மறுத்தார். ஈற்றில் இராணுவ எதிர்ப்பை சமாளிப்பதற்காக வேண்டா வெறுப்பாக தூக்குத்தண்டனை உத்தரவை வழங்கினார். அதற்கான நாளும் வைக்கப்பட்டது. அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் கோகென் உயிரைக்காப்பாற்றும்படி உலகலாவிய பிரசாரத்தை ஆரம்பித்தன. இதற்குச் செவிசாய்த்தால் தனது பதவி பறிபோகலாம் என்பதை நன்கு உணர்ந்த அசாத் தூக்குத் தண்டனையை நிறைவேற்றினார். கோகெனுடைய சடலம் இடுகாட்டு மண்ணில் புதைக்கப்பட்டது.

டமஸ்கஸ் தலைநகரின் தியாகிகள் சதுக்கத்தில் பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்கள் முன்னிலையில் கோகென் தூக்கிலிடப்பட்டான். இந்தக் காட்சியை தொலைக்காட்சி மூலம் உலக மக்கள் பார்வையிட்டனர். ஒரு வெள்ளைக் கடதாசியில் அவன் செய்த குற்றங்களின் பட்டியல் அவனுடைய கழுத்தில் தொங்கவிடப்பட்டது. தூக்கிலிடப்பட்டு 38 வருடங்கள் சென்ற பின்பும் கோகென் விவகாரம் தணியவில்லை. அவனுடைய சடலம் எலும்புக்கூடாக மாறிவிட்டது. அவனுடைய மனைவி நாடியா கோகென் அதையாவது தா என்று கோசத்தைக் கைவிடவில்லை.

இஸ்ரேலின் பாதுகாப்பை உறுதிசெய்வதையே தனது மத்திய கிழக்கு சம்பந்தமான வெளியுறவுக் கொள்கையாகக்கொண்டுள்ள அமெரிக்கா சீரியா மீது தாக்குதல் தொடுப்பதற்கு தயாராகிவருகின்றது. இதை உணர்ந்த சீரியா இஸ்ரேலுடன் அமைதிப்போச்சுக்கு தயார் என்று கூறுகின்றது. கோலான் குன்றில் பெருந்தொகை யூதர்கள் குடியேறி விட்டார்கள். அது இஸ்ரேலின் பிரதேசமாக மாற்றப்பட்டுவிட்டது. 'எனது நாட்டுடன் அமைதிப் பேச்சு நடத்த விரும்பினால் எனது கணவரின் எச்சங்களைத்தா' என்கிறார் ஒற்றனின் மனைவி. அதையும் ஒப்படைக்கவேண்டிய நிலையில் இராணுவ்பலம் குன்றிய சீரியா இருக்கின்றது. அரசனின் முட்டை குடியானவனின் அம்மியை அடித்து நொருக்கிய கதைக்கு இதை ஒப்பிடலாம். கோகெனின் எச்சங்களை வரவேற்பதற்கு இஸ்ரேலில் தயாராகி வருவதாகத் தகவல் வெளிவந்துள்ளது.

> "டமஸ்கஸ் தலைநகரின் தியாகிகள் சதுக்கத்தில் பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்கள் முன்னிலையில் கோகென் தூக்கிலிடப்பட்டான். இந்தக் காட்சியை தொலைக்காட்சி மூலம் உலக மக்கள் பார்வையிட்டனர். ஒரு வெள்ளைக் கடதாசியில் அவன் செய்த குற்றங்களின் பட்டியல் அவனுடைய கழுத்தில் தொங்கவிடப்பட்டது. தூக்கிலிடப்பட்டு 38 வருடங்கள் சென்ற பின்பும் கோகென் விவகாரம் தணியவில்லை அவனுடைய சடலம் எலும்புக்கூடாக மாறிவிட்டது. அவனுடைய மனைவி நாடியா கோகென் அதையாவது தா என்று கோசத்தைக் கைவிடவில்லை."

இது தமிழர்களின், அரசியல் பலத்தை உலகிற்கும், சிங்கள பெரும்பாண்மை அரசியல் கட்சிகளுக்கும் உணர்த்தவேண்டிய காலகட்டமாகும். இதில் தமிழர் தரப்பு பலவீனத்தை வெளிப்படுத்துமாயின் எந்த அரசு அது ஐக்கிய தேசியக் கட்சியாயினும் சரி, ஜே.வி.பி.யின் கூட்டான பொதுஜன ஐக்கிய முன்னணியாயினும் சரி, பதவிக்கு வரும் போது மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்க தயாராகிவிடும் என்பதை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் தமது வாழ்வின் விடிவுக்கான இந்தத்திருப்புமுனையை சரியாகப் பயன்படுத்திக் கொள்வதில் எந்த பின்னடைவையும் சந்திக்கக்கூடாது என சிறிலங்கா பொறியியல் தொழிலாளர் சங்கமொன்றின் தலைவரான திரு. சிசிரகுமார தெரிவித்திருக்கிறார். இவர் சிங்கள தமிழ் இளைஞர்களின் ஒன்றுகூடல் ஊடாக தமிழ்மக்களின் நியாயமான போராட்டத்தின் கருத்துக்களை சிங்கள மக்களிடம் எடுத்துச் செல்லும் பணியில் பங்காளியாய் இருந்தவர்.

எதிர்கால வெற்றியை தீர்மானிக்கும் அரசியல் பாதையில் தடைகள் ஏற்படுவதற்கோ அல்லது இராணுவ சமநிலையை உடைந்து போகவைக்கும் எந்தவித உட்பூசல்களுக்குமோ இன்றய காலகட்டம் பொருத்தமற்றது என்பதை தெரிவிக்கும் அவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி சமாதானத்தை முன்னெடுப்பதில் உன்மைத்தன்மையுடன் நடந்து கொள்ளவில்லை என்பதுடன், சமாதானப் போர்வையில் காலத்தைக் கடத்துவதற்கே முயன்றிருக்கின்றது. இனவாதத்தைத் தூண்டும் பிரச்சாரங்களுக்கு ஜே.வி.பி.யை பயன்படுத்திய சந்திரிகா இன்று தேர்தலுக்கு முகம் கொடுக்கும் போது சிங்கள மக்களிடமும் சமாதானத்தையே முன்வைக்கிறார். விடுதலைப்புலிகளுடன் தொடர்ந்து பேசுவேன் என அவர் தேர்தல் மேடைகளில் கூறுவதன் மூலம் சிங்கள மக்களின் வாக்குகளையும் பெறமுடியும் எனும் நிலைமை உள்ளது. யுத்தம் மீண்டும் உருவாகுவதை சிங்கள மக்களும் விரும்பவில்லை. ஆனால் உண்மையான சமாதானத்தைக் கொண்டு வருவதில் இரண்டு கட்சிகளுககுமே அடிப்படையில் விருப்பமில்லை என்பதே உண்மையாகும். (அதிகாரத்தை கையில் எடுப்பதற்கு சமாதானமையப் பிரச்சாரத்தை இரண்டு கட்சிகளுமே தந்திரோபாயமாகப் பயன்படுத்த (முனைகின்றன) என்றார் அவர்.



# சமாதானப் போர்வையில் நாட்களைக் கடத்தும் நாடகம்

ஜே.வி.பி.அதிகாரத்திற்கு வருமாயின் நேர்மையாகச் சிந்திக்கும், செயலாற்றும் சிங்கள இளைஞர்களின் வாழ்வுக்கு மீண்டும் ஒரு முறை அச்சுறுத்தல் ஏற்படுதல் தவிர்க்கமுடியாததாகிவிடுமென்றார்.

சிறிலங்கா வரலாற்றில் தமிழ் மக்கள் முதலில் சகல வகையிலான அழுத்தங்களிலும் இருந்தும் விடுதலைஅடைவர். அதன் பின்பு சிங்கள மக்களுக்கான விடுதலையும் அமையும் என்பதை நாம் உணர்கிறோம். கொழும்பு மாநகரில் பிரபல ஹோட்டல்களின் COCKTAIL பாட்டிகளின் ஆணவச்சிரிப்போடு சிலிரிடும் கண்ணாடித்தம்ளர்களின் சியேர்ஸ்களின் ஒலிப்பு தமிழ் மக்களின் தேசிய எழுச்சியை கேள்விக்குறியாக்கியுள்ளதா? என்பதுடன் மகிழ்ச்சிக் கூக்குரல்களோடிருந்த பட்டாஸ் வெடிப் பொருள்களின் எல்லைக்கோடு கள் நாட்கணக்கில் என்பதை வரலாறு அவர்களுக்கு உணர்த்துமா? என்பதும் இன்றுள்ள கேள்வியாகும்.

"Ethirweerasinqham brings glory to ceylon"(எதிர்வீரசிங்கம் இலங்கைக்கு கீர்த்தியைக்கொண்டு வருகிறார்.) எனும் 26.06.1958ம் ஆண்டின் கொழும்பு டெய்லி நியூஸின் தலைப்புச்செய்தியை கப்பல் சிப்பந்திகளின் கைகளில் இருந்த பத்திரிகையிலேயே பல தமிழர்கள் பார்த்தார்கள் என ஒரு அன்பர் தெரிவித்தார். கொழும்பில் இருந்து பல தமிழ் அதிகாரிகளை காங்கேசன்துறைக்கு ஏற்றிக்கொண்டு வந்த கப்பலே அது. ஒரு தமிழன் சர்வதேச அரங்கில் இலங்கைக்கு மேன்மையைக்கொண்டு வரும் போது பல தமிழர்கள் துன்புறுத்தப்பட்டு, கப்பல்களில் அகதிகளாக அனுப்பப் பட்டுக்கொண்டிருந்தார்கள். இது இலங்கை வரலாற்றின் இரத்தக்கறை படிந்த சிங்கள பௌத்த பேரினவாதத்தின் குறுக்குவெட்டு முகங்களில் ஒன்றின் தரிசனமாகும் அன்று இலங்கைக்கு திரும்பமுடியாது. அமெரிக்காவிற்கே சென்றுவிட்டார். எதிர்வீரசிங்கம்.

அதே எதிர்வீரசிங்கம் 46ஆம் ஆண்டுகளின் பின் மூன்றாவது தமிழீழ தேசியப் பெருவிளையாட்டு விழாவில், தமிழர் தாயகத்தின் எழுச்சிப்பெருவிழாவில் தனக்குரிய தமிழன் எனும் அடையாளத்துடன் போட்டிச்சுடரினை ஏற்றிவைக்கும் கௌரவத்தைப்பெறுகின்றார். தமிழர் தேசிய அடையாளத்தைப் பிரதிபலிக்கும், தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களின் கொடிகளும், தமிழீழத்தேசியக்கொடியுடன் ஏற்றப்பட்ட தமிழர் தாயகத்தின் இருப்பை உலகிற்கு பறைசாற்றி நின்ற ஒருவிழாவின் நிகழ்விற்கு சாட்சியமாகினார்.

இதனையே தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் தொடர்ச்சியாக நடைபெறும் ஒரு விடயமாக அமைகிறது. இந்த தமிழீழத்தேசிய விளையாட்டுவிழா என்றார். திரு.கா.வே.பாலகுமாரன் அவர்கள். திரு. எதிர்வீரசிங்கம் எனும் பெருமகன் அன்று தன்னால் அனுபவிக்க முடியாமல்ப்போன, அன்றுநிறைவடையாத அந்த அரசியல் பரிமாணத்தை உங்களுக்கு உணர்த்துவதற்காக தான் உங்களோடு நின்றுதன்னுடைய விளையாட்டுத்துறை நிபுணத்துவ பயிற்சிகளை உங்களுக்கு, தமிழர்தேசிய அடையாளங்களோடு உள்ளதொரு தேசிய இனத்திற்கு வழங்குகிறார். என்பதை நீங்கள் சரியாக புரிந்துகொண்டால், நாம் சொல்லப்போகும் அரசியல் பரிமாணத்தை நீங்கள் சரியாகப்புரிந்துகொள்ள முடியும் என்றார்.

கல்வி என்றால் என்ன? விளையாட்டு என்றால் என்ன? நாங்கள் எல்லாவற்றையுமே பகுதி பகுதியாகப்பிரித்துப் பார்க்கப் பழகிக்கொண்டதால் தான் எமது வாழ்க்கை ஒத்திசைவற்ற, துண்டுதுண்டாகிப்போன ஒரு வாழ்க்கையாக மாறிவிட்டது. எமது மண்ணிலே விளையாட்டு என்பது இன்றைக்கு திரும்ப ஞாபகப்படுத்தவேண்டிய சோகவரலாறாக மாறியிருப்பதை நாங்கள் கண்ணாலே பார்த்தோம். ஆகவே ஒன்றிணைந்த கல்வி, உடல்,உள, சமூக உருவாக்கம் என்பதிலே ஒரு தொடர்ச்சியான செயற்பாட்டை நாங்கள் மேற்கொள்ள வேண்டுமென்பதே விடுதலைப் போராட்டத்தின் உடைய விதியாக இருப்பதால் தான் போராட்டத்தின் தொடர்ச்சியாக இது அமைகிறது எனவும் தொடர்ந்து அவரின் சிறப்புரை தெரிவித்திருந்தது.

உலகத்திற்கும், சிங்கள மக்களுக்கும் தெளிவாக தமது நிலைப்பாட்டை, ஒருமித்து நிற்கும் தங்கள் அரசியல் பலத்தை சொல்லிவைக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கு உண்டு இதுவே அவர்களுக்குரிய காலக் கடமையும் ஆகிறது. இதுவரை கால இழப்பும், இதுவரை காலம் சிந்திய குருதியும் அவமாகிப்போகாது எச்சரிக்கை யாய் இருப்போம். ●

---

ஆனந்தசங்கரியின் அரசியலின் உட்தன்மையையும வெளிப்புறத்தையும் நன்கு அறிந்தவன் நான். சமசமாஜக் கட்சி, தமிழ் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி என பல கட்சிகளில் அங்கம் வகித்து அனைத்துக்கட்சிகளிலும் குத்துக்கரணம் அடித்தவர் அவர். எந்தக் கட்சியிலும் நேர்மையாக இருந்தவரில்லை. அரசியல் குத்துக்கரணம் என்பது அவருடன் கூடப்பிறந்த நோய். கொள்கைக்காக அவர் என்றும் அரசியல் நடாத்தியதில்லை வசதிக்காக தேர்தலில் வெல்லுவதற்காக எதையும் பேசுவார் எதையும் எழுதுவார். பொருளற்ற ஒருவரை ஒரு பொருளாகக்கொண்டதுதான் தமிழினம் செய்த மன்னிக்க முடியாத தவறு புலிகளின் முகாம் எங்கு உண்டென்று வரைபடம் வரைந்து அரசிற்குக் கொடுத்தவர் ஆனந்தசங்கரி என்ற செய்தி சில காலத்திற்கு முன்பு அனைத்துச் செய்தி இதழ்களிலும் வெளிவந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளையும் ஒருங்கிணைத்து மண்ணையும் மக்களையும் நாம் காப்பாற்ற முனைந்தபோது கிளிநொச்சி மாவட்டத்தை தனி மாவட்டமாக்கி அதனின் "மகாராஜாவாக" விளங்க அவர் துடியாய்த் துடித்த வரலாற்றினை நாடு நன்கறியும். கொள்கை கோட்பாடு என்றால் என்ன என்று கோட்கும் ஒருவர். எப்படித்தான் தமிழ்மக்களால் சென்ற தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டார் என்பது எம்மால் புரியமுடியாதபுதிராக விளங்குகின்றது. இவரின் பழைய வரலாற்றை நன்கறிந்த நிலையிலும் மறதிக்கு ஆளான மக்கள் அவரை நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்ததுதான் எமக்கு வியப்பைத் தருகின்றது.

வரலாற்று உணர்வுள்ள எவரும் ஒரு தலைவர் செய்த தவறினை மன்னிக்கலாம். ஆனால் மறக்கமுடியாது. மன்னிப்பது வேறு



# சங்கரியின் அரசியல் நகர்வுகள் காட்டிக்கொடுக்கும் செயற்பாடே!

மறப்பது வேறு. எத்தகைய தகுதியுடன் நாம் இருக்கிறோமோ, அதற்கு ஏற்ற தலைமைபீடம்தான் உருவாகும். இதை ஆங்கிலத்தில் people get the leade ship they deserve என்று கூறுவர்.

வாழ்வா சாவா என்று எம் விடுதலைப்புலிப்போராளிகள் போராடி 17 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிர் துறந்துள்ளனர்? இவ் 20 ஆண்டுப் போராட்டத்தில் மடிந்த பொதுமக்களின் தொகை 80 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. சிங்களப் பேரினவாதத்திற்கு ஆளாகியிருந்த சிங்களத் தலைவர்கள் இன்று தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த முன்வந்துள்ளார்கள் என்றால் அதற்குக் காரணம் தமிழ்மக்கள் மீது அவர்களுக்குள்ள பற்றோ பாசமோ அல்ல. ஈழத்தமிழ் மக்கள் பட்டதுன்பங்களை உணர்கின்ற அளவிற்கு சிங்களத் தலைவர்கள் மனமாற்றத்திற்கு உள்ளாகியுளார்கள் என்று நம்புவதற்கு எமது மக்கள் அறிவிலிகள் அல்ல. தம், உயிரை துச்சமென மதித்து மண்ணிலும், விண்ணிலும், கடலிலும் புலிகள் நடாத்திய போராட்டமானது இனிமேல் அவர்களை வெல்லமுடியாது என்ற எண்ணத்தை சிங்களத் தலைமைப்பீடத்திற்கு ஏற்படுத்தியுள்ளது.

வரலாற்றில் பதியத்தக்க வளவு வன்னிச்சமரிலிலும் ஆனையிறவிலும் புலிகள் ஈட்டிய வெற்றி இனிமேல் புலிகளுடன் மோதிப் பயனில்லை என்ற கருத்தினை சிங்களவர் உணரத்தொடங்கினர். இத்தாக்குதலின் காரணமாக நாட்டின் பொருளாதாரம் மீட்கமுடியாதளவு படுகுழியில் வீழ்ந்துள்ளது. எனவே தான் வேறுவழியற்ற நிலையில் சிங்களத் தலைமைப்பீடம் புலிகளுடன் பேச முன்வந்தது. பதவிப் பற்றுமிக்க ஆனந்த சங்கரிக்கு புலிகளின் வீரதீர தியாகங்களைப் புரிந்து கொள்வது கடினம்தான். முன்னர் ஆழும் சிங்களக் கட்சி துணைசபாநாயகர் பதவி எனற தூண்டிலை வீசியபோது இப்பதவியின் சுகபோகத்தை அனுபவிக்கத் துடிப்பவர் ஆனந்த சங்கரி இப்பதவிக்கு நான் தகுதி இல்லையா என்று அவர் விடுத்த வினா அவரது நட்பாசையை எடுத்துக்கட்டுகிறது.

"புலிகள் ஏற்படுத்த விரும்பும் தீர்வே சகல தமிழ்மக்களிற்கும் ஏற்புடையது. பதவிக்காக இனத்தைக் காட்டிக்கொடுக்க மாட்டோம். எந்த தியாகத்திற்கும் தயார்" 4தமிழ் கட்சி கூட்டமைப்பின் பத்திரிகையாளர் மாநாட்டில் ஆனந்த சங்கரி" என்று தலைப்பிட்டு ஈழத்தின் அனைத்து செய்தி இதழ்களிலும் 2001-ஒக்டோபர்-31ம் திகதி வெளிவந்த செய்தியை அவர் வசதியாக மறந்துகொள்ள முடியும். ஆனால் அவரின் வசதிக்காக நாம் அதனை மறப்தற்கு ஆயத்தமில்லை, வரலாற்றுச் செய்தி அனைத்தையும் ஆவனப்படுத்தும் எம்மை எவரும் ஏமாற்றமுடியாது. எம்மை ஏமாற்ற முயல்பவர்கள் ஏமாரின் அவர்களுக்காக நாம் இரங்குகிறோம்.

"பாவிகள் இரட்சிக்கப்படுவர்" என்று விவிலியம் பேசுகிறது. ஆனால் அனைத்துப் பாவிகளும் இரட்சிக்கப்பட்டதாக வரலாறு இல்லை. சில பாவிகள் தம் தவறை உணர்ந்து திருந்தியதுண்டு அவர்களும் எடுத்த எடுப்பில் திருந்தியதாக வரலாறு இல்லை. அவர்களிடம் படிப்படியாகத் தான் நாம் மாற்றம் காணமுடியும். எல்லையை மீறிய இரக்க உணர்வுள்ள இயேசுகிறீஸ்த்துவினாலும் இவரை மீட்பது கடினம்.

"சொல்லப்பண்படுபவர் சான்றோர்" கரும்பு போல் சொல்லப்பயன்படும் என்பது வள்ளுவரின் பொருட்பாவில் கயமை அதிகாரத்தில் காணப்படும் கருத்து. ஆனந்த சங்கரியை சொல்லப்பண்படும் சான்றோராக கொள்ள மறுக்கிறோம்.

இப்பொழுது இந்தியாவினால் ஆட்டிவைக்கப்படும் தஞ்சாவூர்ப் பொம்மையாக விளங்குகிறார் ஆனந்த சங்கரி. இவர் ஊடாக யாழ்.நூலகத்திற்கு இந்திய தூதரகம் நூல்கள் அன்பளிப்புச் செய்தது எம் அச்சத்தை மேலும் வலுப்பெறச் செய்கிறது. இவரின் கேள்விக் குறியான உறவுகள் பலவுண்டு அவற்றை இப்பொழுது நான் கூறவிரும்பவில்லை.

ஈழத்தமிழ் அரசியல் தூய்மை பெறவேண்டுமெனில் தெளிவோடும், துடிப்போடும் துணிவோடும் செயலாற்றும் தலைவர்கள் உருவாக வேண்டும். இதையடைய ஆனந்த சங்கரி போன்ற அரசியல் சந்தர்ப்பவாதிகளை அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

மா.க.ஈழவேந்தன்




# ஒரு பிரிதலின் பின்...!

ஆதிலட்சுமி சிவகுமார்

ஏங்கோ தூரத்தில் சேவல் ஒன்று கூவியது. அரவிந்தன் ஜீன்ஸ் சேட்டுடன் மல்லாந்து.... ஒரு கையை நெஞ்சிலும் மறுகையை தலைக்குக் கீழும் வைத்தபடி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான் மெல்லிய மின் விளக்கின் ஒளியில் சிவந்த அவன் முகத்தில் இப்போதும் ஒட்டியிருந்தது குழந்தைத் தனம் குனிந்து அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்த அன்ன முத்து- அவனின் தூக்கம் கலைந்து விடாதிருக்க மெதுவாக கதவைச் சாத்தி விட்டு வெளியே வந்தாள்.

நடு அறைக்குள் சின்ன வளும் அவள் கணவரும் குழந்தை களும் தூங்கிக் கொண்டிருந்தார்கள் குசினிக்குள் போய்.... கிணற்றடிக்குப் போகும் வாசல் கதவின் தாழ்ப்பாளை அகற்றியபோது.... சின்னவளின் குழந்தைகளைப்போல் ஓடிவந்து அவளுடன் அப்பிக்கொண்டது குளிர் காற்று.

இரவு முழுவதும் பனி கொடுகவைத்தது.

கட்டிலில் படுத்திருந்த அரவிந்தனை போர்வையால் மூடி விட்டாள் அவள் 'அங்க இதவிட சரியானகுளிர்... எங்களுக்குப் பழக்கமாப்போச்சு...'

போர்வையைச் சுருட்டி மறுகரையில் வைத்தான் அவன். அவன் பதினேழுவருடங்களுக்குப் பிறகு..... இப்போதுதான் ஊரிற் காலடி எடுத்து வைத்திருக்கிறான்.

கனடாவுக்கு அவன் போகும்போது.....அரும்பு மீசை யும்....ஒல்லியான உடல் அமைப்பும் கொண்டிருந்தான்.

இப்போது சினிமாப்படங் களில் வரும் சில கதாநாயகர்களைப் போல. அடர்த்தியான மீசையும் கட்டான உடலுமாயிருக்கிறான். மகனின் கம்பீரமான தோற்றத்தை நினைக்க அவளுக்குப் பெருமையாக வும் பூரிப்பாகவும் இருந்தது.

அவன் வந்து இறங்கியதும் உறவினர்கள் நலன் விசாரிக்க வென்று வந்து மொய்த்தார்கள் .

விரிந்த அவன் மார்பையும் நிமிர்ந்த அவன் தோற்றத்தையும் உறவினர்கள் கண்ணூறுபடுத்தி விடுவார்கள் என்ற பயம் அவளுக்கு. பிள்ளையார் கோயிலின் அதிகாலைப் பூசை ஆரம்பமணி அடித்தது. அன்ன முத்து அவசரமாய் பல்தீளக்கி கால் முகம் கழுவினாள் சுவாமி அறைக் குள் போய் வீபூதியைத் தொட்டுப் பூசிக் கொள்ளும்போது...... சில நாட் களுக்கு முன்னர்தான் வீட்டுக்கு அடித்த வர்ணப்பூச்சின் மணம் நாசிக்கு நுழைந்தது.

வீட்டை அவள் கண்கள் ஒருமுறை துளாவின.

இந்த வீடு....கனடா விலிருந்து அரவிந்தன் அவ்வப்போது அனுப்பிய பணத்திற்கட்டியது. மூத்த வள். கலாவுக்கு இந்த வீடு சீதனம். மூத்தவள் கணவன் குழந்தைகளுடன் நோர்வேயில்.

கழுத்தில் ஏதோ ஊர்வது போலிருந்தது. கையால் தடவிப்பார்த் தாள் அரவிந்தன் காரால் இறங்கியவு டன் அவள் கழுத்தில் போட்டுவிட்ட நாலரைப் பவுண் சங்கிலி.

சுவரில் தொங்கிக்கொண்டி ருந்த கண்ணாடியில் பார்த்தாள் மின்வெளிச்சத்தில் பளபளத்தது அது.

'என்ரபிள்ள.... எனக்கெண்டு ஆசையாய்க் கொண்டுவந்தது... சேலையின் சட்டைக்குள் விட்டுக் கொண்டாள் அந்தச் சங்கிலியை. குசினிக்குள் போய் கேத்திலைக் கழுவி தண்ணீர் நிரப்பி அடுப்பில் வைத்து மூட்டினாள். பனிக்குளிருக்கு அடுப்புச்சூடு இதமாயிருந்தது. உள்ளே சின்னவளின் கைக்குழந்தை சிணுங்குவது கேட்டது.

'அம்மா.....'


' ஓம்பிள்ளை.....'

'துஷிக்கு பால் கரைச்சுத் தாங்கோ..'

கேத்தில் தண்ணீரைத் தொட்டுப் பார்த்தாள் மெல்லிய சூடாய் இருந்தது.

'இந்தச் சூடு காணும்.....'

சூப்பிப் போத்தலைக் கழுவி... பாலைக்கரைத்து அதில் ஊற்றினாள்.



'இந்தா பிள்ளை....'

சின்னவள் இரவு உடுப் போடு எழுந்து வந்து சூப்பியை வாங் கிக்கொண்டு போனாள்... குழந் தையின் அழுகை நின்று போனது.

அன்னமுத்து குசினிக் குள்ளிருந்த கதிரையில் அமர்ந்தாள். அது பழைய கதிரை அதனால்தான் அதுவும் குசினிக்குள்ளிருந்தது.

'புள்ளையப்பாக்க அந் தாளுக்குத்தான் குடுத்து வைக் கேல்லை....' அவள் கண்கள் ஈரலித்தன.

அவளுடைய கணவன் துரைசிங்கம் ஊர்ப்பாடசாலையில் இரவுநேரக் காவலாளியாக நீண்ட காலம் வேலைசெய்தவர். ஆறு வரு ஷங்களாக சலரோகத்தால் பாதிக் கப்பட்டு... மூன்று மாதங்கள் பெரி யாஸ்பத்திரியில் ஒரேகிடையாய்க் கிடந்து இறந்து போனார்.

'குடிக்காம இருந்திருந்தா... மனுசன் இன்னுங் கொஞ்சக்காலம் இருந்திருக்கும்... அதுக்கு விதி இல்லாமல்போச்சு...'

அவள் நெஞ்சுக்குள் துயரம் கொப்பளித்தது. கண்கள் கலங்கின.

'மனுசன் சாகிற நேரம்... வீடு கூட இப்படியில்லை... வெறும் ஓலைக்கொட்டில்... நிலமெல்லாம் புழுதியடிச்சுப்போய்... கடைசியாய்... ஒரு சொட்டு....பால்பருக்கக்கூட அருகில ஆளில்லாம...'

அவள் சீலைத்தலைப்பால் கண்களைத் தேய்த்துத் துடைத்தாள்..

'அம்மா... என்னணசெய்யி றியள்...?'

சின்னவள் படுக்கையால் எழும்பிவந்தாள்...

'கொண்ணன் எழும்புறதுக் கிடையில ஏதும் சாப்பாடு செய்ய வேணும் பிள்ளை... என்ன செய்யிறது...?'

ம்..குழல் புட்டு அவிப்பமே... அங்க வெளிநாட்டில.. உதெல்லாம் சாப்பிட்டிருக்கமாட்டினம்..'

'அப்ப...நான் மாவைக் குளைக்கிறன்.நீ கெதியா முகத்தைக் கழுவிப்போட்டு வா....'

அடுப்பில் கேத்தல் பொங் கிக்கொதித்தது.

'அம்மா..முட்டுக்காய்த் தேங் காயை உடை யுங்கோ... அதுதான் புட்டுக்கு ருசியாய் இருக்கும்...'

அன்னமுத்து உடைத் துவைத்த தேங்காயை சின்னவள் திருவினாள். கிழக்கிலிருந்து பெரும் ஆரவாரத்துடன் சூரியன் உதயமாகிக் கொண்டிருந்தான். பனிப்புகையைக் கிழித்து ஒளிக்கதிர்கள் ஊடுருவி வீட்டினுள் நுழைந்துகொண்டிருந்தன.

ஒழுங்கையால் பாடசாலைப் பிள்ளைகள் சிறுசிறு குழுவாகப் போய்க்கொண்டிருந்தார்கள்.

வழமையாக தினமும் எட்டு மணிப் பூசைக்கு பூப்பிடுங்கவரும் வீரசிங்கம் பனிக்குளிரில் நடுங்கி நடுங்கி பூப்பறித்துக்கொண்டிருந்தான். அறைக்கதவை மெல்ல நீக்கி அன்ன முத்து எட்டிப்பார்த்தாள். இன்னமும் அப்படியே மல்லாந்து - நெஞ்சில் ஒருகையையும்... தலையின் கீழ் ஒருகையையும் வைத்து அரவிந்தன் தூங்கிக்கொண்டிருந்தான். அவனு டைய தலைகட்டிலின் மேற்புற விளிம்பிலும்.. கால்கள் அடிப்புற விளிம்பிலும் முட்டிக்கொண்டிருந் தன...

'இவன்தான் சரியாத் தேப்பனமாதிரி...நல்ல உசரம்.. தலைமயிரும் நல்ல கருமை...'

அவளுக்கு பதினேழு வருடங்களாக காணாத மகனையிட்டு பெருமை பொங்கிக்கொண்டிருந்தது.

'எட்டுமணியாகுது பிள்ள... இவன் தம்பி இன்னமும் எழும்பாமக்கிடக்கிறான்...'

'எணயம்மா... இப்ப அங்க இரவெண.. அதுதான் அவன் இன்னும் எழும்பேல்ல...'

அன்னமுத்து விறாந்தைக் குள்வந்து வெற்றிலைத்தட்டத்தை எடுத்து ஒருவாய் வெற்றிலை போட்டுக்கொண்டாள்...

அரவிந்தன் கொண்டுவந்த பயணப் பெட்டிகள் சுவரோரமாய் வரிசையாய் அடுக்கிவைக்கப்பட் டிருந்தன... அவற்றில் பூட்டுக்களும் தொங்கிக்கொண்டிருந்தன.

'சின்னவள்...'

'என்னணை...'

'உவ்வளவு பாரங்களை யும்... தம்பி என்னெண்டு பிள்ளை கொண்டுவந்து சேத்தவன்...'

'அவன் தூக்கிச் சுமக்கத் தேவையில்லையணை... பிளேனில போட்டு விட்டா... எயாப்போட்டில வந் திறங்கும்... பிறகு இஞ்சால வானில போட்டு கொண்டு வந்தது...'

'அப்பபிள்ள... ஆமி யள் ஒரு தொந்தரவும் தரயில்லையே...'

'வெளிநாட்டு பாஸ்போட்டை காட்ட...விட்டிட்டான்...'

'அம்மா...'

அரவிந்தன் ஓடிவந்து அன்னமுத்துவின் கழுத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டு கொஞ் சினான். அவளுக்கு மனதுக்குள் கூச்சமாயிருந்தது.

'கால்முகத்தைக் கழுவன் தம்பி.. தேத்தண்ணி ஊத்திக்கொண்டு வாறன்...'

'எனக்கு தேத்தண்ணி வேண்டாமம்மா... ஜூஸ் இருந்தா ஒருகிளாஸ்தாங்கோ... அதுபோதும்...'

'விடிய வெள்ளண... அந்தக் கறுமாதிய ஏனடாமோன... சுடச்சுடத் தேத்தண்ணிய குடி...'

அவன் சிரித்தபடி மீண்டும் அறைக்குள் போனான்.

'பிள்ளை சாப்பாடுகள் எல் லாத்தையும் மேசையில எடுத்துவை. தம்பி முகங்கழுவப்போட்டான்...'

மளமளவென்று குசினிக் குள்ளிருந்த உணவுகள் மேசைக்கு வந்தன. குழல்புட்டு. முட்டைப் பொரியல், வெந்தயக்குழம்பு, உள்ளி மிளகுச்சொதி,கப்பல் வாழைப்பழம்...

தொலைக்காட்சி நாடகத் தொடர்களில்வரும் சாப்பாட்டு மேசைபோல் இந்தமேசையும் அழகாக இருந்தது.

'அரவிந்தன் எழும்பி யாச்சோ...' கேட்டபடி சின்னவளின் கணவன்.

'ஓம்..'

இப்போது சின்னவளின் மூத்தவன் நான்குவயது நிரம்பிய சசி... சிணுங்கிக்கொண்டு வந்தான்...

'இஞ்ச வா தம்பி... அம்மா இஞ்ச நிற்கிறன்...'

குசினிக்குள்ளிருந்து வந்தது சின்னவளின் குரல்.

'அம்....மாஆ...' அவனின் அழுகை கூடியது...

'மாமா... உங்களக் கக்காப் பிள்ள எண்டு சொல்லப்போறார்... அழாதேங்கோ...'

குழந்தைக்கு நேற்றுப் பார்த்த அரவிந்தனின் முகம் நினைவு வந்திருக்கவேண்டும். அரவிந்தனின் அறையைத் திரும்பிப் பார்த்தது.

அரவிந்தன் குழந்தை களுக்கு நிறைய விளையாட்டுப் பொருட்கள் கொண்டு வந்திருந்தான். அவை எல்லாமே பற்றியில் இயங்குபவை. அவை இயங்கத் தொடங்கியதும் குழந்தைகள் வீரிட்டு அழுதன. அவற்றில் ஒளிர்ந்த வர்ண விளக்குகளைப்பார்த்துக் கண்களைப் பொத்தின.

'அங்க... இவங்கட வயசுப் பிள்ளையளெல்லாம் கொம்பியூட்டரில கேம்ஸ் விளையாடுதுகள்...' என்றான் அரவிந்தன்.

'இஞ்சநாங்கள்... உயி ரோடை இருக்கிறதே போதுமெண்டு இருந்தம்... இப்ப சமாதானம் வந் தாப்பிறகுதானே... இப்பிடி இருக் கிறம்...'

பதில் சொன்னவள் சின்னவள்.

'பிள்ளை... குடிக்கிறதுக்கு தண்ணி எடுத்துவைக்க மறந்து போனாய்...' சாப்பாட்டு மேசையை ஒரு தரம் பார்த்துவிட்டு... அன்ன முத்து மகளிடம் சொன்னாள்...

இப்போது சின்னவளின் கணவனும் குளித்துவிட்டு... சுவாமிப் படங்களுக்கு வைக்க கைநிறையப் பூக்களுடன் உள்ளே வந்தான்.

'ப்பா...ப்பா..' குழந்தை அவ னுடைய கால்களைக் கட்டிக்கொண்டது.

அன்னமுத்து குழந் தையைத்தூக்கிக்கொள்ள அவன் உள்ளே போனான். இப்போது அரவிந் தன் ஈரத்தலையை துடைத்துக் கொண்டு விறாந்தைக்கு வந்தான்.

நேரம் ஒன்பது மணியைக் கடந்துவிட்டிருந்தது. ஒழுங்கைக்குள் மீன்வியாபாரியின் ஊதுகுழல் ஒலித்த படி நகர்ந்தது.அரவிந்தன் மேசையி லிருந்த சாப்பாடுகளை ஒவ்வொன் றாகத் திறந்து பார்த்துக்கொண்டி ருந்தான். சேட்போடாத அவன்மார்பில் தங்கச் சங்கிலி ஒன்று பளபளத்தது.

'ஏய் ... என்ன இதெல் லாம்...' சின்னவளிடம் ஆச்சரியத் தோடு அவன் கேட்டான்.

'காலைச் சாப்பாடு.... உங் களுக்குத்தானண்ணா...'

'ஐசீ... எனக்கு இதெல்லாம் வேண்டாம்...'

'அப்ப... என்னவேணும்...?'

'ஒரு கிளாஸ் ஒறேஞ்ச் ஜூஸ் மட்டும் தா... அதுபோதும்...'

அன்னம்மாவுக்கு மனம் சுருங்கிப்போனது.

'என்னதம்பி... எவ்வளவு காலத்துக்குப்பிறகு ஊருக்கு வந்தி ருக்கிறாய்... அங்கை நெடுக கடைச் சாப்பாடுதானே தின்டிருப்பாய்... இஞ்ச வடிவாச்சாப்பிடன்...'

வார்த்தைகளால் மகனை வருடினாள் அன்னமுத்து.

'அம்மா... நான் அங்க போன நாளையில இருந்து... இஞ்ச திரும்பிவந்திறங்கின நாள்வரைக் கும்... காலைச்சாப்பாடெண்டா... எனக்கு ஜூஸ்தான்...'

'ஏன் தம்பி...?'

மகனின் முகத்தை வருத் தத்தோடு பார்த்தாள்.

'எங்களுக்கு அங்கை நேரமே கிடைக்காதம்மா.. அதோடை காசும் வீண்தானே... அந்தக்காசை மிச்சம் பிடிச்சா.. இஞ்ச அனுப்பிப் போடலாம்.. அங்க நிறையப்பேர் இப்பிடித்தானம்மா... நான் மட்டு மில்ல...'

அன்னம்மாவுக்கு தலை சுற்றிக்கொண்டுவந்தது மகனை இறுகப் பிடித்துக்கொண்டாள். கண் களில் மழை பொழிந்தது. ●

எதிரி தன்னை வென்றுவிடுவானோ என்று அஞ்சுகிறவனுக்குத் தோல்வி நிச்சயம். - நெப்போலியன்



# களச்சொல்

குழந்தையாய் இருந்தபோது என் சுட்டுவிரலைப் பிடித்து வெள்ளை வெளேரென்ற மணல் முற்றத்தில் 'ஆனா' எழுதப் பழக்கினாள் அம்மா.

என்னை வளைத்து இருக்கும் சுட்டுவிரல்கள் அனைத்தும் 'ஆனா' எழுதியவையே.

ஆனால்...

பல விரல்கள் பழைய மண்ணை மறந்துபோயின.

என்னால் முடியவில்லை.

தமிழைப் புறம்தள்ளி ஆங்கிலத்தைத் தமிழன் கொஞ்சுவது ஏன்?

தெருவில் நின்றழும் தமிழன்னையின் தேம்பல் கேட்கிறது.

நெருப்பில் தோய்கிறேன்.

என்றைக்கும் இப்படியான வேளைகளில் வாய்மூடி என் எழுத்துக்கள் இருந்ததில்லை. தமிழைத் தொடுவதும் என் உயிரைத்தொடுவதும் ஒன்றே.

காசி ஆனந்தன்.

# அவர்களும்... இவர்களும்...



எனது மூத்த அண்ணரின் இரண்டு பிள்ளைகளும் ஊருக்கு வந்திருந்தனர். இரண்டு பேரும் "சுவிஸ்"சில் பிறந்து வளர்ந்தவர் கள்.

மதியம் சமையல் செய்து சாப்பிட்டும் விட்டாயிற்று.

அடுப்பிற்குள் நெருப்புத் தணல்கள் நிறைந்து போய்க்கிடந்தன. அந்தத் தணல்களிலிருந்து இடையிடையே புகைவந்து கொணடிருந்தது.

அந்தப் புகை எப்படி? எங்கிருந்து எவ்வாறு வருகிறதென அடுப்பைக் கிண்டிக் கிழறி ஆராய்ந்து கொண்டிருந்தனர் அவர் கள் இருவரும்.

சிறு சிறு சுள்ளிகள், தடிக்குச்சிகள், கையில் கிடைத்த வேற பொருட்களையும் கொண்டு, காவலரண்கள் மண் அணைகள் அமைத்து ஆங்காங்கே இராணுவ வீரனைப் போன்று பிளாஸ்திக்கில் செய்யப்பட்ட உருவங்களையும் நிறுத்தி, தையல் நூல் சுற்றிவரும் உள் குழாயை எடுத்து முகாமின் ஓரிடத்தில் நிமிர்த்தி வைத்து அதன் மேலும் ஒரு இராணுவ உருவத்தை நிற்கப்பண்ணி எனது மகனும் மகளும் சேர்ந்து முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அருகால்போன என் காதுகளிற்குள் சுருக்கென வந்து விழுந்தன என் இளைய மகளின் வார்த்தைகள்.

அண்ணா! அந்த உயரத் தில இருக்கிற சென்றிக் காரனுக்குத் தெரியாமல் என்னெண்டு இதுக்குள்ளை "வேவு"க்குப் போகலாம்?!

ஆவரங்கால் சுதன்

## படித்ததில் பிடித்தது...



# பெண்

குருதிச் சிவப்பான சூரியனாய்
அவள் நெற்றியில்
அந்தப் பொட்டு
ஒளிர்கிறது.

அந்தப் பொட்டே
ஒரு இல்லம்தான்
ஒவ்வொரு கணமும்
அவளோடிருக்கிறது
அந்த இல்லம்.

ஒவ்வோர் நாளும்
குளிர்ப்பதற்கு முன்
நெற்றியிலிருந்து
கழற்றும் பொட்டை
குளியலறைக் கதவில்
ஒட்டுகிறாள்.

அதன் பின்
ஒரு தாயாக
ஒரு மருமகளாக
ஒரு மனைவியாக
அவள் இருப்பதில்லை.

அவள்
ஒரு பெண்ணாகி விடுகிறாள்
நித்திய இளமைகொண்ட...
நீரின் ஸ்பரிசங்களால்
கிளர்ச்சி கொள்ளும்...
இளம் பெண்ணாய்
ஆகி விடுகிறாள்.

இந்தப் பெண்
பூட்டிய கதவுக்குப் பின்னால்
அடைபட்டிருக்கிறாள்.

எனக்கோ அந்தரம்
அவள் என் மனைவி

அவளுக்குள் துளிர்க்கும்
புதிய ஜீவனை
நான் ஆராயவேண்டும்
கதவைத் திறக்க
மனது துடிக்கிறது.

ஹிந்தியில்:- வினோத் தாஸ்
ஆங்கிலத்தில்:- எர்மின் தல்வார்நீர்ஜா மிஸ்ரா
தமிழில்:- வின்சென்ற் புளோறன்ஸ்
ஆங்கில மூலம்:- Thr liltleMagazine

# காதலூரில் நான்

காலப்பெருவெள்ளத்தில்
ஏழு வாலிபப்படிகள் மூழ்கிவிட
தொலைந்துபோன இதயம்தேடி
மீண்டும் வருகிறேன் காதலூருக்கு.

பனியில் குளிர்ந்த பூவென
அன்றையைப்போல் இலங்குமா
இன்றுன் திருவதனம்.

உன் வீட்டண்டை நெருங்க நெருங்க
உள்ளக்கூட்டுக்குள் ஒலிக்கத்தொடங்கிற்று
என்றோ கேட்டு மறந்துபோன
உயிர உருகும் ஓசை.

நீலப்பாதிப்பு வெளுத்துப்போனதாகவும்
அசையும் முகில்கள் அடங்கிப்போனதாகவும்
பொய்முகம்காட்டி என்னி நகையாடுகிறது
தலைக்குமேல் வானம்.

பாவாடை காற்றாட மலர்ந்தும்மலரா
வைகறைமலர் அளகத்தில் ஆட
ஆரம் வீழுந்த ஆண்கிளியின் மொழுமொழுப்பாய்
என் தோட்டத்து மலர்களின் வர்ணங்களைக் கழுவி
வெட்கக்காசுகளாக்கி என்மீது வீசியெறிந்தபடி
நீ என்னைக் கடந்துசென்ற எமது பள்ளிக்காலம்
அடடா...மழைத்துளிப் புழுதியாய்
மணக்குதடி இன்னும் மனக்கூட்டுக்குள்.

இந்தோ ஆறோ இருக்குமா
எமது பார்வைகள் பரிமாறிக்கொண்ட கணங்களும்
பகிர்ந்துகொண்ட வார்த்தைகளும்
இதோ வந்துவிட்டேன் உன் வாசலுக்கு.

"வாங்கோ"
ஏழாண்டுகள் ஆகியும் சில்லறைச் சிதறலாய்
அதே குரல்
ஆனால் நீ மட்டும் நீயாயில்லை.

வண்ணத்திகளுக்கே வர்ணங்களை
வாரியிறைத்த அவளெங்கே
புளுதியில் வீழுந்த பூவாய்
நிறமிளந்த நீ எங்கே
போரின் சவுக்கடிக்கு
பூக்கள் மட்டும் விதிவிலக்கல்லவே
உன் சரீரத்தில் போர்த்திய வெள்ளைப் புடைவை சொல்லிற்று
கணவன் காலமானதை
புடைவையில் மண்டிய கறைகள் சொல்லிற்று
உன் பொருளாதாரத்தை
கடந்தகால உருண்டைகள்
மிடறுகளில் சிக்கிக்கொண்டன
மௌனிகளானோம்.

காலப்பெருவெளியில் தனித்தனியே
ஏழு மழைக்காலங்களைக் கடந்திருக்கிறோம்
எம்மிடம் எஞ்சியிருப்பது
கொழுத்தியெறிந்த கோடையின்
கோரத் தழும்புகள் மட்டும் தான்.

இனியுமிங்கிருந்தால் மௌனக்குடங்கள் உடைந்து
கண்ணீர்துளிகள் கரைபுரளுமென்றஞ்சி
கும்பிட்டு வெளியேறினேன்
மண்முற்றத்தில் அம்மணாண்டிகளாக
மணல் குளிக்கும் உன்னிரு குழந்தைகள்
நெக்குருகிப்போனது நெஞ்சு
இப்படியாக ஓர் நாள் காதலூரில் நான்.

வேல். லவன்

# மனிதர்கள்

பூக்களை...
ரசித்துக் கொண்டிருந்தார்கள் மனிதர்கள்
பாதங்களின்கீழே...
மிதிபட்டுக்கொண்டிருந்தன
நேற்றைய பூக்கள் சருகாக.

# நாமில்லாவிட்டால்

மலர்களுக்கெல்லாம்
மகா கர்வம்
நாமில்லாவிட்டால்
இந்த மனிதர்களால்
சிரிக்கமுடியுமோ... என்னவோ?
நிலத்தின் கீழ்...
வேர்கள் மெல்ல முனகிக் கொண்டன...
நாமில்லாவிட்டால்...?

கு.பா. ரமணன்




# முயன்றால் முடியும்

ஒரு பெரும் காட்டில் சந்தோசமாகப் பல மிருகங்கள வசித்து வந்தன. அந்தக் காட்டில் எல்லா மிருகமும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. அந்தக் காலப்பகுதியில் சரியான மழை பெய்துகொண்டிருந்தது. ஒரு சிங்கம் பசியால் வாடி வதங்கி வேறு ஒரு காட்டில் இருந்து இந்தப்பகுதிக் காட்டுக்கு வந்தது. அப்போது அந்தக் காட்டில் வசிக்கும் மிருகங்கள் எல்லாம் இந்தச் செய்தியை அறிந்தவுடன் எல்லாம் ஓடிப் புதர்களில் மறைந்துகொண்டன. சிங்கம் மிருகங்களைத் தேடிக் களைத்துப் போய் ஓர் இடத்தில் படுத்து உறங்கிவிட்டது. எல்லா மிருகங்களும் பயத்தில் புதர்களில் பதுங்கி இருந்தன. சிங்கம் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தது. அப்போது எல்லா மிருகங்களும் சேர்ந்து என்ன செய்வது என்று ஆலோசித்தன. அப்போது முயல் சொன்னது, எனக்கு எல்லோரும் உதவி செய்தால் நான் சிங்கத்தைக் கொன்றுவிடுவேன் என்றது. எல்லா மிருகங்களும் சிரித்தன. இவர் என்ன செய்யப் போகிறார் என்று அப்போது நரி கேட்டது. என்ன உதவி செய்யவேண்டும். அப்போது முயல் சொன்னது. எனக்கு அறுந்த கயிற்றுத் துண்டு தாருங்கோ என்று சொன்னது.



நீங்கள் தந்துவிட்டு அந்தப் பெரிய பாளிக்குப் பக்கத்தில் உள்ள புதர்களில் மறைந்து இருங்கள் என்று முயல் சொன்னது. எல்லா மிருகங்களும் சரி என்று கேட்டுக்கொண்டு போய் மறைந்து கொண்டன. அப்போது முயல் ஒன்றும் தெரியாதது போல் அழுதுகொண்டே இருந்தது. முயலைக் கண்ட சிங்கம் பெரும் சந்தோசத்துடன் பசியில் இருந்த சிங்கம் முயலையாவது பிடித்து உண்போம் என்று முயலைக் கூப்பிட்டது. முயலோ அழுது கொண்டே போனது. ஏன் முயலே அழுகிறாய் என்று கேட்டது. முயல் சொன்னது நான் ஒரு ஒட்டகம் கொண்ணந்தனான். அதைச் சிங்கம் நின்று பறித்துக் கொண்டது என்று முயல் சொன்னதை நம்பியது சிங்கம். யார் அவன் நான்தான் இந்தக் காட்டுராசா என்று உரத்துப் பேசிக் கொண்டே முயல் செல்லும் பாதையில் போனது சிங்கம். முயல் அந்தப் பெரிய கிணத்தைக் காட்டியது. சிங்கத்துக்குக் கோபம் வந்தது. முயலைப் பார்த்துச் சிங்கம் கேட்டது. என் நிழலைக்காட்டி என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா என்று சொன்னவாறு முயலுக்கு அருகில் வந்தது சிங்கம். இல்லை சிங்கராசா என்று முயல் சொல்ல, ஒழிந்து இருந்த நரி கத்தியது. அடே ஏலுமென்றால் என்னோடு வந்து போரிடு பார்ப்போம் என்றது. அந்தக் குரல் கேட்ட சிங்கம் ஏலுமென்றால் நீ வாபார்ப்பம் என்றது. அப்போ முயலைக் கேட்டது. என்னவென்று போகலாம் என்றது சிங்கம். அப்போது முயல் ஓடிவந்து பாயுங்கோ என்று சொன்னது. அதன்படி செய்தது சிங்கம். தண்ணீரில் முழ்கி இறந்து விட்டது சிங்கம். எல்லா மிருகங்களும் முயலைப் பாராட்டி மீண்டும் சந்தோசமாக வாழ்ந்தன.

**-யோ.தூயவன்**

## அம்மா

என் அருமை அம்மா.
என் மீது பாசமுள்ள
அம்மா எனக்கு உணவு
சமைத்து தருவார்.
உணவு ஊட்டிவிடுவார்.
உடைகள் துவைத்துத்
தருவார். பாடம்
சொல்லித்தருவார்.
பாட்டுச்சொல்லித்
தருவார். கதைகள்
சொல்லித்தருவார்.
எல்லா உயிர்களிடமும்
அன்பாய் இருக்கப்
பழக்குவார்.
எல்லோரிடமும்
பண்பாய்ப் பழக
வழிகாட்டுவார். என்
அருமை அம்மா நான்
வணங்கும் அம்மா
உண்மை பேசப்
பழக்குவார் உலகில்
உத்தமராய் நாம் வாழ
வழிகாட்டுவார் என்
அருமை அம்மா.

கிருஸ்ணகுமார்.கீர்த்தனா
தரம்-03B
கிளி/கிளிநொச்சி
மகாவித்தியாலயம்.

## பட்டம்

பட்டம் நல்ல பட்டமாம்
விண்ணில் பறக்கும் பட்டமாம்
பின்னே வாலும் தொங்குதாம்
அதன் அழகு கண்ணைக்
கவருதாம்.

காற்று அடித்த போது - பட்டம்
ஆடி ஆடிப் பறந்தது.
காற்று ஓய்ந்த பின்-பட்டம்
ஆடி ஆடி கீழே விழுந்தது.

கவிப்பிரியன்
(பா.தனுஷன்)
தரம்-07
c.c.t.m.s
வவுனியா.

## வண்ண மலரே

விதையிலிருந்து வளர்ந்த செடி
அரும்பாகி மொட்டாகி
அழகார்ந்த மலராகி
அர்ச்சனைக்கு வந்த மலரே
கண்கவர் வர்ணங்களில்
வகை வகையாய் பூத்து
வண்டுகள் ஈக்களை
விருந்துக்கு அழைக்கின்ற
மலரே எம் வண்ண மலரே

நிரோஜா
உடையார் கட்டு.

## சிரித்து சிந்திக்க

**ஒருவர்:-** மோட்டார் சைக்கிளிலை போறவர் ஏன் ஆடு கட்டிக் கொண்டு திரிகிறார் இப்ப ஆடு வியாபாரமோ செய்கிறார்.

**மற்றவர்:-** இல்லை யண்ணை அவற்றை மோட்டார் சைக்கிளுக்கு கோண் இல்லை யாம் அதுதான்.......

-அ.பூவண்ணா

## வாரம் ஒரு குறள்



"அறிவு" என்றால் நம்மைக் கொண்டு நடத்த வேண்டும். அவ்வாறு இல்லாத போது அதை அறிவு என்று சொல்வதில் பயனில்லை.

மனதைத் தறிகெட்டுப் போகாமல் அணை போடுவதுதான் உண்மையான அறிவு. ஏனெனில். மனம் போன போக்கில் போனால் அது தீய வழிகளையும் நமக்குக் காட்டி நம்மைச் சீருலைத்துவிடும். இந்த உண்மை எமக்கு ஏனோ புரிவதில்லை. அதனால்தான் மனதிற்குக் கடிவாளமிடாமல் வாழ எத்தணிக்கின்றோம். மனதை அடக்க நிச்சயம் அறிவுதான் உதவும். அல்லது மனது தீய செயல்களில் இறங்கித் துன்பமான செயல்களைச் செய்வதனால் தன்னையும பிறரையும் துன்பத்தில் ஆழ்த்திவிடும். அதனால் மனதை அடக்கி ஆழ்வது அறிவுதான். அறிவின் வழி செயற்பட்டால் துன்பமில்லை. இதனைத்தான்

"சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு"

என்று வள்ளுவப்பெருந்தகை மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.

## சொற்சிலம்பம் - 26

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பா | க் | தி | ணை | யூ | மு | மீ |
| தௌ | சீ | இ | ஞ் | ண | ரீ | ல் |
| ச | ழு | பே | மெ | ஓ | து | ம |
| பீ | ம | தே | லை | சோ | ல் | ஓ |
| ர | கீ | வ | க | ய | வீ | கு |
| ந் | ங | கா | மே | து | ங் | பா |
| ய் | ஆ | செ | டீ | தோ | லா | ல் |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 24 இன் விடைகள்

01. இலை.
02. காய்.
03. பழம்.

01. இறைச்சி,
02. முட்டை.

### சொற்சிலம்பம் - 23 இன் பரிசுக்குரியவர்

ம.டர்சிகா,
3ஆம் வட்டாரம்,
முள்ளியவளை.

### சொற்சிலம்பம் - 24 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. பொ.டினுஷன், முள்ளியவளை, வற்றாப்பளை.
02. கி.கிரிசாந் தரம்-05 கிளி/கிளிநொச்சி ம.வி.
03. ச.தனுஷா கிளி/கனகபுரம் ம.வி கிளிநொச்சி.
04. வே.மாதவமேஜர் மு/புதுக்குடியிருப்பு ம.வி புதுக்குடியிருப்பு.
05. இ.விஜயதர்சன், தரம்-05 அத.க.பாடசாலை குமாரசாமிபுரம.
06. க.லிங்கேசன் பண்டாரிகுளம், வவுனியா.

01. வீடு கட்டுவதற்குத் தேவையானவை.

01) ....................................
02) ....................................
03) ....................................

*சொற்சிலம்பம் -26,*
*ஈழநாதம்,*
*யாழ் சாலை,*
*கிளிநொச்சி.*

02. தென்னையில் இருந்து எவற்றைப் பெறுகின்றோம்.


01) ....................................
02) ....................................

பெயர் :- ....................................

முகவரி :- ....................................

....................................

## ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



விடைகள்
1. சிறிய போத்தல்
2. முடிவெட்டுபவரின் துணியின் கழுத்து
3. கத்தரிக்கோல்
4. சீப்பு
5. போத்தலின் குழாய்

தன்னம்பிக்கை இல்லாமையே, அதிருப்தி. மனத்துணிவின் பலவீனமே அது. - ரால்ஃப் வால்டோ எமெர்ஸன்

## புரிதலும் தெளிதலும்

### எப்போது மனங்களில் தூர் எடுக்கப்போகிறோம்

*வேப்பம்பூ மிதக்கும்*
*எங்கள் வீட்டுக் கிணற்றில்*
*தூர்வாரும் உற்சவம்*
*வருடத்திற்கொரு முறை*
*விசேஷமாய் நடக்கும்.*

*ஆழ்நீருக்குள்*
*அப்பா முங்க முங்க*
*அதிசயங்கள் மேலே வரும்.*

*கொட்டாங்குச்சி, கோலி,*
*கரண்டி,*
*கட்டையோடு உள்விழுந்த*
*துருப்பிடித்த ராட்டினம்,*
*வேலைக்காரி திருடியதாய்*
*சந்தேகப்பட்ட வெள்ளி டம்ளர்,*
*சேற்றிற்குள் கிளறி*
*எடுப்போம் நிறையவே.*

*சேறுடா... சேறுடாவென*
*அம்மா அதட்டுவாள்*
*என்றாலும்*
*சந்தோஷம் கலைக்க*
*யாருக்கு மனம் வரும்?*

*பகை வென்ற வீரனாய்*
*தலைநீர் சொட்டச் சொட்ட*
*அப்பா மேல் வருவார்.*

*இன்றுவரை அம்மா*
*கதவுகளின் பின்னிருந்துதான்*
*அப்பாவோடு பேசுகிறாள்.*
*கடைசிவரை அப்பாவும்*
*மறந்தே போனார்*
*மனசுக்குள் தூரெடுக்க.*

இந்தக் கவிதை நா.முத்துக்குமாரின் "பட்டாம் பூச்சி விற்பவன்" என்ற கவிதை நூலில் வெளிவந்ததாகும்.

இங்கே இந்த கவிதையின் மூலம் கடந்த திங்கட்கிழமை நடந்த சர்வதேச மகளிர் தினத்தையிட்டு பெண்கள் தொடர்பான சில விடயங்களை மனதில் நிறுத்துவது அவசியமாகும்.

ஏனென்றால் இன்று பெண்களின் ஆளுமையும், அவர்களின் ஆற்றலும் உலகின் உச்சப் புள்ளிவரை எட்டிவிட்ட போதும் எங்களுடைய சமூக மற்றும் குடும்ப வாழ்வியலில் பெண்களுக்கான பங்கு என்பது மனதளவில் ஒன்றும் நடைமுறைகளில் இன்னொன்றுமாகவே இருக்கிறது.

பெண்களின் ஆளுமைகளிற்கான அங்கிகாரம் என்பது அது சமுதாயத்தின் நகர்விசையில் அதற்கான தூண்டுதலுக்கு அவசியம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

அதுவே தலைமுறை தலைமுறையாக பெண்களுக்குள் கடத்தப்பட்டு வந்த, மறுக்கப்பட்ட அங்கிகாரங்களை அல்லது ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கை களைந்து புதிய பயணத்திற்கான தூண்டல் விசையாக அமையும் இதன்மூலம் புதிய சமுதாயத்தின் வளர்ச்சிக்கு வித்திடக்கூடியதாக இருக்கும்.

இந்த நிலையில் ஆணாதிக்க மனோபாவங்களிலிருந்தும் பெண்கள் தொடர்பான மாற்றுக்கருத்துக்களிலிருந்தும் விடுபட்டு புதிய உலகை நோக்கி எல்லோரும் பயணிக்கமுடியும். இன்று அதிகரித்துச் செல்லும் பெண்களின் வளர்ச்சி தொகையே நாளை உலகின் புதிய மாற்றத்துக்கான கருத்தை உருவாக்கக்கூடும்.

இந்த நிலையில் சமுதாயத்திலுள்ள ஆண்களின் மனசுக்குள் தூரெடுக்கவேண்டிய அவசியத்தை புரிந்துகொள்ளவேண்டும் அதுவே மகளிர் தினத்தில் நாம் எடுக்கும் சபதமாகவும் இருக்க வேண்டும். இவை விடிவின் திசைநோக்கிய பயணத்திற்கு அவசியமாகும்.



——வேழினி




### தொடர் - 09

முதல்நாள் பிற்பகல், அபுதாபி விமான நிலையத்தின் காத்திருப்பு மண்டபம் என்ற அந்தப் பளிங்கு மாளிகையில் பதினொரு மணி நேரத்தைப் போக்க முனைந்து கொண்டிருந்த வேளையில், கென்யாவில் எங்கள் பயண ஒழுங்ககளைப் பார்ப்போமேயென்று-கொழும்பில் 'என்கா' தந்திருந்த அச்சிட்ட பயண ஒழுங்கை எடுத்துப் புரட்டக்கொண்டிருந்தேன். அது கைக்குள் கிடைத்தபின், அப்படி உட்கார்ந்து ஆறுதலாகப் பார்க்க நேரங்கிடைத்தது, அதுதான் முதல் தடவை அதைப்படித்துதான் தாமதம் புதிதாக ஒரு பயம் பற்றிக் கொண்டது! நாங்கள் கென்யாவில் பயணஞ்செய்யப்போகிற ஆறுநாட்களில் ஐந்து இடங்களுக்குப் போக வேண்டியிருந்தது. மொத்தம் 1005 கி.மீ.தூரத்தை 16.5 மணித்தியாலத்தில் கடக்க வேண்டுமென்று திட்டம்: அதாவது, மணித்தியாலத்திற்கு,சாரசரி அறுபது கிலோ மீற்றார்: வேகம்! உதாரணமாக, நைரோபியிலிருந்து கென்யமலைக்கான 200 கி.மீற்றரை மூன்று மணி நேரத்தில் கடப்பதாகத் திட்டம். எங்களுக்குகென்றே ஒரு தனிவாகனம் , ஓட்டுநரும் வழி காட்டியுமான ஒருவருடன் தரப்படுமென்பது தெரிந்திருந்தது. என்றாலும் மேடும் பள்ளமும், கல்லும் முள்ளுமான காட்டுப்பாதை- மலைப்பாதையெல்லாம் இந்த வேகத்தில் ஒரு முரட்டு ஆப்ரிக்கட்றைவர் செலுத்தப் போகிற வாகனத்தில் போகவேண்டியிருக்குமே என்ற நிலைமையும், ஆபிரிக்காவில் அடிக்கடி நிகழ்கிறதாகக் கேள்விப்பட்டிருந்த கோரமான சாலை விபத்துக்களைப் பற்றிய நினைவும் வந்து (அப்படியொரு விபத்தை, பின்னர் திரும்பும் வழியில் உண்மையிலேயே காண நேரிட்டது) லேசாக வியிற்றில் ஏதோ செய்தது. எங்காவது அடிகிடிபட்டு, அறிவு நினைவில்லாமல், கென்யக்காட்டின் ஏதோ ஒரு மூலையில் ஒரு ஆஸ்பத்திரியில், எவ்வளவுகாலமென்று தெரியமல்



கிடக்கவா, இந்தப் பயணம்.

என் பயத்தை, வழமைபோல் பக்கத்திலிருந்த செல்வாவிடம் சொன்னேன். அவரும் தமது வழமையான அமைதிச்சிரிப்பை உதித்தார்.

'சீச்சீ! அப்படியெல்லாம் நடக்காது.'

எனக்கு அப்போது அவரைப் பார்க்கப் பாவமாயும்,என்மேல் கோபமாயும்மிருந்தது!

'சும்மா இருந்த உங்களையுமெல்லோ இந்த ஆபத்துக்குள்ளை கூட்டிக் கொண்டு வந்து மாட்டிவிட்டிடன்!'

எனக்கு இந்தப் பயண வாய்ப்புத் தரப்பட்ட போது, இரண்டுபேருக்கு என்று தந்திருந்தார்கள்: அதாவது இன்னுமொருவர் என'னோடு வரலாம்! முன்பின் தெரியாத முரட்டுக் காப்பிரி தேசம், அத்தோடு முன்னர் குறிப்பிட்ட ஈராக் போர், ஸார்ஸ் பயம்- இவற்றாலெல்லாம்: என்னோடு வரப் போகின்றவர் இதற்கெல்லாம் ஈடுகொடுக்க போகிறவராக இருக்கவேண்டுமே என்றிருந்தது! அதோடு, என்னுடன் ஒத்துப் போகக்கூடியவராகவும், செல்வாவின் நினைவு வந்தது- என் நீண்ட கால நண்பர், கட்டடத்திணைக்களத்தில் ஒன்றாக வேலை செய்தவர். கேட்டேன், சந்தோசமாக ஒப்புக்கொண்டார்-அடுத்தநாள் நிச்சயம் செல்வதாகக்கூறி. அப்படியே சொல்லவும் சொன்னார்.

இப்போது செல்வா சிரித்துக் கொண்டிருக்கிறார். எனக்கென்றால் சிரிப்பு வரவில்லை. பெயரறியா ஒரு ஊரின் ஆஸ்பத்திரியில் இரண்டு பக்கத்துப் பக்கத்துக் கட்டில்களில் நானும் செல்வாவும் 'பண்டேஜ்'களுடன் படுத்திருக்கிற காட்சி மனதில் ஓடிக்கொண்டிருந்தது! கூடவே, நான் 'பெஸிமிஸ்ற்' ஆகிக் கொண்டிருக்கிறானோ என்ற கவலையும்! அதீத எச்சரிகை உணர்வுகள் கூட எதிர் மறையாகிவிடுமோ? 'நீங்கள், யோசிக்கிறது கூட!',என்றார் செல்வா சிரிப்பை நிறுத்தாமலே, என் நினைவோட்டத்தை ஆமோதிக்கிற மாதிரி. 'வாருங்கோ, இரண்டு கோப்பி குடிச்சால் கொஞ்சம் உசார் வரும் ' என்று இழுத்துக்கொண்டு போனார். கோப்பி குடித்துவிட்டு வந்ததும்: இந்த விலைக்குக் கோப்ப குடித்தோமே என்ற கவலையும் சேர்ந்து கொண்டது!...

இப்போது இந்த முற்பகல் நேரத்தின் பளிச்சிட்ட வெளிச்சத்தில், பரந்து கிடக்கிற சமதரையில் கண்ணுக்கெட்டிய தூரம்வரை ஓடி மறைகிற அகன்ற தார்ச்சாலையில் வேகம்மே தெரியாமல் வழுகும் வாகனம் பேசிக்கொண்டே வந்தாலும் நிதானந் தவறாமல் அதைச் செலுத்துகிற அயூப்! நேற்றைய பயம் வந்த நினைவுகூட இல்லை, இப்போது இனிமேல் எப்படியோ....

சாலையின் இருமருகிலும் அவ்வப்போது சிறுசிறு குடியிருப்புக்களும் சிறிய தோட்டங்களுமாய் மாறிமாறிப்போயின. குடியிருப்புகளிலிருந்த வீடுகள் சீமேந்துக்கட்டடங்கள் சிறிய அமைப்புகள்- அநேகமாகத் தகரக்கூரை வேய்ந்திருந்தன. ங்குயின் கதைகளில் வருகிற 'திங்கார' என்னுங் கொட்டில்களைக்காண நாட்டுப்புறம் நோக்கிப்போக வேண்டும் போலும்.

'இது ஜூஜா', ஏரியா, என்றார் அயூப்.

'அது என்ன?'

'தகர அலுவலகங்களில் வேலை பார்க்கிற ஆட்களின் குடியிருப்புக்கள் காலை ஐந்து மணியிலிருந்து எட்டுமணிவரை இந்தப்பாதையில் நிறையப்பேர் நைரோபியை நோக்கி நடந்து கொண்டிருப்பார்கள்....?'

பத்தைத்தாண்டிய அந்த வேலையில் தெரு அமைதியாயிருந்தது. நகர் நோக்கி விரையும் வாகனங்களைத்தவிர.

'அந்தத் தோட்டங்களைப் பாருங்கள் அயூப்காட்டிய திசையில் பார்த்தோம் சிறியதுமில்லாத. பெரியதுமில்லாத- எங்கள் கணக்கில் ஐந்தாறு பரப்பு என்று சொல்லக்கூடிய-காய்கறித் தோட்டநிலங்களில் எட்டுப்பத்துப் பெண்கள் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருத்தார்கள்.

'குழுவேலை: ஒவ்வொருவர் நிலத்திலும் எல்லோரும் முறைவைத்து செய்வார்கள்....'

'அதுதான் வழமையா?

'அப்படித்தான்'

கூட்டுறவின் ஒரு வடிவம்!

இருந்தாற்போல தொலைத்தொடர்புக்கருவிஒன்று கரகரத்தது.

'எக்ஸ்கியூஸ்மி....' என்று பேச்சை நிறுத்தினார் அயூப். அப்போதுதான் கவனித்தேன், அவரின் முன்னால், தலைக்கு மேலாக ஒரு வானொலிக் கருவிபொருத்தியிருந்ததும். இடதுகையை மெல்ல உயர்த்தி அதில் தொங்கிய ஒலிவாங்கியை எடுத்து வாயருகில் வைத்துக்கொண்டு ஏதோ பேச ஆரம்பித்தார். வானின் பின்னால் உயரமாகப் பொருத்தியிருந்த அன்ரனாவை- அது வானுடன் மோதிக் கொள்ளாமல் ஒரு ரென்னிஸ் பந்தும் அதைச்சுற்றிக் கொழுவியிருந்தது- அப்போது கண்டது நினைவு வந்தது இந்தத் தொலை தொடர்பு வசதியால், நாட்டின் எந்த மூலையிலிருந்தும் எந்தக் காட்டு வெளியிலிருந்தும் தங்கள் தலைமை அலுவலகத்துடனும் இதே போல சுற்றுலாப்பயணிகளைச் சுமந்து கொண்டு எங்கெங்கோ விரைந்து கொண்டிருக்கிற சக வாகனங்களுடனும் தொடர்பு வைத்துக்கொள்ள முடிகிறது என்று அயூப் விளக்கினார். ஏதாவது அவசரம், ஆபத்து, என்றால் உதவி உடனேயே வந்துவிடும்! இப்படியெல்லாம் இருக்கையில்தானா நேற்று அந்தப் பயம் பயந்தேன் என்றிருந்தது! இந்த 'ஸஃபாரி' வான்களில் தொலை தொடர்புக் கருவிமட்டுமன்றி வேறு பல முன்னேற்பாடுகளுங்கூடச் செய்திருந்தார்கள். போதுமான அத்தியாவசிய உதிரிப்பாகங்கள். ஒவ்வொரு நாளும் தங்குமிடத்தில் 'ஸேவிஸ்' செய்து கொள்ளும் வசதி: தவிர, காட்டு மிருகங்களையும் மிக அருகில் பயமின்றிச் சென்று பார்க்கக் கூடியதாக, கூரையின் ஒருபகுதி உயர்த்தி விடக் கூடியதான அமைப்பு. 'ஹச்' என்ற இந்தப் பலகணி,எனக்கு முன்னர் பழைய மொடல் ஒஸ்ரின் கார்களிலும் இதேபோன்ற திறக்கும் அமைப்பும் இருந்தமையை நினைவூட்டியது. இந்த ஏற்பாடுகள் யாவற்றிலும் முக்கியமானது. அந்த வாகன ஓட்டுநரின் தேர்வு சிறந்த சாரதி, சிறந்த மெக்கானிக்காவும் புத்தி சாதுரியம் மிக்கவராகவும், வெளிநாட்டு மொழி ஒன்று தெரிந்தவராகவும் நற்பண்பும் இனிய சுபாவமும் கொண்டவராகவும் இருக்க வேண்டுமென்பதில் இந்த சுற்றுலா முகவர்கள் மிகுந்த கவனஞ் செலுத்துவதாகத் தெரிந்தது ஏனேனில் தங்களிடம் வருகிற பயணிகளை இந்த ஓட்டுநர்-வழிகாட்டியின் பொறுப்பிலேயே அவர்கள் ஒரு வாரமோ,பத்தநாட்களோ விட்டுவைக்க வேண்டியுள்ளது. இந்த முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளில் ஒன்றாக அயூப் வசம் துப்பாக்கி ஏதாவது இருந்ததா என்கிற முக்கிய கேள்வியை அவரிடங்கேட்க வேண்டுமென்று அங்கிருந்த நாட்களில் பலதடவைகள் நினைத்தும் கடைசியில் நடந்தது, கேட்க மறந்தமைதான்!

(தொடரும்)

## தமிழுக்குத் தாலாட்டு

தமிழே நீயுறங்கு- தமிழ்
அழிந்தே போயிற்றெங்களூரிலென்று
ஒளிருமாங்கில அறிவுலகை
புகழ்ந்து பாடியே நீயுறங்கு.

தமிழே நீ கண்வளராய்- தமிழ்
தெரியா சில சொற்களுளதென்றே
அறியுமச் சொல்லாங்கிலமாய்
அவனியிலுண்டென்றே கண்வளராய்.

தமிழே நீ நித்திரை செய்- எங்கள்
தமிழர் தம் பண்பாடுமருகுதென்றே
புணருமன்னியர் பாணிகளை
கண் காணாது நீ நித்திரை செய்.

சுபா ஜெகநாதன்.



## நட்பு

நட்பு என்னும் நந்தவனத்தில்
நான் கண்டவையில் அதிகம்
பூக்களை விட முட்களே
இருக்கின்ற பூக்களும் கூட
வாசம் வீச மறுப்பவையும்
முட்களோடு முட்களாக
விஷம் ஊட்டத் துடிப்பவையே.
இன்று அவை பூக்களாகவும்
நாளை அவை முட்களாகவும்
இந்த வர்க்கமும் இருக்கின்றது
இவற்றில் அடங்காத மலர்கள்
இருந்தால் அதை நான்
வரவேற்கின்றேன்.

ஆறுமுகம்-ஆனந்தி

## அகலைவள்

அன்பின் சிகரமாய்
ஆசையின் முத்தாய்
இதயத்தின் நாளமாய்
சுகத்தின் வடிவமாய்
உண்மையின் உயிராய்
ஊக்கத்தின் உத்தமியாய்
எளிமையின் தனித்தன்மையாய்
ஏழ்மையின் இலக்கணமாய்
ஐயமின்றி வளர்ப்பவளே
ஒரு நாளும் மறவோம் மறவோம்
ஓதுகின்றோம் உண்மையாய்
சொல்கின்றோம்
ஔவையாக வந்து ஆறுதல்
தருவாயா?

சு.நிலா



## சமாதானம்

வதன மதி பூத்த சமாதானமே
விஞ்சி அழும் எனக்கு விடைதருவாயா
கெஞ்சி அழைக்கின்றேன் கேலிசெய்யாதே.
நித்தம் உன்னை நினைத்து
நின்மதி தனையிழந்து
செத்து மடிகிறேன் தந்துவிடு
சமாதானத்தை சுதந்திரமாக வாழ்வதற்கு.


S.நிருஷனா

## தமிழீழம்

உயர்நிலை பெற்றுவிளங்கும்
உன்னத தலைவனும்
களமுனையில் கயவரை பந்தாடிய
கட்டளைத் தளபதிகளும்
பொங்கி எழும் வீரம் கொண்ட
தங்க தலைவனின் பிள்ளைகளும்
மானப் போர் வெல்வதற்கு
வலுச்சேர்த்த பொதுமக்களும்
திக்கெட்டும் வாழ்கின்ற தமிழர்
நெஞ்சமெங்கும் சுடர்கின்ற
மாவீரர்களும்
வாழ்கின்ற நந்தவனம்...

க. முருகானந்தன்.

## ரோஜாவின் புலம்பல்



எப்போது விடியும் என
எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்
மங்கையர் தலையில்
குடியிருப்பதற்காகவோ - அல்லது
காதலர் கைகளில்
தவழ்வதற்காகவோ அல்ல
எம் மண்ணிற்காக மரணித்த
மாவீரப் புனிதர்களின் பாதங்களில்
புரள்வதற்காக.

சி.மதுரா

**நின்மதி**
சோக வானில்
தோன்றாத நிலவு.

**திருக்குறள**
வார்த்தை மழைத்துளி
அர்த்தம் பெரும்கடல்.

**பலவீனம்**
இன்பங்களுள் மறைந்து
துன்பங்களில் வெளிப்படுவது.

**உறவுகள்**
இரத்தம் உறுஞ்சுமட்டும்
ஒட்டியிருக்கும்
உண்ணிகள்.

**தாஜ்மகால்**
காதலின் சின்னம்.

**காதல்**
உலக உயிர்களின்
ஒற்றைச் சூரியன்.

கு.தவசீலன்

## சொல்ல வேண்டி வந்த பொய்கள்

நானும் சுகியும் நல்ல நண்பிகளாக இருந்தோம். எனது பெயர் சுதா, அவளுக்குப் பெயர் சுகி பெயரிலேயே எங்கள் ஒற்றுமை தெரிகிறது என எல்லோரும் கூறுவார்கள். படிப்பிலும் சரி, விளையாட்டிலும் சரி திறமையாக இருப்பதால் ஆசிரியர் தொடக்கம் சக மாணவர்கள் வரை அதிக விருப்பம் எங்கள் இருவர் மேலும் கொண்டிருந்தனர்.

எமது இருவரினதும் வீட்டிற்குமான இடைத்தூரம் 10கி.மீ. நாங்கள் ஆண்டு 01 தொடக்கம் இன்றுவரை பாடசாலை நண்பிகளாகவே பழகிவருகிறோம். எனக்கு சுகியுடைய வீடு தெரியாது சுகிக்கும் எங்களுடைய வீடு தெரியாது.

தற்போது நாங்கள் இரண்டு பேரும் ஆண்டு 5 புலமைப்பரீட்சை எழுதுவதற்காக ரீயுசன் ஒன்றுக்கு சென்று படிக்கிறோம். ஒரு நாள் ரியூசனுக்கு சென்ற போது எங்களுக்கு அன்று வகுப்பில்லை. என சொல்லப் பட்டது. சுகி என்னைப்பார்த்துச் சொன்னாள். உங்கட வீடுதானே கிட்ட இருக்கு போய் வருவோம் என்றாள். எனக்கோ அம்மாவின் கட்டளை இந்தக் காலப்பகுதியில் யாரையும் வீட்டுக்கு கூட்டி வரக்கூடாது. எனவே என்ன செய்வது எனத்திண்டாடினேன்.

கூட்டிப்போக மாட்டேன் என்றால் இவளது நட்பை பிரிய வேண்டி வரும். கூட்டிச் சென்றால் அம்மாவிடம் அடி வாங்கவேண்டி வரும். இருபக்கமும் பாதகமில்லாமல் செயற்படவேண்டியிருக்கு. என்ன செய்யலாம் எனச் சிந்தித்த நான் "எங்க வீட்டில இப்ப யாருமே நிற்கமாட்டினம் பிறகொரு நாளைக்கு அம்மாவும் தங்காவும் நிற்கேக்க கூட்டிற்றுப் போறேன்" எனக் கூறி இருவரும்சந்தோசமாக ரியூசனில் இருந்து எங்கள் எங்கள் வீடு நோக்கிச் சென்றோம்.

செ.கானப்பிரியா

## தோல்வியைப் பற்றிய பயமா?

மனிதனின் வாழ்க்கையில் வெற்றி என்பதை விட தோல்வி என்பதை இரட்டிப்பாகவே காண்கிறோம். இப்படியான தோல்வியை சந்திப்பவர்கள் தங்களுடைய நோக்கங்களை தமது வல்லமையால் அடையமுடியாமல் பயப் படுவார்கள். அடுத்து ஒரு செயலையும் செய்ய முன்வரும் போதுஇதிலும் தோற்றுவிடுவேனா என்கிற பயம் மனதில் எச்சரித்துக்கொண்டே இருக்கும். இதனால் இவர்கள் தமது இலட் சியத்தையும் வேறு கொள்கைகளையும் செய்வதற்கான விருப்பம் இருக்காது. இதனால் தமக்குக் கிடைக்கின்ற அரிய சந்தர்ப்பங்களையும் தட்டிக்கழிக்கிறோம். எமது வாழ்வில் நாம் விரும்பியோ விரும்பாமலோ நமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தாலும் நாம் வெற்றிபெற துணிவுதேவை. துணிவு மட்டும் போதுமா? தன்னம்பிக்கை வேண்டாமா? தோற்று விடுவேன் என்று எச்சரிக்கை உணர்வோடு ஒதுங்கி வாழாதீர்கள். ஏன் பயப்படுகிறீர்கள் ஒரு தடவை தோற்றுவிட்டால் என்ன என்று அடுத்த தடவை முயற்சி செய்யுங்கள். தோல்வி ஏற்பட்டுவிடும் என்ற எதிர்மறை கண்ணோட்டமுடைய மனோநிலையில் உள்ளவர்கள் தங்களுடைய குறைந்த தன்னியல்பு உயர்மதிப்பீட்டு மனப்போக்கினால் எதையும் செய்யமுடியாது. இதுதான் தோல்வி என்பது வெற்றியின் படிக்கல் என்று சொல்வார்கள்.எனவே நீங்கள் ஒவ்வொருவரும் தோல்வியைக் கண்டு பயப்பிடாதீர்கள். எதையும் தன்னம்பிக்கையுடன் ஏற்று வெற்றி காணுங்கள். நிச்சயம் வெல்வீர்கள்.



ஈழவிழி

## குறுக்கெழுத்துப்போட்டி - 61

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | | | | ■ | 07 |
| | 09 | | | ■ | 13 | |
| | 16 | 17 | | | ■ | |
| | | | ■ | 26 | | ■ |
| | 30 | | | 33 | ■ | 35 |
| ■ | | | ■ | | 41 | |
| 43 | ■ | ■ | 46 | | | |

பெயர்:-..............................
முகவரி:-..............................
..............................
..............................

### இடமிருந்து வலம்

01. நகை.
09. வாரம்.
13. கொடை.
16. பாம்பு (குழம்பியுள்ளது)
26. கடலில் தோன்றுவது.
30. பிள்ளையார்.
43. மலர்.
46. ஆகாயத்தில் பயணம் செய்ய உதவுவது. (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

01. கடவுள்.
02. வெளிப்படை.
07. இளைய சகோதரி (குழம்பியுள்ளது)
17. நிறம்.
33. திருநீறு (குழம்பியுள்ளது)
35. கனி.
41. தாய் (தலைகீழாகவுள்ளது)

### குறுக்கெழுத்துப்போட்டி இல.59 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. தேர்தல்.
06. ஆதி.
09. சுணக்கம்.
15. குஞ்சரம்.
20. பலா.
24. கோடை.
29. அத்தம்.
39. அகந்தை.
46. அன்னம்.

**மேலிருந்து கீழ்**

01. தேக்கு.
06. ஆம்பல்.
17. சகோதரன்.
23. கத்தரி.
28. நிலா.
29. அரிசி.

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.61
வெள்ளிநாதம்
ஈழநாதம்.
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.59 இன் பரிசுக்குரியவர்

K.சின்னத்தம்பி,
84/10 பாரதி வீதி,
திருகோணமலை.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.59 இன், பாராட்டுக்குரியவர்கள்.

01. யோ. நிசாந்தன், துபாற்கந்தோர் வீதி, துணுக்காய்.
02. ரபீக்கா,MY.ஜான், இல - 31,கல்லூரி வீதி, திருகோணமலை.
03. ந. சுசிதா, சமுதாய முன்னேற்ற நிலையம், கிளிநொச்சி.
04. இ. மேகலா, மு/பாரதி வித்தியாலயம், விசுவமடு.
05. த. கிசோபிகா, இல- 453 ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.
06. ச. ஜீபத், இல - 419 திருநகர், மல்லாவி.

# அதிகரிக்கும் சமூக விரோதச் செயல்களை தடுத்து நிறுத்துவது யார் பொறுப்பு?

பண்பாடு, பழம் பெருமை, கலாச்சாரம், என்பவற்றின பின்னணியில் வளர்த்தெடுக்கப்பட்ட யாழ்ப்பாணச் சமூகத்தில் கொலை கொள்ளை கற்பளிப்பு போன்ற பல கீழ்த்தர போக்குகள் ஆதிக்கம் செலுத்த தொடங்கிவிட்டது என்று கூறினால் அதனை எவராலும் மறுத்துரைக்கமுடியாது. ஒவ்வொரு காலைப் பொழுதும் மலர்கின்றபோது நிச்சயமாக யாழ்ப்பாணத்தின் எங்கோயோ ஒரு மூலை முடக்கில் இந்த கீழ்த்தரப் போக்குகளின் ஆதிக்கத்தால் மனித உயிர்களும் உடமைகளும் பறிபோய்கொண்டிருப்பது சாதாரண விடயம் அல்ல.

யுத்த மரணங்களுக்கும் யுத்தக் கொடுமைகளுக்கும் பழக்கப்பட்டிருந்த நமது மக்கள் மத்தியில் இந்த கீழ்தரப் போக்குகளின் ஆதிக்கத்தால் அதிகரித்துவரும் மர்ம மரணங்களும் மர்மகொள்ளைகளும் பெரும் பீதிகளையும் குழப்பங்களையும் உண்டுபண்ணத் தொடங்கி விட்டது.

அண்மைய நாட்களில் இடம்பெற்ற சில கொலைகள் கொள்ளைகள் பற்றி மர்மங்கள் நீடிக்கத்தொடங்கி விட்டது. அந்த கொலைகளுக்கும் கொள்ளைகளுக்கும் யார் காரணம் என்ற வினாவைத் தொடுத்துப்பார்த்தால் அவற்றில் பொரும்பான்மையானவை அரசியல் கொலைகளாக தெரியவில்லை. ஆனாலும் அந்தக் கொலைகளுக்கும் கொள்ளைகளுக்கும் பின்னணியாக சில அரசியல் சக்திகள் பக்க பலமாக இருந்திருப்பார்கள் என்ற சந்தேகங்களும் தோன்றுகின்றது.

யாழ்ப்பாணத்தை 1996 ம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினர் கைப்பற்றியதன் பிற்பாடுதான் இந்த மர்மக் கொலைகளும் மர்மக் கொள்ளைகளும் யாழ்ப்பாணத்தில் வேர்விடத் தொடங்கியது. அவர்களின் கட்டுப்பாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் பொறுப்பு சிறிலங்கா பொலிசார் வசம்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அந்தவகையில் இந்தச் சமூக விரோதச்செயல்களை கட்டுப்படுத்துவதில் இவர்களின் நிர்வாகம் ஏனோ தானோ என்று செயற்படுவதால்தான் இந்தச் சமூக விரோதச் செயல்கள் யாழ்ப்பாணத்தில் தலை எடுக்கத்தொடங்கியது.

இந்தக் கீழ்த்தரப் போக்குகளை கட்டுப்படுத்தி சமூக ஒழுங்கைப் பேணுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள்தான் சிறந்தவர்கள் என்று மக்கள் மத்தியில் பரவலாக பேசப்படுகிறது. ஆனால் தற்போது உள்ள சமாதானச் சூழலில் அரசாங்கத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களின் படி அரசியல் பணிகளை செய்யவந்திருக்கும் புலிகள் அரசநிர்வாகத்துக்குள் நுழைவதற்கு விரும்புகிறார்கள் இல்லை.


சிறிலங்கா பொலிஸ் படையினரின் சமூகச் செயற்பாடுகள் பொறுப்பற்றதாக செயற்படுவதை அவதானித்த போதிலும், அந்த நிர்வாகத்துக்குள்கூட புலிகள் தலையிட்டுக்கொள்ளாது அரச நிர்வாகத்துடன் ஒட்டிய ஒரு நிர்வாகத்தையே அவர்கள் பேணிவருகின்றார்கள்.

ஆனாலும் விடுதலைப் புலிகள் சிறிலங்கா பொலிசாரின் விசாரணைகளில் தலையிடாமல் தம்பட்டில் தணியாகச் செயற்பட்டு சமூக விரோதச் செயல்கள் பற்றியும் அந்த செயல்பாடுகளில் ஈடுபடும் சூத்திரதாரிகள் பற்றிய தகவல்களையும் அவர்கள் திரட்டிவருவது மட்டுமல்லாது படுகொலைகளை செய்தவர்கள் பாலியல்வல்லுறவுகளை மேற்கொண்டவர்கள் மற்றும் களவு செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் போன்ற பல கீழ்தரப் போக்கு கொண்டவர்களை இனங்காட்டி வருவதாக புலிகளின் அரசியல் துறை வட்டாரங்கள் கருத்துதெரிவிக்கின்றது.

நீர்வேலி, நீராவியடி நாரந்தனை, மட்டுவில், சாவகச்சேரி, போன்ற பல இடங்களில் இடம்பெற்ற கொலைகள், கொள்ளைகள் பற்றிய விபரங்களை திரட்டி அவற்றின் குற்றவாளிகள் சிலரை இனங்கண்டு இருப்பதற்கும் இந்தச் சேவை பாராட்டத்தக்கதொன்றாகும்.

மேலும் அரசியல் பணிக்கென வந்த இந்தபுலிப்போராளிகள் எதிர்கொள்கின்ற முதன்மைப் பிரச்சினையாக இந்த சமூக விரோதக் குற்றச்செயல்கள் உருவெடுத்திருக்கின்றது.

இவ்வாறாக அதிகரித்து வரும் இந்தப் படுகொலைச் சம்பவங்களின் பரபரப்புக்கள் ஒரு சிலதினங்கள் மட்டும்தான் முணுமுணுக்கப்படும் அதற்கிடையால் எங்கேயோ ஒரு மூலைக்குள் வேறு படுகொலை நடந்தேறிவிடும் இவ்வாறாக படுகொலை செய்யப்படுபவர்கள் பற்றிய மருத்துவ ஆய்வுகள் செய்யப்பட்டு பிரேத பரிசோதனை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு அந்த அறிக்கைகள் என்னவாகின்றன என்பது எவருக்கும் தெரியாது படுகொலை நடைபெற்றஇடத்துக்குச் சென்று படுகொலை செய்யப்பட்டவரை மீட்டது மட்டும்தான் யாழ்ப்பாணத்தில் சேவை செய்யும் சிறிலங்கா பொலிஸாரின் பணி போலத்தெரிகிறது.




அதன் பின்னர் தொடர்ந்து விசாரணைகள், விளக்க மறியல்கள் இடம்பெற்று வருகின்றது என்பது யாருக்கும் தெரியாத நம்பிக்கையற்ற தொன்றாகவே இருக்கின்ற போதிலும் யாரேனும் சில சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டால் மட்டும்தான் அந்தப் படுகொலை பற்றிய தகவல்களும் விசாரணைகளும் நீதிமன்றம்வரை சென்று நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்கின்றது.

இந்தப் படுகொலை செய்யப்பட்ட இடங்களில் கண்டுபிடிக்கப்படும் தடையங்கள், ஆயுதங்களின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு பொலிஸ் நிர்வாகம் பின் நிற்பதால் ஏராளமான படுகொலைகளின் சூத்திரதாரிகள் தப்பித்து செல்வதற்கும் இந்தப் பொலிஸ் நிர்வாகத்தின் கண்மூடித்தனமான சேவையே காரணமாகத் தெரிகின்றது.

ஆனால் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் சட்டமருத்துவ துறைபோதிய வளர்ச்சிகண்டிராததும் தடய அறிவியல், ஆய்வியல் போன்ற துறைகளில் தேர்ச்சிபெற்ற வல்லுநர்கள் பணியில் இல்லாத நிலை காணப்படுவதாலும் இந்த கொலை பற்றிய மருத்துவ தடயவிசாரணைகளை மேற்கொண்டு, குற்றவாளிகளை தண்டிப்பது கடினமாக இருப்பதாலும் யாழ்ப்பாணத்தில் படுகொலைகள் கொள்ளைகள் அதிகரிப்பதற்கு வழிசமைக்கின்றது.

அடுத்து சட்ட மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டு திறம்பட்ட அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு போதிய மருத்துவ உபகரணங்களும் தேவையான ஆணையாளர்கள் இல்லாத நிலைமையும் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் கொர்லைச்சம்பவ ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். குறிப்பாக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒரேயொரு சட்ட வைத்திய அதிகாரியே சேவையில் இருப்பதும் அந்த வைத்திய அதிகாரியும் கூடிய வேலைச்சுமையைச் சுமந்துகொண்டே தனது சேவையைச் செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு ஆய்வுகளை திறன்பட மேற்கொள்ளமுடியாத சில படுகொலை பிரேதபரிசோதனை ஆய்வுகள் கொழும்பில் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறு மேற்கொள்ளப்படும் ஆய்வின் அறிக்கைகள் தாமதமாக கிடைப்பதால் விசாரணைகள் இழுத்தடிக்கப்பட்டநிலையில் முடங்குவதும் தொடர்கதையாக இடம்பெற்று வருகின்றது. மொத்தத்தில் இந் தக் கீழ்தரப்போக்குகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அந்த தடுத்து நிறுத்தும் பணியில் ஈடுபடும் அனைத்து தரப்பினர்களும் கண்களை மூடிக்கொண்டு ஏனோதானோ என்று செயற்படாது பக்கச்சார்பு இல்லாத சமூக மனப்பான்மையுடன் செயறபட்டால் இந்தக் கீழ்த்தரப் போக்குகளில் இருந்து யாழ்ப்பாணச் சமுதாயம் விடுபட்டு பண்பாடு,பாரம்பரியம் கலாச்சாரம் என்பவற்றின் தாயகமாக யாழ்ப்பாணம் விளங்க வழிசமைப்போம். "சட்டமும் ஒழுங்கும் பேணப்படும் போதுதான் ஒரு சமுதாயம் திறம்பட வாழமுடியும்"

**கி.கமலதாஸ்**

---

## இது யாருக்குப் பொருந்தும்

# ஆடு போல் இருந்திடாதீர்கள்

ஒரு தோட்டத்தில் அமைநதுள்ள வீட்டில் ஒருகூலித தொழிலாளி வாழ்ந்து வந்தான் அவன் தனது ஆடுகளை வேலி அமைத்து வளர்த்து வந்தான்.


துள்ளித்திரியும் அந்த ஆட்டுக் குட்டிமேல் தொழிலாளிக்கு அலாதிப் பிரியம் தொழிலாளி அந்த ஆட்டுக் குட்டிக்குச் சுதந்திரம் கொடுத்திருந்தான். கூண்டை விட்டுவெளியில் சுற்றலாம். ஆனால் வேலியைத் தாண்டக்கூடாது.

அந்த வழியே தினசரி செல்லும் நரி ஒன்றின் பார்வையில் ஒரு சின்னஞ் சிறிய ஆடு துள்ளித்திரிவது பட்டது.

அந்த நரி ஒருநாள் ஆட்டை அணுகி "நீ இந்த வேலிக்குள் அடைபட்டு கிடப்பதைப் பார்க்க எனக்குப் பாவமாக இருக்கின்றது உனக்கு ஏதாவது உதவவேண்டும் என்று ஆசைப்படுகின்றேன்" என்று நீலிக் கண்ணீர் மல்கியது.

"நரியாரே! நீங்கள்தான் எங்களது பரம்பரை எதிரியாயிற்றே. எப்படித் திடீரென்று எனக்கு உதவ நினைக்கின்றீர்கள்?"

இனிய ஆட்டுக்குட்டி நண்பரே! அதெல்லாம் பழையகதை பூனையும்,கிளியும் ஒரே வீட்டில் வாழ்கின்றன. கீரியும் பாம்பும் ஒரே காட்டில் வாழ்கின்றன. இப்பொழுது உலகம் மாறிவிட்டது. அந்த மகிழ்ச்சியை உன்னோடு பகிர்ந்து கொள்ளத்தான் உன் நட்பை நாடுகின்றேன். என் முன்னோர்கள் செய்த பாவத்திற்கு பிராயச்சித்தம் தேடத்தான் உனக்கு உதவி செய்ய ஆசைப்படுகிறேன்.



எப்படியாவது வேலியைத் தாண்டி வந்துவிடு நாம் சந்தோசமாக நட்புடன் ஓடியாடி விளையாடலாம் அற்புத உலகை உனக்குக் காட்டுகிறேன் என்றது நரி.

நரியின் பசப்பு வார்த்தையில் மயங்கி ஆடு வேலி தாண்டியது. இரண்டும் இணைந்து நீண்ட துாரம் ஓடின வழியில் குளம் ஒன்று இருந்தது இருவரும் நீர் அருந்திச் செல்லலாம் என நரி யோசனை கூறியது.

ஆடு தண்ணீர் குடித்துக் கொண்டிருக்கும் போது அருகே சென்று நரி ஆட்டின் மேல் பாய்ந்தது.

குற்றுயிராக கிடந்த ஆடு கேட்டது "பிராயச்சித்தம் செய்யப் போவதாகக் கூறினாயே"

நரி அமைதியாகச் சொன்னது" அதைத்தான் இப்போது செய்து கொண்டிருக்கிறேன்"

ஆடு நரியின் வயிற்றில். நரி மீண்டும் தொழிலாளியின் பண்ணைத் தோட்டத்திற்கு ஓடியது. மீண்டும் ஒரு ஆட்டைத் தேடி. கவனமாக விழிப்புடன் இருங்கள் அப்படி இருக்காவிட்டால் கால வெள்ளம் உங்களை உருத் தெரியாமல் ஆக்கிவிடும். இன்று சமாதான நிலையில் எம்மக்களுக்கு ஆசைகள் சலுகைகளைக் காட்டி குளத்தில் தண்ணீா் குடிப்போமென ஆட்டுக் குட்டியை நரி எவ்வாறு ஏமாற்றியதோ அதேபோல் குருளையும் சிறுத்தையை ஏமாற்றிவிடும் காலப் புயல்கள் உங்களை வாரிக் கொண்டு சென்றுவிடும் எப்போதும் எம்மக்கள் விழிப்புடன் இருங்கள்.


**ஆதிரை**

# தமிழீழ தாயகபூமியில் இயற்கை மீறல்

பூமியில் மனித வாழ்வு வளம் பெற வேண்டுமானால் இயற்கை மீறலை நிறுத்த வேண்டும் இயற்கை ஆற்றல்களை வளர்க்க வேண்டும்.வளம்பெற செய்யவேண்டும் அதாவது மனிதன் இயற்கையோடு இசைந்து வாழ வேண்டும்.

மனிதன் இயற்கையை வென்று விட்டதாக மனதளவில் வாழ்ந்து இறந்து போய்விடுகிறவன் இயற்கையை வெல்வது என்பது உலகில்முடியாத காரியமாகும். இயற்கையோடு இசைந்து வாழ மனிதன் பழகினால் உலகில் அத்தனை உயிரினங்களுக்கு உணவும் வாழ வசதியும் வழங்குவதற்கு இயற்கை அன்னை தயாராகவே இருக்கிறாள்.

ஆனால் அதற்கு அவளுடன் இசைந்து வாழ்வது மிக இன்றியமையாதது. இயற்கை அழிந்தால் நாமும் அழிவோம் மாறாக இயற்கையை பரஸ்பரம் பேணி வாழ்ந்தால் இயற்கையும் வாழும் நாமும் சகல உயிரினங்களும் வாழ முடியும்.



சிறுதுளி பெருவெள்ளம் என்பது போல பூமியின்சிறுதுண்டும் அதன் உயிர்ப்புக்கு ஆதாரமானது. இது தமிழீழ தாயக பூமியும் உள்ளடங்கும். அதனால் ஒவ்வொரு சிறுபகுதியும் தம்தம் சூழலை பாதுகாக்க வேண்டியது மிக அவசியமாகும். தேவைக்காக இயற்கையை அழித்தல் கூட வாழ்வியலுக்கு முரணானதே இயற்கை மீறல் ஆகும். யாவரும் மனிதநேயத்தின் பால் கொண்ட நம்பிக்கையின் அடிப்படையில் உணர்வுடன் சூழல்பேணலில் தமிழீழ தாயகபூமியில் ஈடுபடவேண்டும்.

அதற்கு கல்விமுறைமையும் பிரச்சாரங்களும் மேற்கொள்ளப்படவேண்டும். புத்தகங்கள்,வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் வாயிலாக தமிழீழ தாயகபூமியின் இயற்கையை பாதுகாக்கவும் இயற்கை மீறல்களை தட்டிக்கேட்கவும் சுட்டிக்காட்டவும் உடன்துணிய வேண்டும்.முன்வரவேண்டும். சூழலியல் இயற்கை வள உயிரினங்கள் தாவரங்கள் காடுகள் பாதுகாப்பகங்கள் அமைப்புக்கள் பல உருவாகவேண்டும்.



இது இன்றைய காலத்தில் உடன் தேவையாகும். இனமத மொழி அப்பால் நின்று சகலரும் சூழலை பாதுகாக்க இயற்கை மீறலைத்தடுத்து நிறுத்த மனித நேயத்தின் பால் குரல் எழுப்பவேண்டும். ஏனென்றால் இது இலக்கியம் பண்பாடுசமயம் மொழி இனம் எல்லாவற்றுக்கும் மேலாக மனித உயிர் வாழ்வின் இருப்பையே இயற்கை தீர்மானிப்பதாக இருக்கிறது.

உலகில் மக்கள் தொகை அதிகரிக்கிறது. இதன்விளைவு இயற்கையில் கைவைக்க வேண்டியதாகிறது. ஒட்டுமொத்தமாக உயிரின் பாதிப்புக்கு இது காரணமாகிறது. முக்கியவிடயம் இந்த அழிப்பு உயிரினங்களின் வாழ்வுச்சுழற்சியை பாதிப்பு அடையச்செய்யும் ஒன்றாகும் பூமியின் சகலஉயிரினங்களின் தாவரங்களின் வாழ்வும் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு கொண்ட பொருத்தப்பாடுடையதாகும்.

தமிழீழ கடல்வழிகளை பொறுத்த மட்டில் பல இயற்கை மீறல்கள் நடைபெறுகின்றன. கடலில் 4000 அடிவரை சூரியஒளி ஊடுருவும் அதுவரை கடல் தாவரங்கள் செழித்து வாழக்கூடிய நிலை உண்டு. உலகில் முக்கால் பங்கு கடல் கால்பங்கு நிலம் இதனால் கடலை பொருளாதார ரீதியில் இயற்கை மீறல் இல்லாமல் பயன்படுத்தப்படவேண்டும். வளர்ந்து பெருகிவரும் மக்கள் சனத்தொகைக்கு ஏற்ப உணவு கொடுக்க கடலாலேயே முடியும் தமிழீழ தாயகபூமி மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட பிரதேசமாகும். இதனால் கடல் வழிகளின் பாதுகாப்பும் மிக அவசியமாகும். தமிழீழத்தில் கடல் ஆமைகள் மீனவர்களால் சட்டவிரோதமாக பிடிக்கப்படுகிறது. உணவுக்கு பயன்படுத்தப்படுகிறது. உலகளாவியரீதியில் கடல் ஆமைகள் பிடிக்கக் கூடாது என்று சட்டம் உள்ளது கடல் ஆமைகள் ஆதியில் தோன்றிய உயிரினம்ஆகும். உயிரினங்கள் முதல் கடலில் அடியில் தோன்றி கரைக்கு வந்தவையாகும் இதனால் கடல் ஆமைகள் நீரிலும் நிலத்திலும் வாழும் இயல்புடையது. பூக்களும் நுரையீரலும் உண்டு தமிழீழ கடல் ஆமை இனங்கள் மிக அருகிவருகின்றன. கடல் ஆமைகளின் முட்டைகளை கடற்கரை ஓரங்களில் மீனவர்கள் தோண்டி எடுத்து செல்கின்றனர். இதனால் கடல் ஆமைகள் அருகிவிட்டன. தமிழீழ கடலும் தமிழீழ கடல் வழிகள் முற்றாக அழியாது பாது காத்தல் மிக அவசியமாகும் கடல் ஆமைகளை பிடிக்கப்படுதல் பாரிய இயற்கை மீறல் ஆகும்.

கடல் மீன்கள் கடல்வழி ஆழமான பகுதியிலிருந்து ஆழமற்ற சூரிய ஒளி ஊடுரும் பகுதிக்கும் 2000 அடி நீருள்ள பகுதிக்கு வருவன முட்டையிட இனம் பெருக்கமாகும் கடல் வழிகளின் முட்டைகளை அநேகமாக பூரியள் அடைகாத்தே குஞ்சு பொரிக்கின்றன. ஆழமற்ற பகுதிக்கு வரும் கடல்வழிகள் மீன்கள் மீனவர்களால் பிடிக்கப்படுவதால் இவை முட்டை சினையுடன் பிடிபடுகின்றன. மீன்கள் எந்தக்காலத்தில் குஞ்சு பொரிக்கும் முட்டையிடும் என்பதனை மீனவர் களுக்குப் பயிற்றுவிக்கப்படவேண்டும் தெரியப்படுத்தடவேண்டும் இதன்மூலம் பல அருகி வரும் மீன் இனங்கள் பாதுகாக்கப்படும் அவை முட்டையிட்டு செல்கின்ற நேரத்தில் மீனவர்கள் மீன்களை கடல்வழிகளைகடைப் பிடிப்பதன் மூலம் பாரிய மீன் இனங்களின் அழிவை தவிர்கமுடியும் இத்தகைய நடைமுறைகள் உலகில் இன்று கவனம் செலுத்தப்படுகிறது.

தமிழீழ மீள்காடாக்களின் போது தமிழீழத்திற்கு ஒத்துவராத நிலக்கீழ் நீரையும் மண்வளத்தையும் அதிகம் உறிஞ்சும் சுற்றுப்புறச் சூழலை பெரும் வரட்சிக்கு இட்டுச்செல்ல கூடிய யூக்கலிப்டஸ் அதாவது சஞ்சீவி மரங்கள் போன்றவை அழிக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

தமிழர் தாயக பிரதேசங்களை ஆக்கிரமிக்கவேண்டும் ஆளவேண்டும் என்று சிங்கள பெரும்பான்மையின ஆளும்வர்க்கத்தினர் அவாபட்டு அதுகைகூடாதபட்சத்தில் அப்பிரதேசங்களை சிங்கள ராணுவத்தினரை கொண்டு சிதைத்து சுடுகாடாக்கி விடும் அசிங்கமான பாரிய இயற்கை மீறல்களில் சிங்கள ராணுவம் ஈடுபட்டது.

தமிழீழ பூமியில் இருக்கும் பயன்தரும் மரங்கள் நிழல்மரங்கள் எல்லாம் வெட்டி வீழ்த்தப்பட்டன. அம்மரங்களைக்கொண்டு காப்பரண்கள் அமைக்க சிங்களராணுவத்தால் மேற்கொள்ளப்படுகிறது. புல்டோசர் கொண்டு தமிழீழ பகுதி மரங்கள் காடுகள் சிங்கள ஆக்கிரமிப்பு ராணுவத்தால் படுமோசமாக அழிக்கப்பட்டது. இது உலகிலேயே பாரிய கொடுமையான இயற்கை ஆய்வாளர்களை கவலையில் ஆழ்த்தும் வேதனையடைய செய்யும் இயற்கை மீறல் ஆகும். இதன் மூலம் பாலைவனமாக்கி தமிழீழ தாயகபூமியை மக்கள் அத்தமான் ஆக்குவதே சிங்கள ஆட்சியாளர்களின் திட்டம் ஆகும். இலங்கைத்தீவில் சிங்கள ஆட்சியாளர்களின் பாரிய இயற்கையை வனஉயிரினங்களை பாதுகாக்க போராடுகிற உலக அமைப்புக்கள் கண்டிக்க வேண்டும் தடுத்து நிறுத்த முன்வர வேண்டும்.

யாருமே கேட்பார் அற்று உயர்பாது காப்பு வலயம் ராணுவக்கட்டுப்பாட்டு பகுதிகளில் மரங்கள் பயன்தரும் மரங்கள் நிழல் மரங்கள் வெட்டிவீழ்த்தப்படுவது தொடர்கிறது. இந் நிலை தமிழர் தாயக பூமியில் நடக்கிறது.

தவிர நகரங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி இடம் பெயர்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டமையாலும் இடம்பெயர்வுகள் அதிகரித்து காணப்பட்டமையாலும் அவர்களுக்கான வாழ்விடங்களை அமைப்பதற்கு தமிழீழ மக்கள் விரும்பியோ விரும்பாமலோ மரங்களை வெட்ட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இது கூட இயற்கைவள அழிப்பு இயற்கை மீறலுக்கு தமிழீழ மக்களை கருவியாக பயன்படுத்தியது. தமிழீழ மக்களை மறைமுகமாக பாலைவனமாக்கும் சிங்கள ஆட்சியாளரின் உபாயமே ஆகும்.

பசுமை போர்வை இல்லாத பூமி உயிரினங்கள் வாழ எந்தவகையிலும் உகந்தது அல்ல வனவளத்தை அழிப்பதானது இயற்கைமீறல் ஆனது தமிழீழ தாயக பூமியின் வளத்தையும் கால நிலையையும் பாதிப்பதோடு மண் வளம் குன்றிப்போக வழிசமைக்கிறது, மண்அரிப்பு ஏற்படுகிறது அழிவின் விளிம்பில் வாழும் அரிய பறவைகள் விலங்கினங்கள் உயிரினங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். உலகில் ஒவ்வொரு மரங்களும் வெவ்வேறு காலங்கள் மாதங்களில் பூப்பன,காய்ப்பன தமிழீழ பூமியில் காணப்படும் வெவ்வேறு மரங்களை இனங்கண்டு தெரிவு செய்து நீரைப்பயன்படுத்தி அம்மரங்களையுடைய காடுகளை அமைப்பதன் மூலம் ஒவ்வொரு மரமும் மாறிமாறிப் பூத்து காய்த்து பழங்களை பரப்புகளை தருவதால் நாங்கள் உருவாக்கும் காட்டில் வருடம் முழுவதும் உணவு தேவையான அளவு கிடைக்கும் இக்காட்டுக்கு பறவைகள் விலங்குகள் இயற்கையாகவாசம் செய்வன தங்குவன வாழ்வன இனம்பெருகுவன, மனிதனும் தனக்கு தேவையான உணவுகளை பழங்களை பெறமுடியும். வெவ்வேறு மரங்கள் காட்டில் வெவ்வேறு காலங்கள் மாதங்களில் பூத்து காய்த்து பழங்களை தருவதால் காட்டில் வருடம் முழுவதும் உணவு கிடைக்கும்.

மனிதனும் தங்கி வாழ முடியும் பாரிய பொருளாதார நன்மையை பெறமுடியும் இயற்கை சமநிலையை அடைய முடியும் பாரிய இயற்கை மீறலிலிருந்து தமிழீழ்தாயக பூமியை பாதுகாக்க முடியும் மேலும் உலகவளங்கள் வன உயிரினங்களின் ஆலோசனைகள் கருத்துக்கள் பெறப்பட்டு அவை மூலம் வனங்களை புதிய காடுகளை உருவாக்குதல் அவசியம் உலகில் இயற்கையை வன உயிரினங்களை வளங்களை பாதுகாப்பதன் மூலம் தமிழீழதாயக பூமியின் இயற்கை மீறல்களை கட்டுப்படுத்தி பாதுகாக்க முடியும் .

தமிழீழ தாயக பூமியில் இயற்கை மீறல்களை கட்டுப்படுத்த வனஅழிப்பு காடுகள் வெட்டுதல் சேனைப் பயிர்ச்செய்கை வன உயிரினங்கள் தோல் இறகு இறைச்சி பல கொம்புகள் மூடவைத்தியம் மூடநம்பிக்கைகளுக்காக சட்டவிரோதமாக வேட்டையாடுதல் கட்டுப்பாடற்ற முறையில் வேட்டையாடுதல் போன்றன பாரிய இயற்கைமீறல் சம்பவங்களாகும். இதனால் பல வனஉயிரினங்கள் முற்றாக அழிந்து விட்டன ஏனையவை அருகிவருகின்றது. இதனைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கைகள் உடன் எடுக்கப்படவேண்டும். இயற்கை மீறல்களில் ஈடுபடுவோரை கட்டுப்படுத்துதல் வேண்டும். தமிழீழ மக்கள் தமிழீழத்தின் இயற்கை மீறலையும் உலகமக்கள் உலக இயற்கை மீறலையும் உடனடியாக பாதுகாக்க முன்வர வேண்டும். நாம்வாழும் இந்த பூமிகிரகத்தை காப்பாற்ற அதன் ஆயுளை அதிகரிக்க வும்நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சுவிஸிலிருந்து
**ரகுபாலன்**

# பொறுக்கி எடுத்த பூக்கள்

## சில கேள்விகளும் சில பதில்களும்

மகுடியாரே அமெரிக்காவிடம் நீர் விடுக்கும் கோரிக்கை எது?

நிதி உதவிக்குப் பதிலாக நீதி உதவி செய்யுங்கள் என்பதேயாகும்.

நொந்து போயிருக்கும் தமிழ் இனத்துக்குள் மேலும் பிளவு ஏற்பட்டால்?

தலை பிளந்து இருப்பவனை நிலம் பிளந்து ஏப்பம் விட்டது போலிருக்கும்.

மகுடியாரே மனிதனுக்குள் மிருகக்குணாம்சம் உண்டா?

மனித மனம் மிருகங்கள் வாழும் காடு போன்றது. அதைஉணர்ந்து தான் பஞ்சதந்திர கதைகள் எழுதப்பட்டன. ஈசாப் நீதிக்கதைகள் எழுதப்பட்டன.

சிரித்திரன் மகுடியார் பதில்களிலிருந்து

## காலமும் காலனும்

இராமாயனத்தில் தசரதன் கைகேயிக்கு வரம் கொடுக்க முன்வந்தான். நீ விரும்பிய இரு வரங்களைக் கேள் என்றான். இப்போது வேண்டாம் நான் விரும்பும் போது தந்தால் போதும் என்றாள் கைகேயி

காலம் மாறியது

தருணத்திற்காக காத்திருந்த கைகேயி கேட்ட வரங்கள்-

பரதன் நாடாளவேண்டும் இராமன் பதினான்கு வருடம் காடாள வேண்டும். என்பதேயாகும்

கால இடைவெளி-அதாவது தான் விரும்பும் நேரம் என்ற கால அவகாசம் தசரதனை காலனின் பிடிக்குள் சிக்கவைத்துவிட்டது.

## தேடல்

ஆலயத்துப் பிள்ளையாரிடம் அரச மரத்துப் பிள்ளையார் சலிப்புடன் சொன்னார். பக்தர்களோ உன்னைத்தேடி வந்து வணங்குகிறார்கள் நானோ பக்தர்களை தேடி மரத் தடியில் குந்தியிருக்கின்றேன் என்ன வாழ்வு இது.

## மன்னவன்

இந்த மண்ணுலகில் சிறந்தது எது?

மது நிறைந்த கிண்ணத்தைக் காட்டினான் ஒரு குடிமகன்.

பதவியும் புகழும்? பணமும் என்றான் அரசியல் வாதி

தெய்வ சிந்தனை என்றான் ஞானி

நித்திரை என்று கூறியபடி குறட்டை விட்டான் சோம்பேறி

சுதந்திரம் என்றான் அடிமை

இயற்கை'என்றான் கவிஞன்

உணவு என்றான் ஏழை

கடைசியாக பதில் சொன்னவன் கூறியது. மண்ணுலகில் சிறந்தது இந்த மண் மட்டுமே. அவன் ஒரு விவசாயி.

மௌனா

## விளக்கம்

விளக்கைப் பார்த்துப் விட்டில் பூச்சி சொன்னது.

இருளில் பயந்து பதுங்கி வாழ்வதிலும் ஒளியில் விழுந்து சாவது கௌரவமானது.

தீபக்

## அலைச்சல்

மீனவன் மனைவியிடம் சொன்னான்

இரவில் கடலில் அலைந்து பிடித்த மீன்களை பகலில் தெருவில் அலைந்து விற்க வேண்டிய வாழ்வு

## சில நவீன விளக்கங்கள்

விண்வெளி: மேல்நாட்டவர் றொக்கெட்டும் கீழ் நாட்டவர் பட்டமும் விடும் இடம்.

கடிகாரம: வயது போவதைக் காட்டும் மீற்றர் கருவி.

வாய: ஒரு வகையான புகைக்குடில் (புகைஞர்களுக்கு மட்டும்)

சம்பள உயர்வு: அரசாங்க ஊழியர்களின் பகற்கனவு

பொறுக்கி

# சிறிய நிலப்பரப்பில் அதிக இலாபம் பெறுவது எப்படி?

-த.சிவலிங்கம்

மேட்டுநில வேளாண்மை நிலத்தில் வரம்புகளில ஒதுக்கமான இடத்தில் வேம்பு, கிளிறிசிடியா, அகத்தி, வாகை, கொன்றை ஆகிய மரங்களை நடவேண்டும்.

வேளாண்மை செய்து அறுவடை முடித்ததும், அல்லது வேளாண்மை விதைப்பின் முன்பு உழுந்து, காராமணி, பயறு ஆகிய வற்றை பயிரிட்டு கூடுதலான நைதர சன் சத்தை நிலத்திற்கு கிடைக் கக்கூடியதாகச் செய்தல், சணல் போன்ற பயிர்களையும் விதைத்து உழுது விடலாம்.

நன் செய் நிலங்களில் வைக் கோலைப் போர்வை போன்று மண்மீது போட்டு மண் புழுக்களை வளரச் செய்யவேண்டும். இது இயற்கைப் பண்ணைத் தத்துவமாகும். இந்த முறை இந்தியாவில் பெருமளவிலான விவசாயிகள் கையாளுகின்றனர்.

பொதுவாக மரங்களில் இருந்து உதிரும் சருகுகள் பயன் மிக்கவை. எனவே பழ மரங்களான மா, பலா, கொய்யா ஆகியவற்றை வீட்டிலும் தோட்ட நிலத்திலும் வளர்க்கவேண்டும்.

முடிந்தவரை கால்நடை, கோழி ஆகியவற்றை வளர்த்து அவற்றின் எச்சங்களை பயிருக்கு பயன்படுத்தல் பயன்தரும். கோழி பயிர்களுக்கு உடனடியாகக் கிடைக் கக்கூடிய பல சத்துக்களை உள் ளடக்கிய இயற்கை உரம் ஆகும். கோழி எருவை குவியலாகப் பேரட்டுவைக்கும் போது அதிகளவு சூடு ஏற்பட்டு நைதரசன் வீணாகி போய்விடும். இவ் வீண் விரயத் தைத் தடுக்க கோழி எருவில் சுண் ணாம்புப் பற்று அதிகமாக இருப்ப தால் அமிலத்தன்மை வாய்ந்த மணல் பிரதேச மண்ணிற்கு பயன் படுத்துதல் நல்லது. சாணி, வைக் கோல் கழிவுகள் இலை, பூக்கழிவு களைக் கிடங்கில் கொட்டி பயிருக்கு அடி உரமாக இடவேண்டும்.ஆடு, மாடு இவைகளை வயல்களில் பட்டி அடைக்கலாம். பட்டி கட்டும்போது மாறி மாறி முழு இடமும் கட்டவேண டும். உவர், களர் ஆகிய இடங்களில் வேப்பிலை தேங்காய் நார்க்கழிவுகள் ஆகியன இடுதல் பயன்தரும்.

பசுந்தாள் உரத்தில் அதிகப் படியான நைதரசன் உள்ளது எனவே எருக்கு, காட்டாமணக்கு, வேம்பு, வாகை, நொச்சி, வாதமடக்கி, அவரை, கலியாண முருக்கு, காவிளாய் ஆகிய வற்றைச் சேற்றுளவின் போதும் ஆரம்ப உளவின் போதும் அடி உரமாக வழங்கவேண்டும்.

இத்தழைகளில் நோய் எதிர்ப்புச் சக்தி உண்டு. வேம்பும், நொச்சியும் பூச்சி நாசிகளாக பயன் படக்கூடியவை என்பதை அனைவரும் அறிந்திருப்பது அவசியமே. பசுந்தாள் உரம் பயிரிடுவதால் ஏற்படும் நன்மைகள் எதுவெனப் பார்ப்போம்.

பசுந்தாள் பயிர்கள் ஆகாயத்திலுள்ள நைதரசனை வேர் முடிச்சுக்களிலுள்ள பற்றீரியாக்களின் உதவியினால் நிலப்படுத்தி நிலத்தை வளமுடையதாகச் செய்கின்றது.

பசுந்தாள் எருவை நிலத் துக்கு இடுவதால் அங்ககப் பொருட் களின் அளவு அதிகரிக்கின்றது.

.பசுந்தாள் உரங்கள் சேரும் அளவுக்கு நில அமைப்பு செம்மை யாகிறது. அவை இறுக்கமான நிலங்களில் பிடிப்பையும் நீரைக் காக்கும் சக்தியையும் அதிக மாக்கின்றன. களி நிலங்களில் சிறிய கட்டிகள் உண்டாக்குதலும் நீர் வடிதலையும் ஊக்குவித்து நீரைக் கிரகிக்கும் சக்தியை அதிகப் படுத்துகின்றன. பசுந்தாள் உரங்கள் மண் வாழ் நுண்ணுயிர்களைப் பெருக்கமடையச்செய்து அதன் மூலம்கிட்டா நிலையில் உள்ள செடி உணவுகளை கிட்டும் நிலைக்கு மாற்றமடையச் செய்கின்றது.

இந்தியாவில் பசுந்தாள் பசளையாக காட்டு சூரியகாந்தியை தோட்டத்து வேலிகளில் அல்லது காணி வேலிகளில் வளர்த்துக் கொள்கிறார்கள். ஏனெனில் போதிய அளவு பசுந்தாள் பசளை இதில் கிடைக்கிறது. இந்தக் காட்டுச் சூரியகாந்தியை அடிக்கடி வெட்டிப் பாவிக்கலாம். இது அதிக பசுந்தாளைப் பெறுவதுடன் இப் பசுந்தாள் மிக விரைவிலே உக்கல் அடைகின் றது. எமது பிரதேசத்தில் காட்டுச் சூரியகாந்தி இல்லை. ஆதலால் சணல் போன்ற பயிர்களைப் பயிரிட்டு பயன்படுத்திக்கொள்ளலாம்.

சில விவசாயிகள் சணல், பயறு போன்ற அவரை இனப் பயிர்களை விதைத்து அவை பூப் பதற்கு முன்பே உழுது விடுவதால் இவை மிகவிரைவாக சிதை வடைந்து மண்ணிற்கு பசுந்தாள் பசளையாகப் பயன்கிடைக்கின்றது ஆகவே எமது விவசாயிகள் குறைந்த நிலப்பரப்பில் மேற்கூறிய பசளை களை உரிய முறையில் பயன்படுத்தி விவசாயத்தை மேற்கொள்ளலாம்.

# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிருச்செந்திநாதன்

வளர்ந்துவரும் உணவுத் தேவைக்கு ஏற்ப பயிர் விளைச்சலை அதிகமாக்க வேண்டியது அவசியமானதும் இயல்பானதுமாகும். பயிர் விளைச்சலை அதிகரிக்க பயிர்ச்செய்கை நிலப்பரப்பை அதிகரிக்க வேண்டும். அல்லது குறித்த நிலப்பரப்பில் உற்பத்தியின் அளவை அதிகரிக்கச் செய்யவேண்டும்.

இவை இரண்டில் எதுவாக இருப்பினும் இன்று பயிர்ச் செய்கையின் உச்ச விளைச்சலுக்கு முதற்காரணியாக அமைவது உரமாகும்.

பயிருக்கு உணவாக அமையும் இந்த உரம் விவசாயிகளால் இயற்கையான வழிகளாலும், செயற்கையாகத் தயாரிக்கப்படும் வேதியல் உரங்களாலும் பூர்த்தி செய்யப்படுகின்றது.

இயற்கை உரங்களின் எருவே பிரதான இடத்தை வகிக்கிறது. எருவானது சாணம், கால்நடைகளின் சிறுநீர், வைக்கோல், கால்நடைகளின் உணவுக் கழிவுகள் போன்றவற்றை உள்ளடக்கியது.

எருவை மண்ணோடு சேர்க்கும்போது அது இரண்டு வழிகளில் செயற்படுகிறது. ஒன்று அது மண்ணைப் பதப்படுத்துகிறது அத்துடன் நீரையும் காற்றையும் உட்கொள்ளும் ஆற்றலை அதிகப்படுத்துகிறது. மணலாகி இருந்தால் நீரைத் தக்கவைத்துக்கொள்ளும் செயற்பாட்டை மேம்படுத்துகிறது. இரண்டாவதாகத் தாவர வளர்ச்சிக்கு இன்றியமையாத சில அரியசத்துக்களை வளங்குகிறது.

இவ்வித தன்மைகொண்ட எருவின் அளவானது எமது விவசாயத் தேவைக்கு ஏற்ப அமையாத காரணத்தால் செயற்கையான இரசாயன உரங்களை பாவிக்கவேண்டிய தேவை ஏற்படுகின்றது.

எனினும் இங்கேதான் செயற்கை உரப் பிரயோகத்தால் ஏற்படும் ஆபத்து ஆரம்பமாகின்றது. ஒழுங்குபடுத்தப்படாத உரப் பாவனை காரணமாக மண்ணின் வளம் மாசுபடலும் நீர் மாசுபடலும் உலகை அச்சுறுத்தும் பாரிய பிரச்சினைகளாகிவிட்டன.

நீண்ட காலத்தில் இதன் விளைவுகள் மேலும் தீமையாக அமையலாம். இதனை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும்.

# நட்பு மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கும்

காதல் என்ற சொல்லைச் சொல்லும் போதே எப்படி உள்ளம உவகை கொள்கிறது. அதைப்போல் நட்பு என்று சொல்லும்போது, மன தில் தென்பு உண்டாகிறது. மனதிற் குக் கூடுதலாக வலுக்கிடைக்கிறது.

நம்மில் யாரும் தனிமை யில் வாழவிரும்புவது இல்லை. உடலளவிலும், மனளவிலும் நமக்குத் தோழமை தேவைப் படுகிறது.

நம்முடைய உணர்ச்சிகள், எண்ணங்கள், மகிழ்ச்சிகள் ஆகிய வற்றை இன்னொருவனுடன் பகிர்ந்து கொள்ளவே ஆசைப்படுகிறோம்.

மொத்தத்தில், நமக்கு ஆபத்தான சூழ்நிலையில், ஒருவர் உதவி இருக்கவேண்டும் என்று விரும்புகிறோம். நம்முடைய சமுதாய அமைப்பு அப்படியுள்ளது.

நட்பின் நிழல் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கும். மகிழ்ச்சி நம் அனைவருக்கும் வேண்டிய மிக முக்கியமான ஒன்று.


துன்பப்பட்டு விம்மி அழு கின்ற போதும், வியந்து சிரிக்கின்ற போதும் உடன் இருப்பவர்கள்தான் உண்மையான நண்பர்கள்.

நட்பு மகிழ்ச்சியை இரட்டிப் பாக்கும் ஆற்றல் பெற்றது. துயரத் தைப் பாதியாகக் குறைக்கும் வல் லமை படைத்தது. பங்கிட்டுக் கொள்ளும் துன்பம் பாதியாகக் குறையும். “நட்பு என்பது நிழல் தரும் மரம்” என்று எழுதினார் ஆங்கிலக் கவிஞர் எஸ்.டி.கோலரிடச்.

“தனிமை கவலையை வளர்க்கும். நட்பு கவலையை உப்புக் கரைவது போல் கரைக்கும்”.

“நல்ல நட்பு ஒரு வழிப் பாதை அல்ல. பரஸ்பரம் உறவில் அது உருவாகின்றது. பெறுவதை விடக்கொடுப்பது, அதன் நோக்கமாக இருக்கின்றது. தாராளத்தில் மட்டும் தான் அதில் போட்டி ஏற்படமுடியும்” என்கிறார் வைத்தியர் மௌரஸ்.

இப்படியும் போலி நண்பர் கள் உலகில் இருக்கத்தான் செய்கிறார்கள். ‘‘மெண்டிஸ்’’ என்ற அறிஞர் இவ்வாறு கூறு கின்றார். நண்பர் களோடு நண்பன் போல் வேசம் போட்டு, நண்பர் களைத் துன்பு றுத்தி, அவர் களை எரிச்சல் பட்டு, கூடாத மாதி ரிக் கூறி, நண்பர் களின் கழுத்தை யறுக்கும்” எளிய நண்பர்களும், ஒரு வரின் வாழ்க்கை யைச் சீர்குலைக் கும் போலி நண் பர்கள் இருக்கத் தான் செய்கிறார்கள்.



வளமான வாழ்வு எங்கள் வாழ்க்கை வளத்துடன் புரிந்த நட் பைப் பலப்படுத்திக்கொள்வது அவ சியமாகின்ற வாழ்க்கை சிதையாமல் நட்பு காப்பாற்றப்படுகின்றது.

உயர்ந்த நட்பு அர்ப்பணிப் பின் மீதும், தன்னலம் இல்லாத தன்மையாலும் உருவாகிறது. நல்ல நட்பு எந்தப் பிரதிபலனையும் எதிர் பார்ப்பது இல்லை. “கடலலை வீசு கின்றபோது, நட்பு நங்கூரமாக இருந்து நிலைகொள்ள உதவு கின்றது.

பழம்பெரும் தத்துவஞானி, செனக்கா சொன்னார். “வாழ்க்கை யில் கிடைக்கக்கூடிய சுகங்களிலே உறுதியான, மென்மையான, தைரிய மான நட்பைப் போல் சிறந்தது ஏதுமில்லை. நமது கவலைகளை இனிமையாக்கிவிடுகின்றது. நல்ல நட்பு மரணத்தைக் கண்டும் அஞ்சப்படாத நிலை யினைத் தோற்று வித்துவிடுகின்றது”

வாழ்க்கை வெறும் இதயத் துடிப்பு மட்டுமல்ல, மனிதன் மற்ற மனிதர் களோடு ஏற்படுத் திக்கொள்ளும் உறவுமுறைகளின் தரத்தைப் பொறு த்தே அமைகின் றது.

நண்பர்கள் இருக் கிறவரையில் எவரும் பயனில்லா தவர் ஆகிவிடு வதில்லை என்கிறார் ராபர்ட் லூயிஸ்ஸ்டீவன்சன்.

உண்மை நட்பு உண்மை யான நண்பர்களைக் கொண்டவர்கள், அதிஸ்டசாலிகள் எந்தப் பணமும் சில பணத்தைவிட நட்புக்கே எடை அதிகம். சில சமயங்களில் உதவ முடியாமல் போகும் நண்பர்கள் தான் ஆபத்தில் உதவுவார்.

நண்பர்கள் தெரிந்தவர்கள், அறிந்தவர்கள், அறிமுகமானவர்கள், நெருக்கமானவர்கள், மிகவும் வேண்டி யவர்கள் எனப் பல வகையான பெயர்கள் நட்புக்கு உண்டு.

விளையாட்டு நண்பர், தொடர் வண்டிப் பயணநண்பர், பள்ளி நண்பர், கல்லூரி நண்பர்கள் என நண்பர்கள் பட்டியலை நீட்டிக் கொண்டே வகைப்படுத்தலாம்.

எல்லோருமே நண்பராக இருப்பர். எவருக்கும் உற்ற நண்பராக இருக்கமுடியாது. வாழ்க்கையில் உற்ற நண்பர் ஓரிருவர் மட்டுமே இருக்கமுடியும்.

வாழ்க்கையில் தொய்வு வரும்போது ஓடி வந்து உதவக் கூடியவர் நண்பர்கள் மட்டுமே.

“சோகத்திலும், துன்பத் திலும் பங்குகொள்பவர்கள் தூய நண்பர்கள்”

உண்மையான நட்பை உருவாக்கும் திறமைகொண்ட வர்கள் மகிழ்ச்சியான மனிதர். அவர் இலட்சாதிபதியைப் போன்றோர், கோடீஸ்வரரைப் போன்றோர், நிறையப் பணம் பண்ணாவிட்டாலும் திருப்தியாக இருப்பர்.

“நட்பு எந்த நேரத்திலும் பலம்தரும்’’ அவருக்கென்னப்பா ஏதாவது ஒரு நண்பர் உதவினால் போதும் என்று சிலர் பேசிக் கொள்வதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

அரிய நேரத்தில் உரிய உதவி செய்யும் நண்பர் பிரதிபலனை எதிர்பாராத, ஆபத்தில் காக்கும் உயிர் நண்பர் ஆகிறார். நல்ல நண்பர்களை உடையவர்கள் ஏழைகளும் அல்ல, கோழைகளும் அல்ல. தைரியம் நிறைந்த பலசாலிகளாவார்.

—வ.ஆதிரை

# சாவு அறிவித்தல்

## சுப்பிரமணியம் சின்னராசா

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், 19ஆம் துண்டு புதுமுறிப்பு கிளிநொச்சியை வதிவிடமாகவும், முன்னாள் கிளிநொச்சி நாகப்பாஸ்ரோர் உரிமையாளருமான சுப்பிரமணியம் சின்னராசா அவர்கள் 08-03-2004 அன்று திங்கட்கிழமை கிளிநொச்சியில் காலமானார். அன்னார் அமரர்களான சுப்பிரமணியம் மீனாட்சி அவர்களின் அன்பு மகனும், அமரர் சிவகுரு புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும், ஞானம்பாளின் அன்புக்கணவரும், ஞானரூபன் (கனடா), ஞானதீபன், ஜனகன் (கிளி. மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மார்க்கண்டு (கனடா), குமாரசாமி (கனடா), இராமலிங்கம் (குளியாப்பிட்டி), தெய்வானை (கனகாம்பிகைக்குளம்), இலட்சுமி (கனடா), இராசம்மா (கனகாம்பிகைக்குளம்), தங்கம்மா (வட்டக்கச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், விநாயகமூர்த்தி (கனடா), இராசரத்தினம் (கனடா), நாவுக்கரசன் (கனடா), செந்தமிழரசன், எழில்வண்ணன் (கனடா), சிவனேஸ்வரி (ஆனந்தபுரம்), கோகேஸ்வரி (கனடா), அமரர் மங்களேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனருமார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14-03-2004 ஞாயிற்றுக்கிழமை 118, கனகாம்பிகைக்குளம் கிளிநொச்சி என்ற முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இரணைமடு இந்து மயானத்திற்கு மு.ப. 10.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

118, கனகாம்பிகைக்குளம்,
கிளிநொச்சி. (3645)

தகவல்
இராமலிங்கம (சகோதரர்)

# பிறந்தநாள் நினைவு

தாயின் மடியில் 12 - 03 - 1975



தாயக மண்ணில் 18 - 10 - 2000

## மேஜர் ஆதவன்

முத்துச்சாமி-சிவகணேசன் (முரளி)
காங்கேசன்துறை - யாழ்ப்பாணம்

பகை வழித் தடங்கள் பார்த்து
போரும் புரிந்து
விதையென மண்ணில் வீழ்ந்த
வீரனே வாழ்வாய்
என்றும் எம் நெஞ்சில்

தற்போதைய முகவரி:
ஆதவன் இல்லம்
முத்துமாரியம்மன் கோவில் வீதி,
2ஆம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு.

(4306)

என்றும் உன் நினைவில்
குடும்பத்தினர்
சி. முத்துசாமி

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
15 □ 10 □ 1924



மறைவு
11 □ 02 □ 2004



## விநாயகம் பாக்கியம்

எமது இல்லத்தின் அகல்விளக்காய் இருந்து 11.02.2004 இல் இறைபதம் அடைந்த திருமதி பாக்கியம் விநாயகம் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் 12.03.2004 முற்பகல் 11 மணியளவில் நிகழ இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் ஆத்மா சாந்திப்பிரார்த்தனையில் கலந்தும் மதிய போசனத்தில் பங்குபற்றுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
4ஆம் வட்டாரம் இரணைப்பாலை,
புதுக்குடியிருப்பு.

(சி-9328)

விரைவில் எதிர்பாருங்கள்
உங்கள் வெள்ளி நாதத்தில்
வி.பி.யோசப்பின் புதிய மொழியாக்கத் தொடராக வெளிவருகின்றது
முடுப்பனிக்குள் ஒரு தேடல்
ஆவலோடு எதிர்பாருங்கள்.

# தமிழீழ காவல்துறை

# பதவி வெற்றிடங்கள்

**01.உபபரிசோதகர்** :- க.பொ.த(உயர்தரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
வயதெல்லை 18 – 25 வரை. உயரம் 5'ற்கு மேல்.
ஆண்/பெண் இருபாலாரும் வீண்ணப்பீக்கலாம்.

**02.காவல்துறை உறுப்பீனர்** :- க.பொ.த(சாதாரணம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
வயதெல்லை 18 – 25 வரை உயரம் 5'ற்கு மேல்.
ஆண்/பெண் இருபாலாரும் வீண்ணப்பீக்கலாம்.

**03.எழுதுவீனைஞர்** :- க.பொ.த(சாதாரணம்) சித்தியுடன் 05பாடங்களில் தமிழ் மொழி உட்பட திறமைச் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
அல்லது
க.பொ.த.(உயர்தரம் ) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
ஆண்/பெண் இருபாலாரும் வீண்ணப்பீக்கலாம்.

**04. தட்டெழுத்து/ சுருக்கெழுத்தாளர்** :- க.பொ.த.(சாதாரணம்) சித்தியுடன் தட்டெழுத்து/ சுருக்கெழுத்தில்தகைமையுடன்,நிமிடத்திற்கு 15சொல் லுக்கு குறையாமல் தட்டெழுத்து செய்தல்வேண்டும்.

**05. அலுவலக உதவீயாளர்** :- க.பொ.த(சாதாரணம்) தமிழ் மொழி உட்பட06 பாடங்கள சித்தியடைந்திருத்தல்வேண்டும்
வயதெல்லை – 18 – 25 வரை
ஆண்/பெண் இருபாலாரும் வீண்ணப்பீக்கலாம்.

**06. கணனீ இயக்குனர்** :- க.பொ.த.(சாதாரணதரம்) சித்தியுடன் கணனிகற்கைநெறி பிரிவுகளில் அதிகூடிய பிரிவுகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

க.பொ.த.(சாதாரண தரம்) சித்தியுடன் நல்ல பேச்சுவன்மை இருத்தல் வேண்டும்.
வயதெல்லை 18 – 25 வரை
ஆண்/பெண் இருபாலாரும் வீண்ணப்பீக்கலாம்.

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தலில் நல்ல அனுபவம் இருத்தல் வேண்டும்.
இருபாலாலும் வீண்ணப்பீக்கலாம்.

இலகு/கனகரக வாகனம் செலுத்துவதற்குரிய அனுமதிப்பத்திரம இருத்தல் வேண்டும்.
சாரத்தியத்தில் நல்ல அனுபவம் இருத்தல் வேண்டும்
வயதெல்லை 20 – 30வரை.

மோட்டார் சைக்கிள் /டீசல் இயந்திரங்கள் திருத்துதலில் நல்ல அனுபவம் இருத்தல் வேண்டும்.

**மேற்படி பதவிகளுக்கு தெரிவு செய்யப்படுவோருக்கு உணவு, தங்குமிடம், மருத்துவவசதி, போக்குவரத்து வசதி மேலதிகமாக வழங்கப்படும்.**

## தமிழீழ காவல்துறை சிறப்புப் படையணி

## பதவி வெற்றிடங்கள்

**உறுப்பீனர்:-** நல்ல தேக ஆரோக்கிமுடையவராக இருத்தல் வேண்டும்.
வயதெல்லை 18-23 வரை
ஆண்.'.பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
**சம்பளம்-அடிப்படை 7,000/=**

**உணவு, தங்குமிடம், மருத்துவ வசதி,போக்குவரத்து வசதி,என்பள மேலதிகமாக விங்கப்படும்.**

**தகைமையுடையவர்கள் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ காலல்துறை நடுவப்பணியகத்திற்கு 09.03.2004முதல் 20.03.2004வரை நடைபெற உள்ள நேர்முக தேர்வுக்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.**

**பொறுப்பாளர்,
ஆளணிப்பிரிவு,
காவல்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்.**

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளைகளின் அந்தப் பெற்றோா களும் எமது தலைமைக்கு எதிராக ஒருநாளும் செயற்படமாட்டார்கள். அவர் அப்படி கருதுவாரானால் அவர் கற்பனையில் வாழவேண்டியதுதான்.

கருணா யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர்களைக்கூட வெளியேற்றியிருக்கிறார். இதனால் பாதிக்கப்படப்போவது மட்டக்களப்பு மாணவர்கள்தான். மட்டக்களப்பு மாணவர்களுடைய கல்விதான் இதனால் பாழடிக்கப்பட்டு இருக்கிறது.

மாவட்ட நன்மைக்காக கஸ்ரப்படுவதாகக்கூறும் இவர் மட்டக்களப்பு மாணவர்களுடைய கல்வியை சீரழிப்பது எந்தவகையில் நியாயம். இதனை மாணவர்களும் மக்களும் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை.

இன்னுமொருவகையில் தலைவரால் படைபலரீதியாக வழங் கப்பட்ட ஆயுத விபரங்களை ஊடகங்கள் மூலமாக பகிரங்கப்படுத் திவருகிறார். அத்தோடு போராளி களின் தொகையையும் புள்ளிவிபரங் களில் வெளியிட்டுவருகிறார். இதன்மூலம் கருணா எதிரிகளுக்கு தகவல்களை வழங்கிவருகிறார். ஒரு சிறந்த இராணுவத்தளபதி இத்தகைய தகவல்களை வெளியிடமாட்டார். இதன்மூலம் அவர் எமது இனத் தையே காட்டிக்கொடுக்கிறார்.

இந்தவிடயம் தொடர்பாக தலைவர் கதைக்கும்போது அவரின் ஒரு உணர்ச்சிவசப்பட்ட ஒரு துரோகத் தனத்தைத்தான் பார்ப்பதாகக் கூறினார்.

கருணாவால் முன்வைக்கப் பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளும் நிபந்தனைகளும் வைக்கப்பட்டிருக் கும் காலப்பகுதியே இங்கு முக்கியம் தருகிறது. கருணா எத்தனை தடவைகள் தலைவரைச் சந்தித்திருக் கிறார். அத்தோடு அவர் ஒரு தலை வரின் நம்பிக்கைக்குரிய வராகவும் அதேநேரத்தில் மத்தியகுழு உறுப் பினராகவும் கருதப்பட்டவர். அப்படி அவர் இருக்கும்போது தலைவரோடு எதையும் பேசக்கூடிய சந்தர்ப்பங்கள் இருந்தபோதிலும் அப்போதெல்லாம் பேசாது கருணா இப்போது மட்டும் பேசுகிறார் என்றால் அவரது உண்மையான சுயநலம் வெளிப்படு வது அப்பட்டமாகத் தெரிகிறது.

இந்தக் கருணாவை நம்பித் தான் தலைவர் அவர்கள் இந்த ஜெயசிக்குறு சண்டையையே ஒப்படைத்திருந்தார். அப்படிப்பட்ட தலைவர் கருணாவின் கோரிக்கை களுக்கு செவிசாய்க்காமலா இருந்திருப்பார்.

கருணாவின் தற்போதைய இந்த நிலைப்பாடுகள் எவையும் கருணாவின் சுயமுயற்சியின் அடிப்படையில் எடுக்கப்பட்டது அல்ல. அவரின் பின்னால் இருக்கும் புறசக்தியின் தூண்டுதலினால் எடுக்கப்பட்ட முடிவேயாகும்.

கருணாவின் பொறுப்பு நீக்கம் செய்யப்பட்டிருப்பதால் அவர் ஒரு சாதாரண மனிதர் ஆகிவிட்டார். ஆனால் அங்குள்ள போராளிகள் எங் களுடைய போராளிகள். அதை அங் குள்ள போராளிகள் உணர்ந்து கொள்வார்கள்.

எங்களுடைய தளபதிகள் அங்கு சென்றவுடன் நிலைமை தலைகீழாக மாறிவிடும்.

அத்தோடு அங்குள்ள போராளிகளின் உள்ளக்குமுறல் களும் அழுத்தங்களும் வெடிக்கிற போது அங்குள்ள போராளிகளாலேயே கருணா ஆபத்தை எதிர்நோக்கலாம்.

இறுதியாக நாம் அவரிடம் தேர்தல் தொடர்பாகக்கேட்டபோது முக்கியமாக வீடு சின்னத்துக்கே வாக்களிக்குமாறு கேட்டிருந்தோம். இதனை அங்குள்ள மக்கள் செய்வார் கள் என்றே நம்புகின்றேன்.

கருணாவின் பின்புலமாக இருக்கும் சக்திகளும் சிறிலங்கா அரசும் இந்தத்தேர்தலை எப்படியாவது குழப்பிவிடவேண்டும் என்பதற்காக பலகாரியங்களை செய்யலாம் என நாம் கருதுகிறோம். ஆனால் இந்த முயற்சியை முறியடிப்பதோடு கிழக்கு மக்கள் விரைவில் கருணாவுக்கும் கருணாவின் பின்புலத்தில் இருக்கும் சக்திக்கும் நல்லதொரு பாடம் புகட்டுவார்கள்.









## படத்திற்கு மெருகூட்டுங்கள்–59



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள் –59**

–
..............................................................
..............................................................
..............................................................
..............................................................

பெயர் : ..............................................
முகவரி : ..............................................
..............................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –58



சி.வசந்தி,
ஈசுவரன் கோவிலடி,
புத்தூர்க்கிழக்கு,யாழ்ப்பாணம்.

### பரிசுக்குரிய வரிகள்

பாதை திறப்புடன் கனவுகள் சுமந்து
வாங்கிய சுமையுந்து- நிறை
போதையுண்டு ஓட்டியதால் இங்கே
பாதி வழியில் மோதுண்டு...

### பாராட்டுக்குரிய வரிகள்

எமன் ஏறிவந்தானோ எவனேறி வந்தானோ
எம்மவர் உயிர் மட்டும் பறிபோகுதே A-9 வீதியில்
வேக அளுத்தியின் பரீட்சைக் களமாக
பாவி மக்கள் பலிதான் தீருமோ.

இ.தனு
138 ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி

பொதிகொண்டு விரையயும உன தீரம - எம்மை
சதிசெய்து உயிர்குடித்த உன் முகத்தின் கோலம்!
வீதிதனில் வீச்சுடனே என்றும் தான் உன் நாட்டம் வீர-
மதி கெட்டுப் போய் வாழ்விழந்து ஏனின்று இப்படி முடக்கம்?

ம.அருள்யோண்சன்,
விசுவமடு.

வாகனங்களை இயக்க இலக்கணமுண்டு
வீதிப்பயணத்திற்கும் சட்டங்களுண்டு
இத்தனையும் மறந்து மதுவுக்குஅடிமையாகி மனிதம் மறந்து
மரணத்தின் வாசல் நோக்கி கடுகியதனால் தானெ இந்த நிலை

செ.நேசன
கணேசபுரம்

சிறகடித்துப் பறக்கும் உன்னை
வலைபோட்டுப் பிடிக்க காலன்
இந்துபுர வீதியிலே
இடம்பித்துக்கொண்டதேனோ.

ஜே.ஜெயராஜினி,
புளியங்குளம்.

அனுதாபத்திற்குரிய காட்சியா-இல்லை
அவதானமின்மைக்குச் சாட்சியமா?
உருக்குலைந்த ஊர்தி இங்கே:
உயிர் பிரிந்த உடல்கள் எங்கே?

ச.சந்திரன
விசுவமடு.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.

அவநம்பிக்கையை விடத் தனிமையான தனிமை வேறெது உண்டு? – ஜார்ஜ் ஈலியட்.

வன்னி மண்ணில்...

# அழகன் பதிப்பகம்

யாழ்சாலை, கிளிநொச்சி.

உங்கள்
அச்சு வேலைகள்
எதுவாகினும்
நிறைவேற்ற
அழைக்கின்றது.















இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.